
தர்மசக்கரம்



ரக்தாக்ஷி ௵ மார்கழி ௴ சக்கரம் 33 ஆரம் 12

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

பொருளாதார துறையில் எந்நிலையில் உள்ளவர்களுக்கும் தர்ம சக்கரம் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் சகாய சந்தா, சாதாரண சந்தா, டிபாசிட் சந்தா, சர்க்கார் நூல் நிலையங்களுக்கு இலவசமாக அனுப்புதல் ஆகிய முறைகளை நடைமுறையில் வைத்துள்ளோம்.

இன்றைக்குச் சமுதாயத்தில் மக்களுக்கு மனதைத் திருத்தி அமைக்கும் கருத்துக்கள் வழங்கப்படுவது அவசியமாகிறது. மக்கள் மனதிலுள்ள நல்லுணர்வுகளைத் தூண்டி விடவும், மக்களைப் பக்தி வழியில் நடாத்திச் செல்வதற்கும் தர்ம சக்கரம் மக்களில் பல பேருக்குக் கிடைக்க வேண்டும் என்று கருதுகிறோம். தர்ம சக்கர சந்தாதாரர்களின் எண்ணிக்கை அதிகமாகின்றவளவும், தர்ம சக்கரத்தைப் படிக்கின்றவர்களுடைய தொகை அதிகரிக்கின்றவளவும் மக்கள் மனதில் நல்ல திருப்பம் உண்டாகும்.

தர்மசக்கரம் சந்தாதாரர்கள் புதிய சந்தாதாரர்களைச் சேர்ப்பதற்கும், ஆண்டுச் சந்தா முடிவுறும் சந்தாதாரர்களை மீண்டும் புதுப்பிப்பதற்கும் முயல்வார்களானால் அது ஒரு சிறந்த ஞான யக்ஞ கைங்கர்யமாகும். புதிய சந்தாதாரர்களை அறிமுகப் படுத்தி அவர்களையும் சந்தாதாரர்களாகப் பதிவு செய்து கொண்டால் தொடர்ந்து இதழ்களைப் பெற வசதியாக இருக்கும்.

தர்மசக்கரம் சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் குறைந்த பக்ஷம் மூன்று புதிய சந்தாதாரர்களையாவது தர்ம சக்கரத்துக்குச் சேர்த்துத் தருவது என்று உறுதி செய்து கொண்டு செயல்படுவார்களானால் தர்ம சக்கர சந்தாதாரர்களின் எண்ணிக்கை மிகச் சுலபமாக உயர்ந்துவிடும். எவ்வளவுக்கெவ்வளவு புதிய சந்தாதாரர்களைச் சேர்க்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு ஆன்மிகத் துறையில் நீங்கள் நற்பணி செய்தவர்களாகிறீர்கள். சந்தாதாரர்களின் விலாசங்களை எழுதி சந்தா தொகையையும் அனுப்பிவைத்தால் அவர்களைச் சந்தாதாரர்களாகப் பதிவு செய்துகொண்டு மாதா மாதம் முறையாக அவர்களுக்குத் தர்ம சக்கரம் அனுப்பி வைக்கப்படும். வருகிற தை மாதத்திற்குள் தர்ம சக்கரம் சந்தா சேர்க்கும் பணியில் அதிக ஊக்கம் காட்டுமாறு சந்தாதாரர்கள் வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.

தர்ம சக்கரத்தில் வரும் விஷயங்கள் நிரந்தரமான தத்துவ ஆராய்ச்சிகளாக இருக்கின்றன. எப்பொழுது வேண்டுமென்றாலும் திரும்பவும் வாசிக்கக்கூடிய ஒரு நூலாக இது அமைந்துள்ளது. ஆகவே சந்தாதாரர்கள் தை இதழ் முதல் மார்கழி முடிய ஓர் ஆண்டின் பன்னிரண்டு தர்ம சக்கரம் இதழ்களையும் பொருளடக்கத்துடன் பைண்டு செய்து வைத்துக்கொண்டால் அது நல்லதொரு புத்தகமாக அமையும். நாம் படிப்பதற்கும், மற்றவர்களுக்குப் படிக்கத் தருவதற்கும் பைண்டு செய்த நூல் நன்கு பயன்படும். விரைவில் உங்கள் புதிய சந்தாதாரர்களை அறிமுகப்படுத்தக் கோருகின்றோம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115
திருச்சி ஜில்லா

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

Acc. No. 38682.

சக்கரம் 33	ரக்தாக்ஷி ஹு மார்கழி மீ	ஆரம் 12

பொருளடக்கம்

பக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. 150 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும்வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகைவேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூற்றைம்பதை யும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 15 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பதினைந்து செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் பத்து அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவிநிதி' யினின்று ஈடு செய்துகொள்கிறோம். தெய்விக விஷயமாதலால் ரூ. 15 செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்தவேண்டாம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் உள்ள அரசாங்கப் பொது நூலகங்கள் அனைத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர்களின் உதவியால் தொடர்ந்து அனுப்பப்பெறு கிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-50 வெளிநாடு தனி இதழ் ரூ. 4-00

உள்நாடு வருட சந்தா: ரூ. 15-00 வெளிநாடு வருட சந்தா: ரூ. 45-00

அந்தர்யோக விவரங்கள்

திருநெல்வேலி ஜில்லா—சேரன்மகாதேவியில் 23—12—84 ஞாயிறு

இடம்: பாரத்வாஜ ஆச்ரமம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

உணவு வசதி: பகல் உணவிற்கு ரூ. 2-00 மாலைச் சிற்றுண்டிக்கு ரூ. 1-00 நேரில் செலுத்தவும்.

கோவை ஜில்லா—குமரன்குன்று ஆலயத்தில் 23—12—84 ஞாயிறு

இடம்: அருள்மிகு ஸ்ரீ கல்யாண சுப்ரமணிய சுவாமி ஆலயம்

நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

ஸ்ரீ காமராஜ் மாவட்டம்—விருதுநகரில் 30—12—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சமரச சன்மார்க்க சங்கம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-15 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

உணவு வசதி: பகல் உணவுக்கு ரூ. 3-00 செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

மதுரை மாவட்டம்—பெரியகுளத்தில் 30—12—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பிரம்ம ஞான மந்திரம் பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

உணவு வசதி: பகல் உணவுக்கு அவரவர்களே ஏற்பாடு செய்துகொள்ளவும்.

திருநெல்வேலி ஜில்லா—முக்காணியில் 30—12—84 ஞாயிறு

இடம்: யூனியன் ஆரம்பப்பள்ளி

நேரம்: காலை 1-00 மணிமுதல் மாலை 4-00 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

மதுரை ஜில்லா—திருவேடகத்தில் 6—1—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீவிவேகானந்த கல்லூரி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

உணவு வசதி: நேரில் பகல் உணவிற்கு ரூ. 2-00; மாலைச் சிற்றுண்டிக்கு ரூ. 1-00 செலுத்திச் சீட்டுப்பெற்றுக் கொள்ளலாம்.

கோவை ஜில்லா—பொள்ளாச்சியில் 11—1—85 வெள்ளிக்கிழமை

இடம்: மகாத்மா காந்தி கல்யாண மண்டபம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கும், மாலைச் சிற்றுண்டிக்கும் ரூ. 2-50 செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

பொள்ளாச்சி தாலூகா கோட்டூர்-மலையாண்டி பட்டணத்தில் 11—1—85 வெள்ளிக்கிழமை

இடம்: மாஹாளியம்மன் கோயில் கல்யாண மண்டபம்

நேரம்: இரவு 7-00 மணிமுதல் 9-00 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

தர்ம சக்கரம்

சக்கரம் 33 ருத்ரோத்காரி ௵ தை-ரக்தாக்ஷி ௵ மார்கழி

1984

प्रज्ञानं ब्रह्म

எழுமின் விழிமின் செந்நெறி சார்மின்

ஆசிரியர்
சுவாமி நித்தியானந்தர்

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை—639 115 திருச்சி ஜில்லா

பொருளடக்கம்

ज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 33	ரக்தாக்ஷி ஹூ மார்கழி மீ	ஆரம் 12

பிரார்த்தனை

शब्दं गृह्णास्यश्रुतिस्त्वं हि जिघ्रे ऽघ्राणस्त्वं ऽव्यंघ्रिरायासि दूरान् ।
ऽव्यक्षः पश्येस्त्वं रसज्ञोऽप्यजिह्वः कस्त्वां सम्यग्वेत्त्यतस्त्वां प्रपद्ये ॥ — ब्रह्म वैवर्त पुराणम्

சப்தம் க்ருஹ்ணாஸ்ய ஸ்ருதிஸ்த்வம் ஹி ஜிக்ரே ।
ரக்ராணஸ்த்வம் வ்யம்க்ரி ராயாஸி தூரான்
வ்யக்ஷ: பச்யேஸ்த்வம் ரஸக்ஞோऽப்யஜிஹ்வ:
கஸ்த்வாம் ஸம்யக்வேத்ய தஸ்த்வாம் ப்ரபத்யே ॥

— பிரம்ம வைவர்த்த புராணம்.

காதின்றிக் கேட்கிறாய். மூக்கின்றி வாசனையை நுகர்கின்றாய். காலின்றி எங்கெங்கோ அலைகின்றாய். கண்ணின்றிக் காணுகின்றாய். நாவின்றி சுவைக்கின்றாய். உன்னை முழுமையும் உணருபவர் யார்? ஆகவே உன்னைச் சரணடைகிறேன்.

ஊனிடைச் சுவர் வைத்(து) என்பு தூண் நாட்டி
உரோமம் வேய்ந்(து) ஒன்பது வாசல்
தானுடைக் குரம்பை பிரியும்போது (உ)ன்தன்
சரணமே சரணம் என்றிருந்தேன்
தேனுடைக் கமலத் திருவினுக்(கு) அரசே!
திரைகொள்மா நெடுங்கடல் கிடந்தாய்
நானுடைத் தவத்தால் திருவடி அடைந்தேன்
நைமிசா ரணியத்துள் எந்தாய்! — திருமங்கையாழ்வார்.

அருள் விருந்து

தீமையின் விளைவு துன்பம்.

மனது யாண்டும் அருளைச் சார்ந்திருப்பது ஆகுக.

நல் வழியினின்று பிசகுபவன் நலன் எதையும் சாதிக்க மாட்டான்.

ஆசைக்கு அடிமைப்படுகிற உள்ளத்தினின்று ஆனந்தம் பறந்தோடுகிறது.

கஷ்டத்தில் இருப்பவரைக் கைதூக்கிவிட யாண்டும் முயன்று வருவாயாக.

சுயநலத்தினால் தூண்டப்பெற்றுச் செய்யும் வினை கேடாக வந்து முடியும்.

தன்னை வந்து சாரும் தீங்கைச் சகித்துக்கொள்பவன் மேன்மையுறுகிறான்.

இறைவா, உன்னைச் சார்ந்திருப்பவனுக்கு வெற்றியும் தோல்வியும் ஒன்றேயாம்.

சகிப்பு ஞான ஒளியை நல்குகிறது; வெறியோ மனிதனை மயக்கத்தில் ஆழ்த்துகிறது.

தனக்கென வாழ்பவன் தாழ்வுறுகிறான். மன்னுயிர்க்காக வாழ்பவன் மேன்மையுறுகிறான்.

சமுதாய வாழ்க்கையில் தலையிடாது அதனுடைய முன்னேற்றத்துக்கு உதவிபுரியும் அரசாங்கம் தலைசிறந்ததாம்.

உள்ளத்திலிருந்து எழும் உணர்ச்சி இறைவனிடம் ஒப்படைக்கப்படுகிற பொழுது அது நல்ல பிரார்த்தனையாகிறது.

தன் கருமத்தில் கண்ணும் கருத்துமாயிருப்பவன் அமைதியுறுகிறான். பிறர் கருமத்தில் தலையிடுபவன் துயரத்திற்கு ஆளாகிறான்.

உண்ணாவிரதம் இருப்பது ஒப்பற்ற மருந்தாம். உள்ளத்திலும் உடலிலும் உள்ள கேடுகளை அது அறவே அகற்றுகிறது.

பண உதவியைப் பெற்றுக்கொண்டு செய்கிற பிறநல சேவை மேன்மையுறாது. உள்ளன்பையும் இறைவனுடைய அருளையும் சார்ந்துள்ள சேவை மேன்மையுறுவது திண்ணம்.

ஒவ்வொரு மதத்திலும் ஏதேனும் ஒரு குறையிருக்கும். அக்குறையைப் பொருள்படுத்தாதே. ஆங்குள்ள நலனையே உனக்குச் சொந்தமாக்கிக் கொள்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர் காப்டன் விசுவநாதருடன் தொடர்ந்து உரையாடிக்கொண்டிருக்கிறார்.

பரமஹம்சதேவர்: "விசுவநாதன் நல்லியல்புகளும் நல்ல குணங்கள் பலவும் அமையப்பெற்றவராக இருக்கிறார். நாள்தோறும் அவர் செய்து முடிக்கவேண்டிய வந்தனை, வழிபாடுகளை ஒழுங்காகச் செய்து வருகிறார். அவருடைய குல தெய்வமாகிய சிவனுருடைய வழிபாட்டை அவரே செய்து முடிக்கிறார். சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்கின்றபொழுது அவர் ஓதுகின்ற ஸ்தோத்திரங்கள் எண்ணிக்கையில் அடங்காதவைகளாம். வழிபாட்டுக்குரிய கிரியைகளை முறையாகச் செய்து முடிப்பதில் அவர் யாண்டும் கண்ணும் கருத்துமாயிருக்கிறார். நித்திய வழிபாட்டைப் பக்தி சிரத்தையுடன் அவர் செய்து வருகிறார். சிவலிங்கத்தை நீராட்டுதல், ஜபம், தீபாராதனை, வேத மந்திரங்களை ஓதுதல், தோத்திரங்கள் பாடுதல் ஆகியவைகளை அவர் ஊக்கத்துடன் செய்து முடிக்கிறார்."

"மிகைபட நூல்களை வாசிப்பதால் தாம் ஒரு போக்கில் ஏட்டுக்கல்வி மயமாய் இருக்கின்றீர். ஆகையினால் மிகைபட நூல்கள் படிப்பதில் கருத்தைச் செலுத்தவேண்டாம்" என்று நான் அவருக்கு எச்சரிக்கை செய்திருக்கிறேன்.

"நான் அடைந்துள்ள ஆத்ம பரிபாகத்தைக் குறித்துக் காப்டன் விசுவநாதன் இங்ஙனம் இயம்புகின்றார்: "தாங்கள் அடைந்துள்ள பரிபாகத்தை இங்ஙனம் இயம்பலாம். பறவை ஒன்று எந்த க்ஷணத்தில் வேண்டுமென்றாலும் பறந்து மேலே போகிறது. பரமாத்மன், ஜீவாத்மன் என சொரூபங்கள் இரண்டு உள. அவைகளுள் முன்னது சிதாகாசம் போன்றது. பின்னது உடல் தாங்கியிருக்கிறது. தங்களிடம் உள்ள ஜீவாத்மன் வேண்டும்பொழுதெல்லாம் பறந்துபோய் சிதாகாசத்தில் கலந்து இன்புற்றிருக்கிறது. தாங்கள் பூணும் சமாதி நிலை அத்தகையதாம்."

பரமஹம்சர் (புன்னகையுடன்) பகர்ந்ததாவது: "உங்களின் குறைபாட்டைக் குறித்துக் காப்டன் விசுவநாதன் இங்ஙனம் இயம்பினார்: 'வங்காளிகள் மடையர்கள். அவர்களுக்கிடையில் தோன்றி வந்துள்ள மாணிக்கத்தின் மகிமையை அவர்கள் அறிந்திலர்.'

"விசுவநாதரின் தந்தையார் ஒரு பரம பக்தராக இருந்தார். ஆங்கிலேயர்களின் சேனையில் அவர் சுபேதார் பட்டம் வகித்து வந்தார். போர்க் காலத்திலும் குறிப்பிட்ட வேளைகளில் முறை பிறழாது அவர் கடவுள் வழிபாடு செய்து வந்தார். ஒரு கரத்தில் அவர் சிவலிங்கத்தையும், மற்றொரு கரத்தில் அவர் துப்பாக்கியையும் வாளையும் ஏந்தியிருந்தார்.

"மற்று, விசுவநாதர் அல்லும் பகலும் உலக வியவகாரங்களிலேயே ஈடுபட்டிருக்கிறார். எப்பொழுதெல்லாம் அவருடைய இல்லத்துக்கு நான் போகின்றேனே, அப்பொழுதெல்லாம் அவர் மனைவி மக்களுடன் கூடியிருக்கும் காட்சியை எனக்குக் கொடுக்கின்றார். அது மட்டுமன்று; அவருடைய சிப்பந்திகள் இடையிடையே வந்து தங்கள் கணக்குப் புஸ்தகங்களைக் காட்டுவதும், அவைகளில் குறித்து வைத்துள்ள விஷயங்களைப் பற்றிப் பேசுவதுமாக இருக்கின்றனர். சூழ்நிலை இங்ஙனம் பிரதிகூலமாய் இருப்பதற்கிடையில் அவருடைய மனது மட்டும் இடையிடையே பகவத் சிந்தனையில் ஈடுபடுகிறது. அவருடைய நிலைமையைத் தாக ஜுரத்தில் வருந்தும் ஒருவனுடைய பாங்கோடு ஒப்பிடலாம். அத்தகைய நோயாளி சர்வகாலமும் தன் சுய உணர்ச்சியை இழந்தவனாக இருக்கிறான். இடையிடையே அவனுக்குச் சுய உணர்வு தாற்காலிகமாக வந்தமைகிறது. அவ்வேளைகளில் அவன் 'நான் தண்ணீர் அருந்துவேன், தண்ணீர் அருந்துவேன்' என்று கூப்பாடு போடுகிறான். அவனுடைய விருப்பத்திற்கிணங்கி மற்றவர்கள் அவனுக்குக் கொஞ்சம் ஜலம் தருகிறார்கள். ஆனால் அதைப் பெறுவதற்கு முன்பே அவன் பழையபடி சுய உணர்வை இழந்தவனாகிறான். அந்தத் தளபதியிடம் நான் இயம்பியதாவது: 'தாம் மிகைபட கிரியா விசேஷங்களில் ஈடுபட்

டுள்ளீர்கள், அதைக் கேட்டதும் அவர் 'ஆம்! விசேஷமாகப் பூஜைகள் பண்ணுதலில் நான் ஆனந்தம் மிகக் கொள்ளுகிறேன். உலகத்தவர்கள் வேறு என்னதான் செய்ய முடியும்?' என்று கூறினர்.

பின்பு நான் அவருக்கு இயம்பியதாவது: " ஆத்மசாதகன் ஒருவன் காலமெல்லாம் கிரியைகளிலேயே மூழ்கியிருப்பது பொருந்துமா? தேன் ஈ புஷ்பத்துக்குப் பக்கத்தில் வருகிறது. அதைச் சுற்றிச் சுற்றி ரீங்காரமிடுகிறது. அப்படி ரீங்காரம் பண்ணுவது எவ்வளவு நேரம்? புஷ்பத்தின் மீது அமர்ந்ததும் ரீங்காரம் பண்ணுவதை அது நிறுத்தி விடுகிறது. தேன் அருந்த ஆரம்பித்ததும் அது பண்ணுகிற ஓசையனைத்தும் நின்று விடுகிறது.' நான் இங்ஙனம் பகர்ந்ததும் தளபதி அதற்குக் கொடுத்த விடையாவது: "தாங்கள் புரிந்து வந்த கிரியைகள் அனைத்தையும் இப்பொழுது ஒதுக்கி வைத்து விட்டீர்கள். தாங்கள் செய்தது போன்று என் போன்ற ஒருவன் செய்வது சாத்தியமா?

"இந்தத் தளபதியைப்பற்றிய மற்றொரு விஷயம். அவர் யாண்டும் ஒரே பாங்கில் பேசுவது இல்லை. ஒருவேளை 'தென்படுகிற யாவும் ஜடப் பொருள்' என்கிறார் அவர். மற்றொரு வேளையில் இவையாவும் சேதனம் அல்லது அறிவுப் பொருள் என்கின்றார். அதற்கு நான் கொடுத்த விடையாவது: "ஜடம் என்று ஏன் பகரவேண்டும்? அனைத்தும் உண்மையில் சின்மயமாக இயங்கிக்கொண்டிருக்கின்றன."

இப்பொழுது பரமஹம்சதேவர் பூர்ணனுடைய க்ஷேம சமாச்சாரத்தைப்பற்றி மகேந்திரரிடம் கேட்டார்.

பரமஹம்சதேவர்: "நான் பூர்ணனை ஒரு தடவையாவது சந்திப்பேனாகில் அவனைக் குறித்து நான் மனதில் கொண்டுள்ள ஏக்கம் ஒருவாறு தணியும்.

"அவன் நுண்ணறிவு படைத்தவன். என்னிடத்து அவன் அபிமானம் மிகப்பூண்டிருக்கிறான். அவன் என்னிடம் இயம்பியதாவது: "நான் தங்களுடன் கூடியிருக்கிறபொழுது உள்ளத்தினுள்ளே ஓர் அலாதியான இன்பம் ஊற்றெடுக்கிறது." அப்பூர்ணனை உன் பள்ளியினின்று அவனுடைய பெற்றோர்கள் பிரித்தெடுத்துக்கொண்டனர். அதனால் உனக்கு ஏதாவது இடைஞ்சல் உண்டாகக் கூடுமா?"

மகேந்திரர் கொடுத்த விடையாவது: "ஈஸ்வர சந்திர வித்யாசாகர் என்னிடம் பூர்ணனை நம் பள்ளியினின்று பெற்றோர்கள் பிரித்தெடுத்ததற்குக் காரணம் நான் தான் என்று குற்றம் சாட்டுவாராகில், அதற்குப் பொருத்தமான விடையை இயம்புவதற்கு நானும் ஆயத்தமாயிருக்கிறேன்."

பரமஹம்ச தேவர்: " நீ என்ன பகர்வாய்?"

மகேந்திரர்: "நல்லார் இணக்கம் பூணுகிற பொழுது ஒருவனுக்குக் கடவுளைப் பற்றிய சிந்தனை தானாகவே உள்ளத்தினுள்ளே உருவெடுக்கிறது. அங்ஙனம் கடவுள் சிந்தனை உள்ளத்தில் உதயமாவது பாராட்டத்தக்க பெருநிலையாம். மேலும் நான் இயம்ப விரும்புவதாவது: "எங்கள் பள்ளி நிர்வாகிகள் பொருத்தமான பாடப் புஸ்தகத்தை மாணக்கர்களுடைய நலனுக்காகவென்று அமைத்து வைத்திருக்கிறார்கள். அங்ஙனம் வைத்துள்ள புஸ்தகத்தில் ஒருவன் முழுமனதோடு கடவுளை நேசிப்பானாகில் அதனால் அவனுக்கு நலன்கள் அனைத்தும் தாமாகவே வந்தமைகின்றன." (இதைக் கேட்டதும் பரமஹம்ச தேவர் கொல்லென்று சிரித்தார்.)

"தளபதி விஸ்வநாதர் வீட்டில் இருந்த பொழுது இளைய நரேந்திரன் அங்கு வந்து என்னைச் சந்தித்தான். என்னை அறியாது அவனிடத்து அபிமானம் என் உள்ளத்தில் உருவெடுத்தது. அதன் விளைவாக நான் அவனிடத்தில் இயம்பியதாவது: "உன் வீடு எங்கே இருக்கிறது? நான் ஒரு தடவை வந்து அதைக் காண விரும்புகிறேன்." அதற்கு அவன் கொடுத்த விடையாவது: "தயவு செய்து வாருங்கள்." ஆனால் சிறிது நேரத்திற்குள் இந்த நிகழ்ச்சியைக் குறித்து அவன் ஒருவாறு மனக்கிலேசம் அடையலானான். ஏனென்றால் அவனுக்கும் எனக்குமுள்ள தொடர்பை அவன் தந்தை அறிய வருவாரானால் அதைக்குறித்து அவர் ஆட்சேபம் மிகக் கொள்வார்." (இதைக் கேட்டு எல்லாரும் நகைத்தார்கள்.)

ஆங்கு வந்திருந்த அன்பர் ஒருவரிடம் பரமஹம்சர் பகர்ந்ததாவது: " நீ இங்கு வந்து நெடுநாள் ஆய்விட்டது. ஒரு வேளை ஏழு அல்லது எட்டு மாதமிருக்கலாம்."

அன்பர் : "ஆம் ஐயனே. நான் தங்களைக் காண வந்து சுமார் வருஷம் ஒன்று ஆகிறது."

பரமஹம்சதேவர் : "உன்னேடு மற்றெரு பக்தன் வந்து கொண்டிருந்தானே. அவன் விஷயம் என்னவாயிற்று?"

அன்பர் : "ஆம் ஐயனே; அவர் பெயர் நீல மணி பாபு."

பரமஹம்சதேவர் : "ஏன் அவன் இங்கு வருவதை நிறுத்திவிட்டான்? வசதிப்படும் பொழுது இங்கு வரும்படி நீ அவனை வேண்டிக் கொள்வாயாக. உன்னேடு வந்துள்ள இச் சிறுவன் யார்?"

அன்பர் : "இவ்விளைஞன் அஸ்ஸாம் மாகாணத்திலிருந்து வந்துள்ளான்."

பரமஹம்சதேவர் : "அம்மாகாணம் எங்கு உள்ளது? எந்தத் திசையில் அது இருக்கிறது?"

துவிஜன் என்னும் நாமம் படைத்துள்ள பக்தன் பகர்ந்ததாவது : "ஐயனே! அக்ஷய என்னும் இளைஞனைப்பற்றிய சமாச்சாரம் ஒன்றைத் தங்களிடம் தெரிவிக்க விரும்புகிறேன். அவனுடைய தந்தை அவனுக்கு மணம் முடித்து வைக்க ஏற்பாடு செய்துள்ளார். ஆனல் அந்த அக்ஷயவோ இன்னும் அதற்குச் சம்மதம் தரவில்லை. மணம் புரிந்துகொள்ள அவனுக்கு இஷ்டம் இல்லை போன்று தோன்றுகிறது."

பரமஹம்சதேவர் : "அந்த இளைஞன் மணம் புரிந்து கொள்ள விரும்பவில்லை. ஆனல் அந்தப் பந்தபாசத்தை அவன் மீது திணிக்க அவனுடைய தந்தையார் முயன்றுவருகின்றார்."

பரமஹம்சதேவரோடு ஆங்குக் குழுமியிருந்த பக்தர் ஒருவரிடம் பரமஹம்சர் பகர்ந்ததாவது: "உன் தமையனிடம் நீ அன்புடனும் பணிவுடனும் நடந்துகொள்ள வேண்டும். தமையன் தந்தைக்குநிகர் என்பதை நீ மறந்துவிடாதே."

ஆங்குக் குழுமியிருந்தவர்களுள் பண்டிதர் ஒருவர் இருந்தார். அவர் பரத கண்டத்தின் வட பகுதியிலிருந்து வந்திருந்தார்.

பரமஹம்சதேவர் : (புன்னகை பூத்தவராக) மகேந்திரரிடம் இயம்பியதாவது : "இந்தப் பண்டிதர் பாகவதம் படிப்பதில் ஊக்கம் மிகப் படைத்தவர்."

இதைக் கேள்வியுற்ற மகேந்திரரும் ஏனைய அன்பர்களும் தங்களுடைய பார்வையை அப் பண்டிதர் மீது திருப்பினர்கள்.

பண்டிதரிடம் பரமஹம்சர் கேட்டதாவது : "ஐயனே! யோகமாயை என்ருல் என்ன?" இவ்வினைக்களுக்கு ஏற்ற விடையைப் பண்டிதரும் பகர்வாராயினர். "ஸ்ரீமதி ராதையை யோகமாயை என்று ஏன் இயம்பலாகாது?" என்று பரமஹம்சர் கேட்டார்.

பண்டிதரும் இவ்வினைவுக்கேற்ற விடையைத் தம் போக்கில் எடுத்துரைத்தார்.

பரமஹம்சர் : "ஸ்ரீமதி ராதை பிரேமை பக்தியே வடிவெடுத்தவள். யோக மாயையினிடம் மூன்று குணங்களும் ஒருங்கே அமைந்துள்ளன. மற்று ஸ்ரீமதி ராதையோ தூயசத்வ குணம் ஒன்றே வடிவெடுத்து இருந்தாள்."

மகேந்திரரிடம் பரமஹம்சதேவர் மேலும் பகர்ந்ததாவது : "நரேந்திரன் இப்பொழுது ஸ்ரீமதி ராதையின் மகிமைகளை ஒருவாறு அறிந்து வருகிருன். சச்சிதானந்தப் பொருளின் மீது பக்தி பண்ண ஒருவன் விரும்புவானகில் அச்சீரிய கோட்பாட்டை அவன் ஸ்ரீமதி ராதையிடமிருந்து கற்றுக்கொள்ள முடியும்.

"சச்சிதானந்தப் பொருள் பேரன்பை ரசிக்க விரும்பியது. அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு ஸ்ரீமதி ராதை அப்பொருளின் திருவருளைத் துணையாகக் கொண்டு வடிவெடுத்து வந்தாள். சச்சிதானந்தம் தானே ஸ்ரீகிருஷ்ணனுகை வடிவெடுக்கலாயிற்று. அக்கிருஷ்ணனிடமிருந்து ஸ்ரீமதி ராதை என்னும் மூர்த்தி வடிவெடுக்கலாயினள். சச்சிதானந்த சொருபமாகிய ஸ்ரீ கிருஷ்ணன் ஆதாரமாகிருன். ஆதேயமாகியவள் ஸ்ரீமதி ராதை. சுவாத்மா ராம: அல்லது தன் மகிமையைத் தானே ரசித்தல் என்னும் கோட்பாட்டை உலக மக்களுக்குப் புகட்டுதல் பொருட்டு இங்ஙனம் ஸ்ரீ கிருஷ்ணனும் ஸ்ரீமதி ராதையும் வடிவங்கள் தாங்கி மண்ணுலகுக்கு வந்தவர்களாவார்கள்."

ராதை பிறந்தபோது கண்களை மூடியிருந்தாள் என்று வைஷ்ண சாஸ்திரங்கள் கூறுகின்றன. யசோதை கிருஷ்ணனை இடுப்பில் ஏந்திக்கொண்டு ராதையைப் பார்க்க வந்த பொழுதுதான் அவள் கிருஷ்ணனைக் காண வேண்டிக் கண்களைத் திறந்தாள். குழந்தை கிருஷ்ணனும் அவளுடைய கண்களை விளையாட்டாகத் தொட்டான்.

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

12-6. மெய்த்தகுலம் கல்விபுலை வேஷம்எலாம் ஓடவிட்ட
சித்தர்ஒன்றும் சேராச் செயல்அறிவது எந்நாளோ.

பரம்பொருளிடத்து இரண்டு கூறுகள் உள. ஒன்று சகுண பிரம்மம்; மற்றது நிர்குண பிரம்மம். சகுண பிரம்மமோ கடலின் மேற்பகுதிக்கு நிகரானது. நிர்குண பிரம்மம் காட்சியில் இல்லாதும், அசையாதும் உள்ள கடலின் கீழ்ப் பகுதிக்கு நிகரானது. பரம்பொருளுக்குரிய விபூதிகளனைத்தும் சகுண பிரம்மத்தைச் சார்ந்தவைகள். நிர்க்குண பிரம்மத்தை எந்த உபாதியும் வந்து சாரமாட்டாது. ஆதலால் முடிந்த இலட்சியமாகிய நிர்குண வஸ்துவை அடைய முயன்ற சித்தர்கள் தாமே தம்மிடத்திருந்த உபாதிகளனைத்தையும் ஒதுக்கித் தள்ளினுர்கள். ஜீவாத்மன் ஒருவனைப் பிடித்துள்ள பந்தங்களுள் குலம் மிகவும் முக்கியமானது. 'நான் இன்ன இனத்தைச் சேர்ந்தவன், என்னுடைய குலம் கோத்திரம் இத்தகையவை' என்பது போன்ற உபாதிகளில் அவன் ஊறியிருக்கிருன். சுலபத்தில் அந்த எண்ணங்கள் அவனுடைய உள்ளத்திலிருந்து நீக்கப்படமாட்டா. கல்வி என்பது மற்ருெருவித உபாதி. நான் கற்றவன் என்னும் எண்ணம் மெய்ப்பொருளை அடைதற்கு இடைஞ்சலாக நிற்கிறது. 'கல்வி என்னும் பல் கடல் பிழைத்தும்' என்கிருர் மாணிக்க வாசகர். கிரந்தங்கள் அனைத்தும் கிரந்திகள் அல்லது முடிச்சுகள் என்கிருர் ராமகிருஷ்ண பரமஹம்சர். எனவே கல்வி என்னும் உபாதியினின்றும் ஆத்ம சாதகன் ஒருவன் தன்னை விடுவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளான்.

புலை என்பது 'நான் நல்ல உடல் படைத்தவன்' என்னும் தேகாபிமானமாம். பாண்டவர்கள் சொர்க்கத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தபொழுது நகுலன் வீழ்ந்து மடிந்து போனுன். அதற்குக் காரணம் கட்டழகே வடிவெடுத்திருந்த உடலின்மீது அவன் வைத்திருந்த அபிமானமாம்.

தனக்குப் புறம்பாயுள்ள ஆடை, ஆபரணங்களை எடுத்து அணிந்துகொண்டு அவைகளில் அபிமானம் வைப்பது இன்னெருவித பந்தமாகிறது. ஆத்ம சாதகன் ஒருவன் அதில் கட்டுண்டு போகலாகாது. இங்ஙனம் அக்ஞானத்தினுல் வருவித்துக்கொண்டுள்ள உபாதிகளனைத்தையும் ஒதுக்கித் தள்ளுவது நிர்குண வஸ்துவை அடைவதற்கு உற்ற இன்றியமையாத செயலாகும்.

12-7. குற்றச் சமயக் குறும்புஅடர்ந்து தற்போதம்
அற்றவர்கட்கு அற்றபொருட்கு அன்புவைப்[பது எந்நாளோ.

அறுதல்-சார்ந்திருத்தல்.

ஆத்ம சாதகன் ஒருவன் ஏதேனும் ஒரு சமயத்தைச் சார்ந்தவனுக இருக்கவேண்டும். ஏனென்ருல் மானுடன், எவரேனும் ஒரு தாய் தந்தைக்கு மகவாகப் பிறக்கின்ருன். அத்தகைய தாய் தந்தையரோடு இணங்கி வாழ்ந்திருப்பது அவனுடைய கடமையாகிறது. பெரியவனுன பிறகு அந்த இணக்கத்தைத் தாண்டி அவன் மேலே வந்தவனுகிருன். அதே விதத்தில் சாதகன் ஒருவன் ஏதேனும் ஒரு சமயத்தைச் சார்ந்தவனுக இருக்கிருன். மற்று, தன் ஆயுள் காலம் முழுதும் அந்தச் சமயத்தில் அவன் கட்டுண்டு இருக்கலாகாது. It is good to be born in a church but bad to die there. மானுடன் ஒருவன் ஏதேனும் சமயத்தைச் சார்ந்தவனுகத் தன்னுடைய வாழ்க்கையைத் துவக்கலாம். ஆனுல் சாகும் வரையில் அவன் அதிலேயே கட்டுண்டிருக்கலாகாது என்பது விவேகானந்த சுவாமிகளுடைய கோட்பாடு. ஆதலால் நான் இன்ன சமயத்தைச் சார்ந்தவன் என்னும் தளையினின்று தன்னை விடுவித்துக்கொள்ள ஆத்ம சாதகன் ஒருவன் கடமைப்பட்டிருக்கிருன். இங்ஙனம் அந்தக்கரண சுத்தியடைந்திருப்பது பரபோதத்தைப் பெறுவதற்கு உற்றஉபாயமாம். இந்தக் கண்ணியின் கோட்பாடு இதுவாம்.

12-8. தர்க்கமிட்டுப் பாழாம் சமயக் குதர்க்கம் [விட்டு
நிற்கும்அவர் கண்டவழி நேர்பெறுவது [எந்நாளோ

தர்க்கம்-நியாய சாஸ்திரம்.

குதர்க்கம்-குயுக்தி.

நேர் பெறுவது-அனுபூதியில் அறிவது.

சமய அனுஷ்டானத்தில் ஈடுபடுபவர்களுள் படித்தரங்கள் பல காண்கின்றோம். ஒரு சிலர்க்குச்சமய சம்பந்தமான நூல்களை வாசிப்பதும் அல்லது வாசிக்கக் கேட்பதும் சமய அனுஷ்டானமாகிறது. மற்றும் சிலர் தாங்கள் வாசித்துள்ள விஷயங்களைப் பிறருடன் ஆராய்ச்சி பண்ணுகிறார்கள். அப்படிச் செய்வது வெறுமனே நூல்படிப்பதைவிட மேலானது. மற்று ஆராய்ச்சியிலிருப்பவர்கள் தங்கள் அறிவுத் திறனை வெளிப்படுத்த முயலுகின்றனர். அதன் விளைவாகக் கல்விச் செருக்கு ஓங்குகிறதேயொழிய அதனால் மனத்தெளிவு உண்டாவதில்லை. உண்மையை நூல் ஆராய்ச்சியின் வாயிலாக உள்ளபடி அறிந்துகொள்ளுதல் வேண்டும் என்னும் அவா பாராட்டுதற்குரியதாம். அத்தகைய அவா படைத்திருக்கிறவர்கள் வீணாக விவாதங்கள் பண்ணமாட்டார்கள். அடக்க ஒடுக்கத்துடன் நூல் ஆராய்ச்சி பண்ணுவது சாலச் சிறந்தது. அதற்கு மாறாகத் தன் அறிவுத்திறனை விளம்பரப்படுத்த முயல்வது சாதனமாகாது. தீவிரமாகச் சாதனத்தில்ஈடுபடுபவர்களுடன் மட்டும் தன் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பது மேலானது. அதற்கு நேர்மாறாகப் பேசும் திறனைப் பெருக்கிக்கொண்டே போனால் அன்னவன் சாதனத்தில் முன்னேற்றமடைய மாட்டான்.

ஆராய்ச்சியில் மூன்று பகுதிகள் இருக்கின்றன. வாதம், ஜல்பம், விதண்டை என மூன்று முறைகளும் பெயர் பெறுகின்றன. முறையாக வாதம் பண்ணுவது நேர்மார்க்கமாகிறது. உண்மையை அறிந்து கொள்வது ஒன்றே அதன் நோக்கமாகிறது. உண்மையை ஆராய்ந்து அறிவதால் மனத்தெளிவு உண்டாகிறது. உண்மை ஆராய்ச்சியில் பெரியோர் சிறியோர் என்னும் பாகுபாடு இல்லை. வயதில் பெரியவர்களாயிருப்பவர்களை விடச் சிறியவர்களிடத்துச் சில வேளைகளில் மனத்தெளிவு நன்கு அமைந்திருக்கலாம். ஆதலால் உண்மைக்குப் பிறப்பிடம் யாது என்பதை ஒதுக்கி வைத்து விட்டு அது எங்கிருந்து வந்தாலும் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளுதலே மனத்தெளிவடைவதற்கு உற்ற உபாயமாம். அத்தகைய பான்மை படைத்திருப்பவர்கள் பாக்கியவான்களாம். ஆத்ம சாதகன் ஒருவன் அத்தகைய நல்ல மனப்பான்மை தனக்கு வந்து அமைய வேண்டும் என்று இறைவனிடம் பிரார்த்திக்க வேண்டும். தூயதும் தெளிந்ததுமான மனப்பான்மை படைத்திருப்பவர்களுக்கு ஈசனுடைய அருள் எளிதில் வந்து அமைகிறது. முறையாக வாதம் பண்ணி உண்மையை அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

அதற்கு நேர்மாறாக ஜல்பம் என்பது வீண் விவாதமாம். அங்ஙனம் விவாதிப்பவர்களுக்கு உண்மையை அறிந்துகொள்ள நாட்டமில்லை. பிறர் பேச்சிலுள்ள சொல் குற்றம், பொருள் குற்றம் ஆகியவைகளை வளர்த்துக்கொண்டே போவது அவர்களுடைய நோக்கமாகிறது. இத்தகைய மனப்பான்மை படைத்திருப்பவர்கள் நலன் ஏதும் அடையமாட்டார்கள். பொருளற்ற வீண் பேச்சிலேயே அவர்கள் பொழுது போக்கிக் கொண்டிருப்பார்கள். அப்பேச்சு சமய சம்பந்தமானதாயிருந்தாலும் அது பாராட்டுதற்குரியதாகாது. இதற்குச் சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். சிவன் பெரியவனா, அல்லது விஷ்ணு பெரியவனா என்பதைப் பற்றி வீண் விவாதம் பண்ணுகிறவர்களுக்கும் ஆத்ம சாதனத்துக்கும் வெகுதூரம்.

இனி, விதண்டை என்பது தன் அதிகாரத்தைச் செலுத்தி எதிரியை மடக்குவதாம். எதிரியின் பேச்சிலுள்ள குறைநிலையை ஏளனம் பண்ணுவது விதண்டையின் மற்றொரு முறையாம். தத்துவ ஆராய்ச்சிக்கும் விதண்டைக்கும் வெகுதூரமாம்.

சாதகன் ஒருவனுக்கு நல்லாரிடமிருந்து வந்த விளக்கம் விளங்கவில்லையென்றால் அதைக் குறித்து வருந்த வேண்டியதில்லை. பரதத்துவத்தில் மனிதன் அறிந்திருப்பது மிகக் குறைவு; அறியாதிருப்பது மிக அதிகம். "இறைவா! என் அறிவுக்கெட்டிய பிரகாரம் நான் உன்னை வழுத்தி வருகிறேன். என்னுடைய வழிபாட்டில் உள்ள குறையைக் கிருபை வைத்து நீ ஒதுக்கி விடு. உன்னுடைய அனுக்ரஹத்தால் உன் மகிமைகளைப் படிப்படியாக நான் அறிந்து கொள்வேனாக." இதுவே இக் கண்ணியின் உட்பொருள்.

விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து-11

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய ஜீவிதம் அலாதியானது. ஏட்டுக்கல்வி எதையும் அவர் நாடவில்லை. அப்படி அவர் செய்தது பழங் காலத்து ரிஷிகளின் போக்கை ஒத்திருக்கிறது. அக்காலத்தில் அவர்கள் எழுதவும் படிக்கவும் தெரிந்துகொள்ளவில்லை. எழுத்தைக்கொண்டு புஸ்தகம் அமைப்பதும் அவைகளை வாசிப்ப தும் நாளடைவில் வந்தமைந்த பிற்காலப் பழக்கமாயிற்று. வேத காலத்தில் அது வடி வெடுக்கவில்லை. அப்படியிருந்தும் அக்காலத்து ரிஷிகள் ஓதிவந்த வேதங்கள் முறையாகப் பல்லாயிரம் ஆண்டுகளாகக் காப்பாற்றி வைக் கப்பட்டிருந்தன. அவைகளுள் இடைச் செரு கல் ஏதும் நுழையவில்லை. உச்சரிப்புப்பிழை யும் ஏற்படவில்லை. இதுவே அக்காலத்திய மகிமையாம். இக்காலத்தில் தோன்றியுள்ள ராமகிருஷ்ண பரமஹம்சர் அக்காலத்திய ரிஷி கள் போன்று வாழ்ந்து வந்தார். அவர் வாழ்ந்த வாழ்க்கையே அவர் அடைந்துள்ள மேலாம் பண்பாட்டுக்கு முகாமையாயிற்று.

இக்காலத்திய கிராமப் பள்ளிக்குப் பாடம் கற்க அவர் அனுப்பப்பட்டார். திண்டாடித் திணறி மூன்றும் வகுப்பு வரை அவர் படித் தார். அதன் பிறகு இக்காலத்திய படிப்புக்கு அவர் முற்றுப்புள்ளி வைத்து விட்டார். இது வெறும் வயிற்றுப் பிழைப்புக்காக அமைந் துள்ள படிப்பு என்று அவர் முடிவு கட்டினர். பின்பு ராமகிருஷ்ண பரமஹம்சர் வாழ்ந்து வந்த வாழ்க்கையின் விளைவாக அவர் ஓர் அனுபூதிமான் ஆனர். ரிஷி என்னும் சொல் லுக்குப் பொருள் மந்திர திருஷ்டன் அல்லது தத்துவத்தை அனுபூதியில் அறிந்துகொண்ட வன் என்பதாம். நாம் அனைவரும் அத்தகைய பரமஹம்சதேவரைப் பின்பற்றக் கடமைப்பட் டிருக்கிறோம்.

சமயம் என்றல் என்ன என்பதைக் குறித்து இக்காலத்தவர்களுள் பலர் மனம் குழம்பி யிருக்கின்றனர். பின்பு பரமஹம்சருடைய வாழ்வோ சமயத்திற்குச் சரியான விளக்கமாக வந்து அமைந்திருக்கிறது. இரகஸ்யம் எதற் கும் அவருடைய ஜீவிதத்தில் இடமில்லை. மானுடன் ஒருவன் கீழான ஆசைகளுக்கு அடி மைப்படலாகாது. காசை நாடி அலைந்து திரி வதும், காமத்தில் உழல்வதும் பண்பட்டுள்ள மேலோன் ஒருவனுக்குப் பொருந்தாதவை களாம். பரமஹம்சதேவர் காசு ஆசையை அறவே ஒதுக்கியவர். இக்காலத்திய மனிதன் காசு இல்லாது உலகில் வாழமுடியாது என் னும் கொள்கையில் ஆழ்ந்து மூழ்கிக் கிடக் கிறன். இதற்கு நேர்மாருகப் பரமஹம்ச தேவர் காசைப் பற்றிய எண்ணத்திற்கு சிறி தளவாவது தம் உள்ளத்தில் இடம் தர வில்லை. தூங்கும் பொழுதும் கூட அவர் மேனியின் மீது காசு ஏதாவது வந்து படியலா காது. அப்படி அது படிந்தால் தேள் கொட்டு வது போன்று அவருடைய உடல் நோய்க்கு ஆளாகும். அத்தகைய பான்மை படைத்திருந்த அவருக்கு ஆத்ம சாதனத்துக்குத் தேவையாயி ருந்தயாவும் தாமே வந்தமைந்தன. தக்ஷிணேசு வரஆலயமும் அதன்கண் ஆத்ம சாதனத்துக் காக அமைந்துள்ள பாங்குகள் யாவும் அவருக் காகவே அமைந்தனவாம். அவரும் தாம் பூண்டு வந்த பலப்பல சாதனங்களுக்கு அந்த உப கரணங்களை நன்கு பயன்படுத்தினர். Nature abhores Vacuum என்பது சிறந்ததொரு கோட்பாடு. இயற்கைத் தாய் யார் யாருக்கு எது தேவையோ அதை மனமுவந்து அன்னவ னுக்கு எடுத்து வழங்குகின்றுள்என்பது கோட் பாட்டின் உட்கருத்தாம். பரமஹம்சர் ஜீவிதம் அதற்கு விளக்கமாக வந்தமைகிறது.

இனி, காமத்துக்கு வசப்படுகிறவன் விலங்கு போன்றவனுகிறன். அதை வெல்லுகிறவன் வேதாவாகிறன். தமக்கு வாழ்க்கைத் துணைவி யாக வாய்த்திருந்த சாரதாதேவியாரைப் பூஜை செய்து வழிபட்டார். தெருவில் விலை மாது ஒருத்தியை அன்னை பராசக்தியின் வடிவ மாகப் பார்த்து வணங்கினர். ஒருசமயம் மதுர நாதர் ஸ்ரீராமகிருஷ்ணரைக் காமவலைக்குட் படுத்த ஏற்பாடு செய்தார். ஸ்ரீராமகிருஷ்ணர் தம்மை மயக்க இருந்த பெண்களைப் பார்த்த தும், வாத்சல்யபாவனையில் "அம்மா" என்று அழைத்து அவர்களை நாணும்படி செய்தார். இங்ஙனம் அவர் ஜீவிதத்தில் காமத்தை அறவே வென்றிருந்தார்.

இந்தியாவுக்கு வேண்டிய கல்வி

(ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் 1897 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் தேதி டார்ஜிலிங்கிலிருந்து ஸ்ரீமதி சரளா கோசலாவுக்கு எழுதிய கடிதம்)

[424 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மக்களிடத்து ஆன்ம சக்தியை எழுப்புவதோடு லௌகீகக் கல்வியையும் அவர்களுக்குத் தரவேண்டும். ஒரு கருத்தைச் சொல்வது எளிது. அதை நடைமுறைக்குக் கொண்டு வருவது எப்படி என்பதுதான் பிரச்னைக்குரிய விஷயம். நம் நாட்டில் ஆயிரக்கணக்கான சுய நலமற்ற மக்கள் இருக்கிறார்கள். அன்பு உள்ளமும், தியாகமும் அவர்களிடம் அமைந்திருக்கின்றன. அவர்கள் நாடு முழுவதும் சென்று சமயப் பிரச்சாரங்களை ஊதியம் எதுவும் பெறாது செய்து வருகிறார்கள். அவர்களுள் பாதிப் பேருக்காவது ஆசிரியப் பயிற்சி தரலாம். மக்களுக்குத் தேவையான கல்வியை அவர்கள் ஊர் ஊராகச் சென்று போதிக்க வேண்டும். அதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தலைநகரில் ஒரு மையம் இருக்க வேண்டும். அம் மையங்களிலிருந்து இந்தியாவிலுள்ள ஒவ்வொரு இடத்துக்கும் கல்வி செல்ல வேண்டும். சென்னையிலும் கல்கத்தாவிலும் இத்தகைய மையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை போன்ற மையங்கள் விரைவில் பல அமைத்தாக வேண்டும். ஏழை மக்களுக்குக் கல்வியின் பெரும் பகுதி வாய்மொழியாகவே தரப்பட வேண்டும். பள்ளிக்கூடத்தில் நடத்துவது போன்ற கல்விப் பயிற்சி தருவதற்குக் காலம் இன்னும் வரவில்லை. இந்த மையங்களில் நாள் ஆக ஆக விவசாயமும், தொழில் கல்வியும் கற்பிக்கப்பட வேண்டும். தொழில் கூடங்களும் ஏற்படுத்தப்பட வேண்டும். அத்தொழில் கூடங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் விற்பனை செய்வதற்குச் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டும். ஆடவர்களுக்கு மையங்கள் அமைப்பது போன்று பெண்களுக்கும் மையங்கள் அமைக்கப்பட வேண்டும். ஆனால் இவற்றை எல்லாம் நம் நாட்டில் செய்வது எவ்வளவு கடினம் என்பதைப் பற்றி நீங்கள் அறிவீர்கள். விஷப்பாம்பு தான் கடித்துச் செலுத்திய விஷத்தைத் தானே உறிஞ்சி எடுத்தாக வேண்டும். நம் நாட்டில் செய்ய வேண்டிய காரியத்தை எவ்வளவு கஷ்டமிருந்தாலும் நாம் தாம் செய்தாக வேண்டும். இதற்கு எல்லாம் வேண்டிய பணம் மேல் நாட்டிலிருந்துதான் வந்தாக வேண்டும் மேனாட்டிலிருந்து இதற்கு வேண்டிய பணத்தைப் பெறுவதற்கு ஈடாக மேனாட்டினருக்கு நம் மதத்தைப் புகட்டியாக வேண்டும். தற்கால விஞ்ஞானம் கிறிஸ்தவம் முதலிய மதங்களின் அடிப்படையைத் தகர்த்து எறிந்துகொண்டிருக்கிறது. இதற்கு எல்லாம் மேலாகச் சுகபோக வாழ்வு சமய உணர்ச்சியை அழித்துக்கொண்டிருக்கிறது. அமெரிக்காவும், ஐரோப்பாவும் இந்தியாவை மிக ஆர்வத்துடன் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றன. அவர்களிடமிருந்து பண உதவி பெறுவதற்கு இதுவே தக்க காலமாகும். பகைவர்களின் கோட்டையைப் பிடிப்பதற்குத் தக்க தருணமும் இதுவே.

மேனாட்டில் பெண்பாலர் ஆட்சி செலுத்தி வருகின்றனர். எல்லாச் செல்வாக்குகளும் ஆதிக்கங்களும் அவர்களுடையனவாக இருக்கின்றன. உங்களைப்போன்ற திறமையும், ஆற்றலும் உடையவர்கள், வேதாந்த தத்துவத்தில் மூழ்கியவர்கள் இங்கிலாந்துக்குச் சென்று பிரச்சாரம் செய்யவேண்டும். அப்படிப் பிரச்சாரம் நிகழ்ந்தால் ஒவ்வோர் ஆண்டும் நூற்றுக் கணக்கான ஆடவர்களும், மகளிர்களும் இந்து சமயத்தைப் பின்பற்றும் பேறு பெறுவார்கள். இந்தியாவிலிருந்து மேலைநாடு சென்ற ஒரு பெண்மணி ரமாபாய் ஆவார். அவருடைய ஞானமும், ஆங்கில அறிவும், மேனாட்டு விஞ்ஞான அறிவும் மிகக் குறைவாகத்தான் இருந்தன. எனினும் அவர் யாவரும் அதிசயிக்கத் தக்க செயல்களைச் செய்துள்ளார். உங்களைப் போன்ற ஒருவர் அங்குச் சென்றால் இங்கிலாந்தையே ஒரு கலக்குக் கலக்கி விடலாம் என்றால் அமெரிக்காவைப்பற்றிக் கூறுவதற்கு என்ன இருக்கிறது? இந்துப்பெண் ஒருவர் இந்திய உடையுடன் இந்திய ரிஷிகளின் வாக்குகளை எடுத்துச் சொல்வாரானால் அங்

கிருந்து ஒரு பேரலை கிளம்பி மேனாடு முழுவதி லும் வெள்ளமிட்டுப் பெருகும் என்பதை நான் முன் கூட்டியே காண்கின்றேன். மைத்ரேயி, லீலாவதி, சாவித்திரி, உபயபாரதி போன்ற பெண்பாலர்கள் தோன்றிய நம் நாட்டில் சமயத்தைப் புகட்டுவதற்கு உரிய ஆற்றல் பெற்ற ஒருவர் இல்லாமலா போய்விடுவார்? பரம்பொருள் யாவற்றையும் அறிவார். இங்கி லாந்தை நாம் வென்று விடலாம். ஆன்ம சக்தி யைக்கொண்டு இங்கிலாந்தை நமக்குரியதாக்கி விடலாம். முக்திக்கு இதைத் தவிர வேறு வழி இல்லை. சங்கங்களையும், சமுதாய அமைப்புகளையும் அமைத்து விடுவதனால் முக் தியைப் பெற்று விட முடியுமா என்ன? ஆன்ம சக்தியைக்கொண்டு நம்மை வென்றவர்களை நாம் தேவர்களாக்கவேண்டும். நான் ஒரு துறவி. நான் தனியாக இருக்கின்றேன். நான் என்ன செய்ய முடியும்? உங்களிடத்தில் அதிகாரம் இருக்கின்றது; செல்வம் இருக்கின் றது; அறிவு இருக்கின்றது; கல்வி இருக்கின் றது. உங்களுக்குக் கிடைத்துள்ள அரிய வாய்ப்பை நழுவ விடலாமா? இங்கிலாந்து, ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளை வெற்றி கொள்வதையே நமக்குரிய சிறந்த லக்ஷியமாக இப்பொழுது கொள்வோம். அப் பொழுதுதான் நம் நாட்டின் குறைகளைத் திருத்த இயலும். விரிவடைவதே வாழ்ந்திருப் பதற்கு அடையாளமாகும். நம் ஆன்மீகக் கருத்துக்களை உலக முழுவதும் பரப்பியாக வேண்டும். நான் பெற்றுள்ள சரீரம் நலிந் திருக்கிறது. இது வங்காள மண்ணில் தோன் றியது. இதை ஆபத்தான நோயும் தாக்கி யுள்ளது. ஆனாலும் எனக்கு நம்பிக்கை உண்டு. எதிர் காலத்தில் பேரன்பு உடைய ஒருவன் பிறக்கப்போகின்றான். அவன் எண் ணிய காரியத்தை முடித்தே தீருவான்.

சைவ உணவைப்பற்றி நான் ஒன்று சொல்ல இருக்கிறேன். என்னுடைய குருநாதர் மாமிச உணவு அருந்த மாட்டார். தேவிக்குப் படைத்த மாமிச உணவைத் தந்தால் அதை அவர் அருந் தாது தன் சிரசின் மீது வைத்துக்கொள்வார். ஓர் உயிரை அழிப்பது ஐயத்துக்குஇடமில்லாது பாபமேயாகும். நம் உடல் அமைப்புக்குக் காய் கறி உணவு பொருந்தாததாகப் போய்விட் டால், அதற்கு மாமிச உணவு கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை யென்றால் மாமிச உணவை அருந்தித்தான் ஆகவேண்டும். ரஜோகுண வாழ்வு வேண்டுமென்றால் மாமிச உணவு அருந்தியாக வேண்டும். ரஜோகுணம் ஓங்கியிருக்கின்ற சூழ்நிலையில் மாமிச உணவு அருந்துவதைத் தவிர வேறு வழி இல்லை. உயிர்ப் பலி இடுவோர் வாளுக்கு இரையாவார் என்று அச்சுறுத்திப் பல்லாயிரக் கணக்கான விலங்குகளின் உயிரை அசோக சக்கரவர்த்தி காப்பாற்றினார். அதன் விளைவாக ஆயிரம் ஆண்டுகளுக்குமேல் பயங்கரமான அடிமை வாழ்வின் கொடுமையில் இருந்தோம் அன்றோ! சில ஆடுகளின் உயிர்களை மாய்ப்பதைப் பாபம் என்று எண்ணிச் சொந்த மனைவி மகள் ஆகிய வர்களுடைய மானத்தைக் காப்பாற்றுவதற்குச் சக்தியற்றவர்களாக இருப்பது புண்ணியமா என்பதை எண்ணிப் பாருங்கள். உங்கள் கண் முன்னாலேயே உங்கள் குழந்தைகளுக் குரிய உணவைக் களவாடிச் செல்பவர் களைப் பார்த்துக்கொண்டு நீங்கள் செயலற்று இருப்பது பாபமன்றோ! கோழைகளாகவும், பலவீனர்களாகவும் இருந்தால் நாம் ஒரு காரி யத்தையும் சாதிக்க முடியாது. அந்நிலை நம்மை அடிமைகளாக்கிவிடும். நாம் அடிமைகளாக வாழக்கூடாது. வீரர்களாகவும் சுதந்தர புருஷர் களாகவும் வாழ்பவர்கள் மாமிச உணவை அருந்துவதால் அவர்களுடைய முன்னேற்றத் திற்குத் தடை வந்துவிடாது. உணவு விஷயத் தில் கருத்தைச் செலுத்திக் கீழ்மைக்கு நாம் இடம் தந்துவிடக்கூடாது. சூழ்நிலைக்கும், உடல் உழைப்புக்கும் ஏற்ற உணவை அருந்து பவர்கள் உணவு விஷயத்தில் நாம் தலையிட வேண்டியதில்லை. சத்துள்ள உணவை உண்டு நன்றாக உழைக்க நம்மைத் தயாராக்கிக் கொள்ளவேண்டும். உழைப்பாளிகளால்தான் நாடு முன்னேற்றமடைய முடியும். வெறும் பேச் சுப் பேசுவது முன்னேற்றத்தைத் தந்துவிடாது. உழைப்பாளிகளால்தான் நாடு முன்னேற்றம் அடையும் என்பதற்கு ஜப்பான் நாடு எடுத்துக் காட்டாக விளங்குகிறது. அகிலாண்டங்களை யும் ஆளும் சர்வ சக்தி வாய்ந்த அன்னை பரா சக்தி உங்கள் இதயத்தில் குடியிருந்து உங்களை நல்வழியில் செலுத்தி வருவாளாக. (முற்றும்)

ஞான வெட்டியான்-12

உலகுக்குப் பயன்படும் படியான நல்ல கருத்துக்களைக் கூறுகின்ற ஒருவரின் சொல்லிலோ செயலிலோ முரண்பாடு இருக்கலாகாது. இதற்குச் சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். சாகுபடி செய்துள்ள பயிர் பச்சைகளுக்கிடையில் கால்நடைகள் சென்று அவைகளை மேயவோ மிதித்துப் பாழ்படுத்தவோ விட்டுவிடலாகாது என்பது ஒரு கோட்பாடு. இது எல்லார்க்கும் பொதுவாக அமைந்துள்ளது. இதில் நம்பிக்கை வைக்கும் ஒருவர் தமது பயிர் பச்சைகளுக்கு நன்ருக வேலி கட்டி வைக்கவேண்டும். ஏனென்ருல் மக்கள் காவலில் இல்லாத கால்நடைகள் அவைகளைச் சென்று மேய முடியும். ஹிதோபதேசம் கால்நடைகளுக்கு உதவாது.

ஔவைப் பாட்டியின் உபதேசத்தில் கருத்து முரண்பாடு இருக்கிறதென்று சிலர் கருதுகின்றனர். ஏற்பது இகழ்ச்சி என்று கூறியுள்ள ஔவை ஐயம் இட்டு உண் என்று புகட்டியுள்ளார். இந்த இரண்டு கோட்பாடுகளுக்கிடையில் கருத்து முரண்பாடு இருப்பதாகத் தென்படுகிறது. பிறரிடமிருந்து எதையும் இலவசமாக ஏற்றுக்கொள்ளுதல் பொருந்தாது என்ருல் அத்துறையில் யாருக்கும் ஊக்கமூட்டலாகாது. சிகரெட், பீடி முதலிய புகை பிடிக்கலாகாது என்று போதிக்கிற ஒருவன் தானே சிகரெட், பீடி முதலியவைகளைக் கடையில் வைத்து விற்கலாகாது. அதே விதத்தில் பிறரிடமிருந்து எதையும் யாசகமாக ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று புகட்டுகின்ற மானுடன் ஒருவன் பிறருக்குக் கேட்டதை எடுத்து வழங்குவானுயின் அவன் கொள்கைக்கும் செயலுக்குமிடையில் முரண்பாடு இருப்பது வெளிப்படையாம். ஏன் இத்தகைய முரண்பாட்டுக் கொள்கைகளை ஔவையார் புகட்டியிருக்கிருர் என்பது பெரிய கேள்விதான். ஆனல் பொருத்தமற்ற கொள்கைகளை ஔவையார் போன்ற சான்ருேர்கள் சொல்ல மாட்டார்கள். அப்படிச் சொல்லியிருக்குமிடத்து அன்னவர் கூற்றுக்களில் தென்படுகிற முரண்பாடுகளை நிதானமாகவும், அமைதியுடனும் நாம் ஆலோசித்துப் பார்க்கவேண்டும்.

மருந்து வழங்குகின்ற மருத்துவர் ஒருவர் எல்லார்க்கும் ஒரே விதமான மருந்தைத் தருவதில்லை. ஒருவருக்கு மருந்தாக இருப்பது மற்ருெருவருக்கு மரணத்தை உண்டுபண்ணும் விஷமாக இருக்கலாம். தித்திப்புப் பண்டத்தை உண்ணுதே என்று ஒருவருக்கு மருத்துவர் புகட்டலாம். மற்ருெருவருக்கு தித்திப்புப் பண்டத்தை வேண்டியவாறு உண்ணலாம் என்று அனுமதி தரலாம். இப்படி அவர் செய்வதில் முரண்பாடு இல்லவே இல்லை. புகட்டுகிற கோட்பாடு ஒன்று யாருக்கு என்பது முக்கியமான கேள்வியாகும். அதிகாரி பேதம் என்பது இதுவேயாம். மக்களுக்கிடையில் அதிகாரிபேதம் வேண்டியவாறு அமைந்திருக்கிறது. எக்கோட்பாடு யாருக்காகப் புகட்டப்பட்டது என்பதை நாம் அலசி ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

ஐயம் இட்டு உண் என்னும் கோட்பாடு பொருள்படைத்திருக்கும் செல்வந்தர்களுக்காகச் சொல்லப்பட்டது. பிறர்க்கு எடுத்து வழங்குதல் என்னும் செயல் அலாதியாக மானுடவர்க்கத்துக்குரியதாம். அங்ஙனம் கொடுக்கும் கொடைகளுள் மிக முக்கியமானது உணவு. உணவில்லாது யாரும் உயிர் வாழ்ந்திருக்க முடியாது. நாள்தோறும் அது எல்லார்க்கும் தேவை. ஆகையினல் பசித்திருப்பாரைத் தேடிப் பார்த்து அவர்களுக்கு உணவு வழங்குவது சிறந்த அறச்செயல் ஆகிறது. பிறர் நலனுக்காக வாழ்ந்திருப்பவனே உண்மையான மனிதனுகின்ருன். பிறர்க்குத் தேவையாயிருப்பதை எடுத்து வழங்க மறுப்பவன் வாழ்ந்திருந்தும் வாழாதவனேயாவான். அன்னவன் நடமாடும் பிணத்துக்கு ஒப்பாகிருன்.

மக்களாகப் பிறந்திருப்பவர்கள் எல்லாரும் மனப்பான்மையில் மக்களாக மாட்டார்கள். தரித்திர தசையிலிருந்து வள்ளல் தன்மை பரியந்தம் எல்லாவிதமான மனப்பான்மைகளையும் மக்களுக்கிடையில் காணலாம். உயிர் வகைகளனைத்தும் தம் தம் போக்கில் முன்னேற்றமடைந்து வருகின்றன. அவைகளுக்கிடையில் மனிதன் அலாதியான சிறப்புடையவனுக இருக்கிருன். பரஸ்பரம் உதவி பண்ணிக்

கொள்வதே அச்சிறப்பாம். சின்னஞ்சிறு வயதிலிருந்து பெறுகிற பயிற்சியை முன்னிட்டு அமைவது பண்பு. சில குடும்பங்களில் பிறந்துள்ள சிறுவர்களுக்கு வேற்றூர் தின்பண்டம் ஏதாவது கொடுத்தால் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தாய் தந்தையர் அச்சிறுவர்களுக்குக் கொடுத்துள்ள பயிற்சி அத்தகையதாம். மற்றொருவர் தந்ததை ஏற்றுக் கொள்ளும்படி தாய் தந்தையரிடமிருந்து அனுமதி வந்தால்தான் அச்சிறுவர்கள் அதை ஏற்பார்கள். அத்தகைய பண்பு பயிற்சியின் விளைவாம். இன்னும் சில சிறுவர்கள் பிறர் வழங்கியதைத் தயக்கத்துடன் ஏற்றுக்கொள்வார்கள். அது நல்ல பயிற்சியின் விளைவாம்.

மக்களுள் வறியர் சிலர் இருக்கின்றனர். யாசகம் கேட்பதே அவர்கள் தொழில். தங்கள் குழந்தைகளுக்குத் தரும் பயிற்சியும் அத்தகையதேயாம். ஏற்பது இகழ்ச்சி என்னும் கோட்பாடு அத்தகைய வறிஞர்க்கு ஒருபொழுதும் உதவாது. அன்னவர்களுடைய வறுமையை அப்போதைக்கப்போது அகற்றி வைப்பது பொருள் படைத்தவர்களுடைய கடமையாம்.

அதிகாரி பேதம் என்னும் கோட்பாட்டை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு ஏற்பது இகழ்ச்சி, ஐயமிட்டு உண் ஆகிய இவ்விரண்டு கோட்பாடுகளையும் ஆராய்ந்து பார்த்தால் உண்மை விளங்கும். வள்ளல் தன்மை படைத்திருப்பது மானுட ஜன்மத்தின் சிறந்த குறிக்கோளாகிறது. பிறவியிலிருந்தே யாசகனயிருந்து ஐயம் ஏற்பது மற்றொரு கோடியில் மனிதன் படைத்துள்ள சிறுமையாம். இச்சிறுமையைச் சமுதாயத்திலிருந்து அறவே அகற்றுவது யாருக்கும் சாத்தியப்படாது. நோய்க்கு ஏற்ற மருந்து தருவதற்கு நிகராக மனிதனுடைய பான்மைக்கேற்றவாறு போதனையும் வந்தமைந்துள்ளது. மானுடா, யாண்டும் நீ பிறர்க்கு உதவி பண்ணுதலில் கண்ணும் கருத்துமாயிரு. எப்பொழுதும் எக்காரணத்தை முன்னிட்டும் நீ யாசகனய் விடாதே. யாசகன் என்னும் கீழ் நிலைமையில் இருந்துகொண்டு நீ பிறரிடம் கைநீட்டி யாசகம் ஏற்பது இகழ்ச்சியாம்.

மற்று, அக்கீழ்நிலையிலிருக்கும் மக்களைச் சமுதாயத்தில் எப்பொழுதுமே காணலாம். கூடுமானவரையில் அன்னவர்களுடைய மனதைத் திருத்தியமைக்க நீ முயன்று வருவாயாக. அச்செயலும் வெறும் வாய்ப்பேச்சாயிருக்கலாகாது. இதற்கு நல்லதொரு சான்று நாம் எடுத்துக்கொள்வோம். ஓர் ஊரில் இருந்து மற்றோர் ஊருக்கு ஒருவர் மோட்டார்வண்டியில் பிரயாணம் போனர். போன இடத்தில் பஸ் நிலையத்தில் வந்தவரைச் சந்திக்க அவர் உறவினர் காத்திருந்தார். பஸ் வந்து நின்றதும் அதன் மேலேயிருந்த மூட்டை முடிச்சுகளைக் கீழே கொண்டு வருவதைக் குறித்து ஒரே அமளி. இதற்கிடையில் இரண்டு சிறுவர்கள் வந்து "ஐயா! நான் ஏழை; பட்டினி கிடக்கிறேன், காசு தாருங்கள்" என்று கெஞ்சினர்கள். உற்றாரைத் தம் வீட்டுக்கு அழைத்துச் செல்ல வந்திருந்த உள்ளூர்க்காரர் இந்தப் பையன்களிடம் பஸ்ஸின் மேலே ஏறி ஒரு படுக்கையை எடுக்கும்படி ஏவினர். இரண்டு சிறுவர்களில் ஒருவன் தான் யாசகன் என்றும் ஆகையினல் அத்தகைய வேலை செய்யமாட்டேன் என்றும் விடைவிடுத்தான். மற்றவனே விரைந்து பஸ்ஸின்மீது ஏறி இவர்கள் குறிப்பிட்ட படுக்கையை எடுத்துக்கொடுத்தான். கீழே வந்த பிறகு அவன் கை நீட்டினன். அப்போது உள்ளூர் அன்பர் அவன் கையில் நாலணு கொடுத்துப் பகர்ந்ததாவது: "பார், இவன் வேலை செய்தான். செய்த வேலைக்கு ஓரணு கொடுத்தால் போதுமானது. ஆனல் வேண்டுமென்றே வேலையில் அவனை உற்சாகப்படுத்துதல் பொருட்டு நாலணு தருகிறேன். நீ யாசகன் அல்லவா? ஆகையால் உனக்குக் காலணுகூடத் தரமாட்டேன்" என்றார். வறியவனுக்கு இவர் செய்தது நல்லதொரு பாடம். பிறர்க்கு எடுத்து வழங்குமிடத்தும் பிறருடைய மனதைத் திருத்தியமைக்கும் பாங்கில் வழங்குவோமானல் அது நல்லதொரு சமுதாயசேவையாகிறது.

உழைப்பாளி ஒருவன் தன் உழைப்பை உலகுக்குத் தருகிறான். தனக்குத் தேவையான ஊதியத்தை உலகத்திலிருந்து ஏற்கிறான். ஊதியத்துக்கு மேல் உழைப்பானகில் அவன் ஐயம் இட்டவனகின்றான். உழைப்புக்கு மேல் ஊதியத்தைப் பெறுவானகில் அவன் ஏற்பவனகின்றான்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (438) கடவுள் பக்திக்குக் காரணம் அச்சம் என்று கூறுகிறார்களே இது சரியா?

அச்சத்திற்குப் பிறப்பிடம் அஞ்ஞானம். பக்திக்குப் பிறப்பிடம் அன்பு. எங்கு அன்பு இருக்கிறதோ ஆங்கு அச்சத்திற்கு இடமில்லை. சிலர் பயபக்தி என்னும் பதத்தைக் கையாளுகிறார்கள். அது பொருந்தாததாம். எது உள்ளத்தைக் கவர்கிறதோ அதனிடத்து அன்பு தானாக வளர்கிறது. அந்த அன்பு தூயதாகிறபொழுது பக்தியாகிறது.

கண்ணன் உலகில் தோன்றி வந்தபொழுது பக்தியும் வடிவெடுக்கலாயிற்று. அது கண்ணனிடத்தில் வைத்த அன்பின் விளைவாக அங்ஙனம் வளர்ந்தது. கண்ணன் உள்ளம் கவர் கள்வனாகப் பிறந்தான். காந்தம் இரும்புகளைக் கவர்ந்து இழுப்பது போன்று கண்ணன் உயிர்களனைத்தையும் தன்பால் கவரலாயினன். அவன் படைத்திருந்த மேனியின் அழகு, புன்முறுவல், இனிய சொல், அவன் கிளப்பிய புல்லாங்குழல் ஓசை ஆகியவை யாவும் ஒன்று கூடி மக்களை மட்டுமல்ல, மற்ற சிற்றுயிர்களையும் கண்ணனிடத்தில் கவர்ந்திழுத்தன. அதன் விளைவாக அவர்கள் உள்ளத்தில் ஊற்றெடுத்த அன்பானது பேரன்பாகப் பரிணமித்தது. அதன் விளைவாக அவனோடு தொடர்பு வைத்த மக்களனைவரும் தங்களுடைய சுயநலனை ஒதுக்கிவைத்தார்கள். அதன் விளைவாக அவர்கள் உள்ளத் தெளிவடைந்தார்கள். தெளிந்த உள்ளத்தில் எழுந்த அவர்களுடைய அன்பு பேரன்பாகப் பரிணமித்தது. இந்தப் பேரன்புதான் பக்தி எனப் பகரப்பெறுகிறது. இத்தகைய பேரன்புக்கும் பயத்திற்கும் வெகு தூரமாம்.

சில மதவாதிகள் மக்களுக்குப் புகட்டுவது கடவுளைப் பற்றிய பயம். மனிதன் தப்புச் செய்தால் அவனை நரகத்தில் போட்டு அவர் துன்புறுத்துவார். அப்படிச் செய்ய வேண்டாம் என்று கடவுளைக் கெஞ்சிக் கேட்பதைப் பக்தி என்று அந்த மதவாதிகள் கூறுகின்றனர். தண்டனைக்கு அஞ்சி ஒருவரிடம் மன்னிப்புக் கேட்பதும் அவரோடு தொடர்புகொள்வதும் பக்தியாகாது. எனவே அச்சத்திற்கும் தெய்வபக்திக்கும் வெகுதூரம்.

கேள்வி: (439) சூரியனை நாள்தோறும் வழிபடுகிறோம். சந்திரனை ஏன் வழிபடுவதில்லை?

சூரியன் சுயப்பிரகாசம் உடையவன். சூரியனிடத்திலிருந்து கிளம்பி வரும் வெப்பமும், வெளிச்சமும் உயிர்களின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாதவைகளாகின்றன.

மற்று, சந்திரனோ சூரியனிடத்திருந்து பெற்ற வெளிச்சத்தைப் பிரதிபிம்பிக்கிறது. அது சுயம்பிரகாசம் வாய்ந்ததன்று. ஆதலால் உயிர்களை ஓம்பும் திறமை சந்திரனுக்கு இல்லை.

இனி, சூரியனிடத்துள்ள பல சிறப்புக்கள் பரம்பொருளாயுள்ள தெய்வத்திடத்துள்ள மகிமைகளுக்கு ஒப்பானவைகளாகின்றன. ஆகையினால்தான், சூரியனை சூரிய நாராயணன் என்று சிலாகித்துப் பேசுகிறோம். நாராயணன் ஆத்மப் பிரகாசம் வாய்ந்தவன். அந்தப் பிரகாசம் எதை முன்னிட்டும் மங்கவோ, பழுதுபட்டுப் போகவோ செய்வதில்லை. அத்தகைய ஆத்மப் பிரகாசத்திற்குக் கிட்டத்தட்ட நிகரானது சூரியப் பிரகாசம். அருள் துறையில் மகாநாராயணன் உயிருக்குயிராக இலங்குகின்றான். சூரிய நாராயணனோ பிரபஞ்ச அமைப்பில் உயிர்க்குயிராக இலங்குகின்றான். ஆதலால்தான் சூரியனைத் தெய்வத்துக்கு நிகராகக் கருதி மக்களாகிய நாம் வழுத்துகிறோம்.

கேள்வி: (440) பிரம்மச்சரிய உணர்வை ஊட்டுவது எப்படி?

சில சீரிய போதனைகள் மறைமுகமாக வரவேண்டும். பொய் சொல்லாதே என்று எதிர்மறையில் புகட்டுவதற்குப் பதிலாக சத்திய விரதத்தைக் கடைப்பிடித்த சான்றோர்களுடைய வரலாறுகள் மூலம் அதன் மகிமையை விளக்குவது சாலச் சிறந்தது. அதே பாங்கில் பிரம்மச்சரியத்தின் மகிமையைச் சிறுவர்களுக்கு எடுத்துப்புகட்டுவது முற்றிலும் அவசியம். காப்பது விரதம் என்பது கோட்பாடு. ஐம்பொறிகளைப் புலன்வழியே ஆசைக்கு உட்பட்டுச் செல்லாது காத்தல் வேண்டும். விரதங்களுள் மஹா விரதமாயிருப்பது பிரம்மச்சரிய விரதம். பீஷ்மர் இதற்கு நல்ல சான்றாக விளங்குகிறார்.

அவர் ஆயுள் கால முழுதும் பெண் ஆசையை அறவே ஒதுக்கி வைத்தவர். பெண்பாலர் அனைவரையும் அன்னை பராசக்தியின் சொரூப மாக அவர் கருதியதே அவர் தூய வாழ்வுக்கு நல்ல திறவுகோலாக அமைகிறது.

இக்காலச் சூழ்நிலையில் பிரம்மச்சரிய விரதத் துக்கு இடைஞ்சலாயுள்ள சிற்றின்ப உணர்ச்சி யானது சினிமா வாயிலாகவும், பத்திரிகைகள் வாயிலாகவும் சமுதாயத்தில் எங்கும் நிலவி வருகின்றது. இதற்கிடையில் சிறுவர்களைத் தூய வாழ்வு வாழும்படி பெற்றோர்களும் பள்ளிக்கூடங்களும் தூண்டக் கடமைப்பட்டி ருக்கின்றன. பிரம்மச்சரிய விரதத்திற்கு இடைஞ்சலாயுள்ள கருத்துக்கள் கூடியவரை யில் சிறுவர்கள் காதுக்கு எட்டாது ஒதுக்கி வைப்பது முற்றிலும் அவசியம் ஆகிறது. இளமையில் கல் என்பது சிறந்த கோட்பாடு. மற்ற கல்விகளை யெல்லாம் விடப் பிரம்மச்சரிய விரத சம்பந்தமான கல்வியைச் சிறுவர்களுக் கிடையில் புகட்டுவது முற்றிலும் அவசியம் ஆகிறது. பிரம்மச்சரியத்தின் மகிமையை அவர்களுக்கு வேண்டியவாறு புகட்டவேண் டும். பீஷ்மர், ஹனுமான், சுவாமி விவேகானந் தர் போன்ற பெரியோர்கள் பிரம்மச்சரியத் தைக் கடைப்பிடித்ததன் வாயிலாகவே மஹா வீரர்களாகவும், மஹா ஞானிகளாகவும், மஹா பக்தர்களாகவும் விளங்கினர்கள் என்பதை யாவருக்கும் புகட்டவேண்டும். பிரம்மச்சரி யத்தை அனுஷ்டிப்பதன் மூலம் பிரம்ம ஞானம் பெறலாம் என்ற உண்மையைத் தெளிவாக்க வேண்டும்.

ஒரு சமுதாயத்தின் மேன்மை அது அனுஷ் டித்துவரும் புலனடக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. முதியவர்கள் தங்களு டைய வாழ்க்கையின் வாயிலாகவும் நடை உடை பேச்சின் வாயிலாகவும் புலனடக்கத் திற்கு எடுத்துக் காட்டாக இருத்தல் அவசிய மாகிறது.

கேள்வி: (441) தியானத்தில் நாம் முன் னேற்றமடைகின்றோம் என்பதனை எப்படி அறி வது?

யோகசாஸ்திரத்திலே ஏழாவது படித்தரத் தில் இருப்பது தியானம். மனதுக்கு உற்சா கத்தையும், மேலாம் உணர்வையும் ஊட்டுகிற எதைக் குறித்து வேண்டுமானாலும் தியானம் பண்ணலாம். மனதை ஒருமுகப்படுத்துவதே தியானமாகிறது. மக்கள் எல்லார்க்கும் மனதை ஒருமுகப்படுத்தும் ஆற்றல் இயல்பாகவே அமைந்திருக்கிறது. அந்த ஆற்றலை வளர்க்க எல்லாரும் கடமைப்பட்டிருக்கின்றனர். ஆற் றல் தெய்வ சம்பத்தாம். ஆதலால் ஆற்றலை ஓங்குவிப்பது கடவுளை அடைவதற்கு நிகரா கிறது. சாதகன் ஒவ்வொருவனும் தங்கள் இஷ்டதெய்வத்தின் மகிமைகளை ஆழ்ந்து எண்ணுவது சிறந்த தியானம். இதற்கு அடுத்தபடியாகப் பிரபஞ்சத்தின்கண் உள்ள மேன்மை, யார் யாருக்கு எதில் விருப்பம் உண் டாகிறதோ அதைக் குறித்து ஆழ்ந்து எண்ணு வது நல்ல தியானமாகிறது. இயற்கையின்கண் அமைந்துள்ள அழகிய காட்சி, சான்றோர் மகிமை, சீரிய எண்ணம், மனதுக்கு ஒத்துள்ள மேலாம் கருத்து ஆகியவைகளைக் குறித்து ஆழ்ந்து எண்ணுவதும் நல்ல தியானமா கிறது.

புதிதாகத் தியானம் பழகுகிற ஒருவன் ஐந்து நிமிஷம் பழகுவானுகில் அது பத்து அல்லது பதினைந்து நிமிஷமாகத் தென்படும். அப் படித் தென்படுவதால் அவனுக்குச் சரியாகத் தியானம் கூடவில்லை என்பது வெளியாகிறது. அதற்கு நேர்மாறாகப் பத்து நிமிஷம் தியானம் பண்ணுகிற ஒருவனுக்கு அது ஐந்து நிமிஷம் போன்று காலம் குறுகுமாகில் அது நல்ல தியானமாகிறது. ஆக, காலத்தை வெல்லு வது நல்ல தியானத்திற்கு அறிகுறியாம். அடுத்தபடியாகத் தியானம் பண்ணிய பிறகு மனதில் இனிமையும் சாந்தமும் குடிகொள்ளு மாகில் தியானத்தின் முன்னேற்றத்திற்கு அது மற்றொரு அறிகுறி. நாள்தோறும் நீராடும் பழக்கத்திலிருக்கின்ற ஒருவனுக்கு ஒரு நாள் நீராடாவிட்டால் அக்குறை அவன் மனதை வந்து தாக்குகிறது. அதே விதத்தில் முறையா கத் தியானம் பண்ணுகிற ஒருவன் ஒரு நாள் தியானம் பண்ணத் தவறினல் அக்குறையை அவன் உணருகிறான்.

இத்தகைய அறிகுறிகளை அளவையாக வைத்துக்கொண்டு தியானம் பண்ணுகின்ற ஒவ்வொருவனும் தான் முன்னேறி வருகிறானு என்பதைக் கண்டு கொள்ளலாம்.

109. समः ஸம: — எப்பொழுதும் ஒரே பாங்கில் இருப்பவன்.

காலத்தையோ, இடத்தையோ அல்லது முகாமையையோ முன்னிட்டு இயற்கையிலுள்ள யாவும் மாறியமையும் பாங்குடையவைகளாயிருக்கின்றன. காலையில் அலர்ந்து நறுமணம் கமழும் புஷ்பம் மாலையில் வாடிப்போய் நறுமணத்தையும் இழக்கிறது. மலையின் அடிவாரத்தில் நறுமணம் கமழும் புஷ்பம் மலை உச்சியில் பத்தாயிரம் அடிக்கு மேலே எடுத்துச்சென்றால் விரைவில் வாடாது. ஆனால், அது தன் நறுமணத்தை இழக்கிறது. வெளிச்சத்தில் கண் பார்வையுடைய உயிர்கள் இருளில் பார்க்கும் திறமையை இழக்கின்றன. இத்தகைய மாறுபாடுகள் காலம், தேசம், நிமித்தம் ஆகியவைகளை முன்னிட்டு அமைகின்றன. மற்றுப் பரமனோ எக்காலத்தும் எவ்விடத்தும் எல்லாச் சூழ்நிலைகளிலும் ஒரே பாங்குடையவனாக யாண்டும் இருந்து வருகிறான். ஆகையினால் சமம் என்னும் கோட்பாடு யாண்டும் பரத்துக்கே உரியதாம்.

110. अमोघः அமோக: — பக்தர்கள் கொண்டுள்ள இணக்கம் வீண்போகாது பயன் அளிக்கும் பண்புடையவன்.

பரமனை வழுத்துதற்கு உபாயங்கள் மூன்று உள. தொழுகின்ற பொழுதும், கருத்தில் வைக்கின்ற பொழுதும், போற்றுகின்ற பொழுதும் பரமன் பக்தனுக்குரியவனாகின்றான். பக்தர்கள் பூணும் மேலாம் ஆசைகளைப் பரமன் நிறைவேற்றி வைக்கின்றான். வாய்க்கால் வழியோடும் நீருக்குத் தடையில்லாவிட்டால் அது ஓடிக் கொண்டேயிருக்கிறது. அதே பாங்கில் பரமனுடைய திருவுளப் பாங்கு சதா பாய்ந்து கொண்டேயிருக்கிறது. அதற்குத் தடை பண்ணுவதற்கு எவ்வுலகிலும் ஏதுமில்லை. பரமன் சத்தியத்திலிருந்து பிசகுவதில்லை. அவனுடைய திருவுள்ளத்தில் உதயமாகும் கருத்துக்கள் யாவும் சத்திய சொரூபமாம்.

111. पुण्डरीकाक्षः புண்டரீகாக்ஷ: — ஹ்ருதய கமலத்தின் கண் வீற்றிருப்பவர்.

கமலம் அல்லது தாமரைப் பூ நம் நாட்டுக்குரிய தேசிய மலராக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இப்பூவும் இதிலுள்ள பலபகுதிகளும் தத்துவங்களுக்கு நல்ல விளக்கங்களாக வந்து அமைந்துள்ளன. மலர்களுள் தாமரைப் பூ அழகிலே உச்சநிலை எய்துகிறது. நன்றாக அமையப்பெற்றுள்ள கண் ஆனது கமலக்கண் என்னும் பெயர் பெறுகிறது அழகிய நல்ல கண் படைத்திருப்பவனிடத்து மேன்மைகள் பல மிளிர்வது திண்ணம். பரம் பொருளின் ஒவ்வொரு கூறும் தாமரையோடு இணைத்தே பகரப்பெறுகிறது. பாதகமலம், ஹஸ்த கமலம், ஹ்ருதய கமலம், வதன கமலம் இப்படியெல்லாம் சரீரத்திலுள்ள ஒவ்வொரு பகுதியும் தாமரையோடு இணைத்தே விளக்கப் பெறுகிறது. அவைகளுள் புண்டரீகாக்ஷம் அல்லது கமலக் கண் முக்கியமான இடம்பெறுகிறது. ஞானேந்திரியம் ஐந்தினுள் பார்வைக்குரிய கண் முக்கிய இடம் பெறுகிறது. ஆதலால் அதன் செயல் ஏனைய ஞானேந்திரியங்களின் செயல்களோடு இணைத்தே இயம்பப் பெறுகிறது. நான் என் கண்ணாரப் பார்த்தேன். அப்பொருளைத் தொட்டுப் பார்த்தேன். இப்பண்டத்தைச் சுவைத்துப் பார்த்தேன். இந்த மலரை முகர்ந்து பார்த்தேன். அவன் சொன்னதைக் கேட்டுப் பார்த்தேன். இப்படியெல்லாம் கண்ணின் செயல் மானுட வாழ்க்கையில் முக்கியமான இடம் பெறுகிறது. தத்துவ தரிசனம் என்றும், ஈஸ்வர தரிசனம் என்றும் மெய்ப்பொருள் ஆராய்ச்சியும் கண்ணின் செயல்களோடு இணைத்தே இயம்பப்பெறுகிறது. ஆதலால் பரமனைக் கமலக்கண்ணன் என்று சொல்லுமிடத்து அதனுடைய நிறைவு இந்த விளக்கத்தின் விளைவாக வெளியாகிறது.

112. वृषकर्मा வ்ருஷகர்மா: — கர்மங்களனைத்தையும் நல்லவைகளாகவும், நலம் தருபவைகளாகவும் அமைத்திருப்பவன்.

இயற்கையில் எங்கும் நிகழ்ந்து வருகிற செயல்கள் யாவும் பரமனுக்குரியவைகளாம். பரம்பொருளோ நலங்கள் அனைத்துக்கும் உறைவிடமாக இலங்குகின்றார். ஆகையினால் அவனிடத்திருந்து கிளம்பி வருகின்ற செயல்களனைத்தும் அறச் செயல் அல்லது தர்ம

சொரூபமாகவே அமைந்திருப்பது திண்ணம். சில வேளைகளில் பஞ்சமும், கொள்ளை நோயும், கொடிய யுத்தமும் நிகழ்கின்றனவே. இத்தகைய கொடிய நிகழ்ச்சிகளும் இறைவனுடைய திட்டத்தாலன்றி நிகழமாட்டா. அப்படியிருக்கையில் இக்கொடிய செயல்களை நலன் நிறைந்தவைகள் என ஏற்பது எங்ஙனம்?

ஒருவனுக்கு நலனாகத் தென்படும் செயல் மற்றொருவனுக்குக் கேடாகத் தென்படலாம். ரண வைத்தியம் செய்வது நல்ல செயல். ஆனால் அதை அறிந்துகொள்ளாத நோயாளியும் பாமரர்களும் அதைக் கொடிய செயல் எனப் பொருள்படுத்தலாம். உண்மையில் அச்செயலில் கொடுமை ஏதுமில்லை. அதே பாங்கில் கொள்ளை நோயும், பஞ்சமும், போராட்டமும் இன்றியமையாதவைகளாம். அவைகள் வாயிலாகச் சமுதாயம் தூய்மையடைகிறது. கிருஷிகர்கள் தங்கள் பயிர் பச்சைகளில் கலந்துள்ள பொருந்தாத செடிகளை எடுப்பதற்கு நிகர் இயற்கையின் கண் அமைந்துள்ள கொடுமை போன்று தென்படும் இச்செயல்கள். கிருஷ்ண பரமாத்மாவின் விஸ்வரூப தர்சனத்தைப் பார்த்தபிறகே அர்ஜுனனுக்கு இவ் உண்மை வெளியாயிற்று. ஆதலால் இறைவன் செயலில் யாண்டும் நலனே நிறைந்திருக்கிறது என்னும் உண்மை ஞானிகளுக்கு விளங்குகிறது.

113. वृषाकृतिः வ்ருஷாக்ருதி: — தர்மத்தை ஸ்தாபனம் பண்ணுவதற்கு ஏற்ற வடிவங்களை எடுக்கிறவர்.

எப்பொழுதெல்லாம் தர்மம் குறைந்துபோய் அதர்மம் தலையெடுக்கிறதோ அப்பொழுதெல்லாம் பரம்பொருள் வடிவெடுத்து வந்து தர்மத்தைப் பழையபடி நிலைநாட்டுகிறது என்னும் கோட்பாடு பகவத்கீதையில் அடங்கியிருக்கிறது. இக்கோட்பாட்டுக்குச் சான்றுகளை இதிகாசங்களிலும் புராணங்களிலும் காண்கிறோம். யுக்தி பூர்வமாக ஆராயுமிடத்து இவ்வுண்மை தெற்றென விளங்குகிறது.

114. रुद्रः ருத்ரா: — துக்கத்தைத் துடைப்பவர் என்பது ஒரு பொருள். அழச்செய்பவர் என்பது மற்றொரு பொருள்.

ருத்ராகார அழுகை பிரபஞ்ச சம்பந்தமான கேடுகளை அகற்றுகிறது. பரம்பொருள் சம்பந்தமான நலன்களை வளர்க்கிறது.

115. बहुशिराः பஹுஸிரா: எண்ணிறந்த தலைகளை உடையவன்.

பரம்பொருள் தானே உலகனைத்தும் ஆகி இருக்கின்றான். அவனுக்குப் புறம்பாக எவ்வுயிரும் பிரபஞ்சத்தில் இல்லை. கேடுகளை விளைவிக்கின்ற கெட்ட உயிர்களும் அவன்தானே என்னும் கேள்வி எழலாம். ஆம்! அனைத்துமாக இலங்குபவன் அவனே. பிரபஞ்சத்தில் ஒன்றோடொன்று முரண்படுகின்ற உயிர்வகைகளைக் காண்கின்றோம். அவைகளுக்கிடையில் உண்டாகின்ற போராட்டமும் இறைவனுடைய லீலையாம். உயிர்களனைத்தும் முன்னேற்றம் அடைவதற்கு நலன்களைப்போன்றே கேடுகளும் பயன்படுகின்றன. புலியாய் வந்திருப்பவனும், போக்கிரியாய் வந்திருப்பவனும், பக்தனாய் இலங்குபவனும் நாராயணனே. சாதனதசையிலிருக்கின்ற ஒருவன் புலி நாராயணன் அருகில் போகக்கூடாது. போக்கிரி நாராயணனோடு எச்சரிக்கையாக நடந்துகொள்ளவேண்டும். பக்தி பண்ணுகிற நாராயணனோடு தாராளமாக ஒட்டி உறவாடலாம்.

116. बभ्रुः பப்ரு: — அண்டங்களைத் தாங்குகிறவன்.

எண்ணிறந்த உலகங்கள் வானவெளியில் மிதந்துக் கொண்டிருக்கின்றன. ஏன் அவைகள் வீழ்ந்து அழிந்து போவதில்லை என்னும் கேள்வி எழலாம். அந்தந்தக் கோளம் அது அதற்குரிய இடங்களிலும் மார்க்கங்களிலும் நகர்ந்து கொண்டிருப்பதற்கு உறுதுணையாயிருப்பது ஆகர்ஷணம். இந்தச் சக்தி மயமாகப் பரமன் இருந்து அவைகளுக்கிடையில் ஒழுங்குப்பாட்டைக் கொண்டு வந்திருக்கிறான்.

117. विश्वयोनिः விஸ்வயோனி: — அண்டங்கள் அனைத்திற்கும் பிறப்பிடம்.

அண்டங்களும் அவைகளில் வாழ்ந்து வரும் உயிர் வகைகளனைத்தும் பரம்பொருளிடத்திருந்தே வடிவெடுத்துள்ளன. சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். வெட்ட வெளியில் திடீரென்று மேகம் வடிவெடுக்கிறது. அது செய்ய வேண்டிய செயலை முடித்துவிட்டு மறைந்துபட்டுப் போகிறது. அதே பாங்கில் தான் தோன்றியுள்ள அனைத்துக்கும் மூல காரணமாய் இருக்கின்றவன் பரமன்.

சனாதன தர்மத்தின் சிறப்புகள்

(திரு. V. S. நரசிம்மன்)

எதிர்காலத்தில் புதியதாக ஒரு நரகமும் சுவர்க்கமும் தோன்றப்போகின்றன என்னும் நம்பிக்கையானது பாதிரிமார்கள் உண்டாக்கிய பெரும் கற்பனையாகும். நகைப்புக்கிடமான இந்தக் கருத்து மதத்தின் பெருமையையே குறைத்து விடுகின்றது. தனது பாபங்களுக் கேற்றவாறு மனிதன் துன்பங்களை அனுபவிக் கின்ருன் என்பதுதான் உண்மை. அவன் அனுபவிக்கும் துன்பம்தான் உண்மையில் நரக மாகும். தனது சிறந்த செயல்களுக்கான புண் ணியங்களையும் அவன் அனுபவிக்கின்ருன். அந்த மகிழ்ச்சிகரமான அனுபவமே சுவர்க்கம் எனப்படுவது. இவ்விதம் நாம் வாழும் இந்தப் பூமியிலேயே சுவர்க்கமும், நரகமும் நடைமுறை யில் இருக்கின்றன. ஆனல் அவை இரண்டும் தாற்காலிகமானவை. மனிதனுடைய செயல் களின் தரத்துக்கேற்ப அதே தரத்தில் அதே அளவில் வந்து வாய்ப்பவை.

நன்மையோ, தீமையோ அதை இன்றே, இங்கேயே அடையலாம். எதிர்காலத்தில் சொர்க்கமோ, நரகமோ வாய்க்கும் என்பது சர்ச்சைக் கட்டியாண்ட பாதிரிகளின் கட்டுக் கதை. இந்தக் கருத்து மதத்திற்குப் பெரிய பாதகத்தை விளைவித்துள்ளது. தவத்திற்கும் பாவத்திற்கும் ஏற்ப மனிதன் இன்ப துன்பங் களை அடைகின்ருன். நரகம் என்பது இந்தத் துன்பமே! தான் செய்த நல்ல செயல்களின் பலனை அவன் அனுபவிக்கின்ருன். அதுதான் சொர்க்கம். எனவே, இந்தப் பூவுலகிலேயே சொர்க்கமும், நரகமும் உள்ளன. அவை தாற் காலிகமானவை. ஒருவன் செய்த நன்மை, தீமைகளுக்கு ஏற்ற விகிதத்தில் அவை அமை கின்றன.

8. 'சாத்தான்' என்கின்ற ஒரு கற்பனை யானது சமயத்தைக் கேவலப்படுத்துகிற ஒரு கருத்தாகும். கள்ளம் கபடு அற்ற மனிதர்களை ஏமாற்றுவதற்கு என்று சர்ச் பாதிரிகள் கண்டு பிடித்தவழிகளுள் இதுவும் ஒன்று.

இயற்கையில் நல்வினை, தீவினை இரண்டும் உண்டு. அறியாமல் மனிதனின் மனதில் தோன்றும் தீவினையே சாத்தான். ஞானத் தாலும், நல்ல செயலாலும் மனிதனின் அகத்தே உள்ள தீமை அகற்றப்படுகிறது.

9. உலகில் உள்ள எல்லா உயிரினங்களும் பரிணமித்து வருகின்றன. எனவே, மனிதன் ஒருவனை மட்டும் காப்பதற்காக ஒரு தேவ தூதன் தோன்றினர் என்பது சர்ச்சின் கட்டுக் கதை! தங்களுடைய சுயநலத்துக்காக அவர் கள் செய்த தந்திரம். உண்மையை நாம் அறி தல் வேண்டும். இன்று வரை உலகில் உள்ள அனைவரையும் எந்த ஒரு தேவதூதனும் முழு மையாகக் காப்பாற்றவில்லை. அதேபோல் எதிர் காலத்திலும் எந்த ஒருவரும் காப்பாற்றப் போவதுமில்லை. ஒவ்வொரு மனிதனும் சரி யான மனப்பான்மையோடு, நடத்தையோடு தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ள வேண் டும். ஞானிகள் எந்த நெறியில் செல்லவேண் டும் என்று குறிப்புத் தருவார்கள். அவர்கள் செய்யக்கூடியது அவ்வளவே.

10. 'கடவுள் தன்னுடைய ஒரே மகனை மனிதனின் நன்மைக்காக அனுப்பினர்' என் பதும் சர்ச்சு தன்னுடைய சுயநலத்திற்காகப் புனைந்த கட்டுக்கதை. இது உலக சரித்திரத் துக்குப் பொருந்தாத புனைந்துரை ஆகும். இது மனிதனின் மனச்சாட்சிக்கு விரோதமான கற் பனை. இறைவனின் அளவிற்கடங்காத சக் தியை இது எல்லைக்கு உட்படுத்துகின்ற செயல் ஆகும். இந்தக் கருத்திற்கு அறிவிலி கள்தாம் செவி சாய்ப்பர்; அறிவுடையோர் இதனைப் புறக்கணிப்பர்.

11. 'பாவமன்னிப்பு' என்ற முறையில் தனது தவறைப் பாதிரியிடம் ஒப்புக்கொள்வ தால் அவர் அத்தீயசெயலைத் தாமே மன்னித்து விடுகின்ருர் என்கிற கருத்தும் உண்மைக்குப் புறம்பானதே. இயற்கை விதி என்றும் மாரு தது. செயலும், விளைவும் மாற்றவொண்ணு தவை. தனது செயலின் விளைவை அனுபவிப் பதில் இருந்து யாரும் தப்ப இயலாது.

'பாவமன்னிப்பு' என்ற செயல் தொடரு வதால், பாவம் அதிகரிக்குமே அன்றி, குறை யாது; விவரம் புரிந்தோர் இத்தகைய மதக் கொள்கையினின்று விலகியிருத்தல் அவசியம்.

12. நன்றாகப் புல் மேய்ந்த பிறகு மான் ஒன்று தனது குட்டிகளுக்குப் பால் கொடுக்க விரைந்தது; அப்போது ஒரு புலி அதன்மீது பாய்ந்து அதைக் கொன்று அதன் ரத்தத்தைப் பருகியது; தனது தாகம், பசி அடங்கிய மகிழ்ச்சியில் வாலை ஆட்டியது. துடிதுடித்துக் கொண்டு இருந்த மானின் வாலும் ஆடியது. "புலி வாலை ஆட்டி, மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றது; கடவுள் தனக்கு உணவை அனுப்பியதற்காகத் தனது நன்றியைத் தெரிவிக்கின்றது பார்" என்று கிறிஸ்து மத நம்பிக்கையில் ஊறிய தாய் தனது குழந்தையிடம் கூறினாள். மகளோ ,'தாயே! அப்படியென்றால் மான் ஏன் வாலை ஆட்டுகின்றது " என்று கேட்டாள்! இது மிகவும் பொருத்தமான கேள்வி. மான் இறைவனுக்கு நன்றி செலுத்துமா? பட்டினி கிடக்கும் அதன் குட்டிகளின் கதிதான் என்ன? ஓர் உயிர் வாழவேண்டும் என்றால் அதற்காக வேறு உயிர் அவதிப்படுகின்றது! உயிர் வாழும் இனம் அனைத்திற்கும் இந்நியதி ஏதாவது ஓர் அளவில் பொருந்துகின்றது. தன்னுடைய உணவிற்காகக் கடவுளுக்கு மனிதன நன்றி செலுத்துவது நியாயமானது தானா? அது சுயநலம் அல்லவா? சுயநலம் எங்கு இருக்கின்றதோ அங்கு மதம் கிடையாது.

உலகில் வாழ்வதற்கு ஓர் உயிர் பிறிது ஒன்றை மாய்த்தே ஆகவேண்டும்; உலகியலின் குறை நிலை அது. எனவே விஷயம் தெரிந்த மனிதன் அக்குறை நிலையைப் போக்க முயல்வது இல்லை; மாறாக, இந்த உடம்பைக் கொண்டு சமுதாய நலனுக்குப் பாடுபட்டு ஆன்மீகத்தில் முன்னேறுகின்றான். எனவே உலக நிலைக்கு அப்பாற்பட்டு மேனிலை அடைவதே இக்குறையைப் போக்கும் நெறி முறை. எனவே தியாக புருஷன் தான் உயிர் வாழ்வதற்காக உண்பதில்லை; தெய்வப் பணியைச் செய்ய உடல் தகுதி பெறவேண்டும் என்பதற்காக உண்கின்றான்.

உலகவாழ்வில் திளைத்து இருக்கும் போகிக்கும் மதம் தேவைப்படுகின்றது. வியாதி, எதிரி, பொருள் நஷ்டம், எதிர்பாராத இன்னல்கள் என்று பலவித சோதனைகளில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள மதத்தை அவன் நாடுகின்றான். மதநெறிக்கு ஏற்பச் சில சடங்குகளைச் செய்வதால் தனக்கு நன்மை கிட்டும் என்று அவன் திடமாக நம்புகின்றான்; அவன் நம்பிக்கையை எவரும் குலைக்க வேண்டாம். படிப்படியாக அவன் முன்னேறி ஆன்மீக நெறியின் மேன்மையை உணர வழிவகுத்தல் சாலச் சிறந்தது.

அற்புதங்களில் மயங்கிக் கிடக்கும் மக்களும் உண்டு. நோயைக் குணப்படுத்துதல், குருடனுக்குப் பார்வை கிடைத்தல், முடமானவனை நடக்கும்படி செய்தல், இறந்தவனுக்கு உயிர் தந்து எழுப்புதல்—போன்று பலதரப்பட்ட அதிசயச் செயல்கள் விவரிக்கப்படுகின்றன; இவை சாதாரண மனிதனை மிகவும் பாதிக்கின்றன. எத்தனையோ மதவாதிகள் இத்தகைய அற்புதங்களைச் செய்துள்ளனர். இத்தகைய ஒருவரைக் கடவுளின் அவதாரம் என்று கருதி அவர் பின்னே செல்வது பாமரமக்களின் இயல்பு.

உண்மையான மதத்தில் அற்புதச் செயல்கள்–சித்திகள்–இடம் பெறுவதில்லை. சித்திகளைக் கீழ்த்தரமானவை என்றே சமயம் நிராகரிக்கின்றது. எத்தனையோ பேர் எத்தனையோ அற்புதங்களை நிகழ்த்திய போதிலும், உலகம் அப்படியே உள்ளது; குறிப்பிடத் தக்க முன்னேற்றம் எதுவும் இல்லை. பல ஆயிரக்கணக்கான குருடர்களுக்குப் பார்வை தந்துவிட்டால் சமுதாயத்திற்கு அவர்களால் விளையும் பயனைக் காட்டிலும், ஒருவருக்கு ஆன்மீக போதம் உண்டாக்குவது அதிகப் பயனைத் தரும்; சமுதாயத்திற்கு அவர் என்றுமே விலை மதிப்பற்ற சொத்து ஆகின்றார்.

புத்தர் அற்புதச் செயல்களை மிகவும் கண்டித்தார். ஆன்மீகநெறிக்கும், சித்திக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை நன்கு உணர்ந்த ஆத்ம ஞானிகளுள் அவர் சிறப்பிடம் வகிக்கின்றார். அவருடைய வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியின் மூலம் சித்திகளை அவர் பொருள்படுத்துவது கிடையாது என உணர்த்துகிறார். தனது ஒரே மகனை இழந்த இளம் விதவை தனது அவல நிலையைக் கருணைக் கடலான புத்தரைச் சந்தித்துக் கூறினாள். 'தங்களின் பெரும் கருணையினால் மகனை உயிர்ப்பித்துத் தாருங்கள்' என்று வேண்டினாள். கல்லும் கரைந்துருகும்படி அவள் புலம்பினாள்.

அமைதியே உருவெடுத்த அண்ணல் தன் அருட் பார்வையினால் அவளைச் சாந்தப்படுத்தினார். சாவு என்பதே நிகழாத ஒரு வீட்டில் இருந்து சிறிது கடுகு வாங்கிவந்தால் அவள் விருப்பம் நிறைவேறும் என்று கனிவோடு கூறினார். தன் மகன் பிழைத்து எழ ஒரு வாய்ப்புக் கிடைத்ததே என்று எண்ணி, தன்னுடைய சோகத்தையும் மறந்து வீடு வீடாக ஏறி இறங்கினாள் அம்மாது. மரணமே சம்பவிக்காத வீடு ஒன்றை அவளால் காண முடியவில்லை. மிகவும் ஏமாற்றத்தோடும், துயரத்தோடும் திரும்பி வந்து நின்றாள்! "உலகில் எல்லா மனிதர்களுக்கும் என்ன நிகழ்கின்றதோ அதுதான் உனக்கும் நிகழ்கின்றது. இதை எப்படி மாற்ற இயலும். உனது மனதைத் தேற்றிக் கொள்" என்று கனிவோடு கூறினார் புத்தர். அவருடைய சொற்கள் அவள் துயரத்தைக் குறைத்து, மன அமைதியை அளித்தன. அவளது மனமாற்றம் ஓர் அற்புதச் செயலே. இயற்கையுடன் இயைந்த இந்தச் சித்தி பாராட்டத் தக்கது. மன அமைதியை இழந்த அனைவருக்கும் இது நன் மருந்து.

"உன்னுடைய தந்தையைப் போல் நீயும் பூரணமாக இரு—Be ye perfect as thy Father in Heaven is perfect"— என்பது ஏசு கிறிஸ்துவின் சொல். மதத்தின் கருப்பொருள் இதுவே. காலம் இதை அழிக்காது. மனித சமுதாயத்திற்குத் தரப்பட்ட லட்சியம் இது. அதை எய்த முழு மனதுடன் ஒருவன் முயல வேண்டும். அதை அடையும் நெறி பொதுவானது; அனைத்து மதங்களும் ஒப்புக்கொள்ளக் கூடியது. "பிறரிடம் குடிகொண்டுள்ள தெய்வீகத் தன்மையை உணர்ந்து, அவர்களுக்குப் பணிபுரிய வேண்டும்; ஐம்புலன்களையும் கட்டுப்படுத்து; புலன் வசப்பட்டு அழியாதே." மனதை வெல்லும் அளவிற்கு மனிதன் முன்னேறுகிறான். மனதை முற்றிலும் துறந்த நிலையே பேரானந்தத்திற்கு வழிகோலும்.

உலக அன்பு என்றும் களங்கம் உடையது; தெய்வீக அன்பும், தெய்வமும் ஒன்றே; அங்கு கட்டுப்பாடுகள் இல்லை; வியாபார நோக்குக் கிடையாது. அங்கு அச்சம் கிடையாது. இறைவனும், அச்சமும் ஒன்று சேரா. 'கடவுளிடம் பயம்' என்பது வெறும் கற்பனை! பயம் இருந்தால் பகவான் இல்லை; பகவான் இருந்தால், பயம் இல்லை. எனவே சாதகன் தெய்வீக அன்பில் மேலோங்க வேண்டும்.

ஆன்மீக ஞானம் அடைந்தவன் எங்கும் அப்பேரொளியைத் தரிசிக்கின்றான். ப்ரக்ஞானம் ப்ரஹ்ம — என்பதே அவன் அனுபவம். அதை உணர்ந்து சத்தியத்தில் நிலைத்திருக்கின்றான். உயிரினங்கள் அனைத்தும் அப்பெரிய நிலையைப் படிப்படியாக எய்தும் பயணத்தில் ஈடுபட்டுள்ளன; வாழ்வின் குறிக்கோள் இதுவே. மானிட இனத்திற்கு வேதாந்தம் புகட்டும் உபதேசம் இதுவே.

தத்துவத்தில் முன்னேற்றம் அடையாத சமயத்தில் வெறும் மூடநம்பிக்கையே அடிப்படையாக அமைந்திருக்கும். அந்த மதக்கோட்டில் பேய், பிசாசு, குட்டிச்சாத்தான் போன்ற கற்பனைகள் நிறைய உண்டு. மனிதனின் வாழ்வில் குறுக்கிட்டு, அவனைப் பயமுறுத்தி, மயக்கி, தீவினைகளில் ஈடுபடுத்தும் இத்தகைய பிசாசுகளை விரட்டும் பொறுப்பை அலாதியாக மதவாதிகளே ஏற்றார்கள்! இந்தப் பூசாரிகள் தமது வேலையை மிகத் திறமையாகச் செய்து மனிதனிடம் குடி புகுந்த பிசாசை விரட்டி ஓட்டினார்கள்! இது நாகரிகம் முற்றாத நிலையில் மனிதர்களிடம் மதம் தோற்றுவித்த கற்பனையாம்! விஞ்ஞானம் முன்னேற்றம் அடைந்த பின் பிசாசும், பேயும் உண்மையில் ஆவிகளாக மாறிவிட்டன (evaporated away). இவை உண்மையில் மனதின் கோளாறுகளே என்று மனத் தத்துவ ஆராய்ச்சி நிரூபிக்கின்றது. நோய்வாய்ப்பட்ட மனமே பிசாசு. மனம் அமைதியுற்றால், அதைப் பீடித்த பிசாசும் விரட்டப்படுகின்றது. முன்னேற்றமடையாத மதங்களில் உள்ள இந்த மூடநம்பிக்கை தற்போது களையப்பட்டு வருகின்றது.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய பெரிய ஞானி; உலக மதங்களுக்கு அவர் பெரும் அருள்புரிந்துள்ளார். 'மதம் சாஸ்திரங்களிலோ, ஆலயங்களிலோ, சர்ச்சிலோ, மசூதியிலோ இல்லை; ஆத்ம சாதனையே சமயம்'—இது அவர் உபதேசித்த அருள் வாக்கு. அவர் ஹிந்து மதத்தை அனுஷ்டானம் செய்தார்; அதே தீவிரத்துடன் கிறிஸ்துவ, இஸ்லாம் மதங்களையும்

பின்பற்றினர். சமயம் என்பது வெறும் பேச்சு அன்று; அது அனுபவம். எல்லா மதங்களும் ஒரே அனுபவத்தைத் தருகின்றன என்பதைத் தாமே அனுஷ்டித்துக் கண்டார். கிறிஸ்துவ மதமும் இறைவனை அடைய ஒரு நெறி என்றுஎடுத்துக்காட்டினர். கிறிஸ்தவர்களுக்கு அவர் ஓர் அறிவுரை தந்தார். அவர்கள் பாவத்தைப் பற்றி அதிகம் பேசினர்கள். இது எதிர்மறை உணர்வையே தூண்டும். மனிதனின் நிஜசொரூபம் தெய்வீகம். அதையே ஞாபகப்படுத்த வேண்டும். பாவம் என்பது மாறி அமையும் நிலை. எனவே பாவத்தை எண்ணித் துயரத்தில் ஆழ்ந்து போகாது, இறைவனைப் பற்றிய ஆன்மீக எண்ணத்திலே திளைக்க வேண்டும். ஆன்மீகம் உள்ள இடத்தில் பாவ சிந்தனை அடியோடு அழிகின்றது. ஸ்ரீராமகிருஷ்ணரின் இந்த அறிவுரையை கிறிஸ்தவ சமுதாயம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பரமஹம்ஸரின் சீடர் சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் பேசும் போது, "அமிருதமயமான புதல்வர்களே" என்று அவையோரை விளித்தார்! 'ஆ! எத்தனை சுகமான சொற்கள்! பாவி, பாவி என்று கேட்டுப் புளித்துப்போன எங்கள் செவிகளில் தேன் பாய்ந்தது போல் உள்ளது' என்றனர் அவையோர். ''ஒரு மனிதனைப்பாவி என்று குறிப்பிடுவதேபெரிய பாவம்" என்பது சுவாமி விவேகானந்தரின் கொள்கை.

உலகம்முழுவதும் கிறிஸ்துமயமாகவேண்டும் என்று பல வழிமுறைகளையும் கடைப்பிடித்து மதமாற்றம் செய்யும் பாதிரிகளிடம் விவேகானந்தர் கூறினர்: ''டாம், ஹென்றி, ஜாக் ஆகிய அனைவருக்கும் ஒரே அளவில் தைக்கப் பட்ட மேற்சட்டையை நீங்கள் தருகின்றீர்கள்! இந்தக் கோட்டு ஜாக்கிற்குப் பொருந்தாவிட்டால், அவனால் எதுவும் செய்ய முடியாது; கோட்டு இல்லாமல் போகவேண்டியதுதான். இது பொருந்தாத தத்துவம். இயற்கையில் எல்லா உயிரினத்திற்கும் முன்னேற வாய்ப்பு உண்டு. ''வேற்றுமையில் ஒற்றுமை'' என்பது இயற்கை, விஞ்ஞானம், மதம் அனைத்திற்கும் பொருந்தும் விதி.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் இலட்சிய ஆன்மீக வாழ்வு நம் அனைவருக்கும் வழிகாட்டுகின்றது.

"மதத்தைப்பற்றி வீண் பேச்சுப் பேசி, கோட்பாடுகளை ஆராய்ந்து காலம் கடத்தாதே. ஆத்ம சாதனத்தில் ஈடுபடு. மதங்களில் வேற்றுமையைக் கிளறாதே. அனைத்தும் தெய்வீகத்தை எய்தப் பயன்படும் பல்வேறு பாதைகள்.'' அவருடைய இந்த உபதேசம் வெறும் உரை அன்று; அவர் அனுபவத்தில் பெற்ற உண்மை. எனவே அதற்கு முக்கியத்துவம் அதிகம். மதங்களிடையே மேற்போக்காகக் காணப்படும் வேற்றுமைகளை அவர் அழகாக விளக்குகின்றார். "அன்புள்ளம் கொண்ட அன்னை தனது குழந்தைகளின் ஜீரண சக்தி, சுவை ஆகியவற்றைப் பொறுத்துச் சமையல் செய்கின்றாள். ஆதிபராசக்தியாகிய அன்னையும் அன்பே உருக்கொண்டு தனது குழந்தைகளின் மனப்பக்குவம், பரிபாகம் ஆகியவற்றைப் பொறுத்துப் பல சாதனை முறைகளை அமைத்துத் தருகின்றாள்." நாகரிக உலகில் மனிதகுலம் இந்த உபதேசத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். வீண் சச்சரவும், மனத்தாங்கலும், மற்றவரை எள்ளி நகையாடும் மனப்பான்மையும் அழியவேண்டும். 'இறைவனின் அன்பைப் பெறும் உரிமை எங்கள் மதத்தவர்களுக்குமட்டுமே உரியது'என்ற பிற்போக்கான கருத்தைக் கைவிட வேண்டும். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஆழ்ந்த தத்துவ உபதேசம் நம்மை நன்னெறியில் செலுத்தட்டும்.

கேள்வி: (1) வார்தாவில் வினோபாவுடன் நாங்கள் பேசிக்கொண்டிருந்தபொழுது, ''மதம் என்பது நவீன மனிதனிடம் தோல்வி அடைந்து விட்டது. உண்மையான சமய உணர்வு ஒன்றே இனி அவனைக் காப்பாற்றும்''என்று கூறினர். ஆனால் தாங்களோ ''மதம் மனிதனுக்கு மிகவும் அவசியமானது" என்று கூறுகிறீர்கள். இரண்டுக்கும் இடையே வேறுபாடு இருப்பதாகத் தோன்றுகிறதே.

பதில்: மதம் என்ற சொல்லால் அவர் எதைக் குறிக்கின்றார்? பொருளற்ற பாங்கில் நடந்துகொள்ளும் மதவாதிகளின் போக்கைப் பற்றியே அவர் சொல்லியிருக்கக்கூடும். ஆனால் தன்னை உயர்த்தும் பண்பாட்டுக் கல்வியையே நான் சமயம் என்ற பெயரால் குறிப்பிடுகிறேன். அது அன்றாடம் உண்ணும் உணவைப் போலவே நமக்கு மிகவும் அவசியமானது.

ஸ்ரீமத் பாகவதம்

(சுவாமி ஸதானந்தர்)

“ஓ முகுந்தா, ஆதிதேவா, என்பால் திருப்தியுடையவர், கருணை உடையவர் ஆவீராக. உம்மைத் தியானிப்பதால் புத்தி தெளிவடைகிறது, கடவுள் தத்துவங்கள் விளங்குகின்றன, சகுண, நிர்க்குண நிலைகள் விளங்குகின்றன. அலகிலா விளையாட்டுடையோனே, தீராத விளையாட்டுப் பிள்ளையே, ஆனந்த நர்த்தனமிடு கருணாகரக் கடவுளே இங்கு எழுந்தருளுவீராக. அருள்பாலிப்பீராக.

என் வார்த்தைகள் அனைத்தும் உண்மையானவையாக இருக்கட்டும்; கடவுளைப்பற்றியே இருக்கட்டும். வீணான வார்த்தை ஒன்று கூட வராமல் இருக்கட்டும். பஞ்சபூதங்களையும் சிருஷ்டித்து அவைகளைக்கொண்டு இந்த ஊனுடம்பாம் ஆலயத்தையும் அமைத்து உள்ளத்தைக் கர்ப்பக்கிரஹமாக ஆக்கி ஆங்கு என் எண்ணத்திலும் நினைவிலும் யாண்டும் பள்ளிகொண்டிருக்கும் என் பெருமாளே, உனக்குப் பல்லாண்டு பல்லாண்டு! என்றும் உன் நாமமே வெல்க! போற்றி எங்கும் ராம ஜயம். ஞான, கர்ம இந்திரியங்களையும், அந்தக்கரணத்தையும் பஞ்சபூதங்களையும் படைத்த எம்பெருமானே! யாவும் உன் புகழையே பாடுகின்றன. உனது அம்ஸமாகிய வியாச பகவானை வணங்குகிறேன். அவர் இவ் உலகுக்கு ஞான அமிர்தத்தை வழங்கினார் அன்றோ!”

இப்படிப் பிரார்த்தனை செய்துவிட்டு மகா முனிவராகிய சுகதேவர் பரீக்ஷித்தைப் பார்த்து இங்ஙனம் பகர்ந்தார்: “அன்புள்ள அரசனே, முன்பு ஒரு காலத்தில் நாரத மகரிஷியானவர் பிரம்ம தேவரிடத்தில் இதே விஷயங்களைப் பற்றிக் கேட்டார். யார் இந்த ஜகத்தை, இயற்கையைத் தோற்றுவித்தாரோ அவரிடத்திலேயே கேட்கப்பட்டது. இந்த இயற்கைக்கே வேதம் என்று பெயர். அதன் இயல்பு, நடைமுறையைப் பற்றிய அறிவுக்கும் வேதம் என்று பெயர். இயற்கையைப்பற்றி அறிந்துகொண்ட விஷயங்களை மொழியில், நூல் வடிவில் அமைத்தார்கள். அவைகளுக்கு வேதம் என்று பெயர். இந்த அறிவை எல்லாம் பிரம்ம தேவர் ஸ்ரீ ஹரியிடமிருந்து பெற்றார். தன் குமாரனாகிய நாரதருக்குத் தான் ஸ்ரீஹரியினிடம் கேட்ட அனைத்தையும் சொன்னார்.

ஸ்கந்தம் 2 அத்தியாயம் 5.

தேவரிஷியாகிய நாரதர் பிரம்மதேவரிடம் மிக்க பணிவுடனும் மரியாதையுடனும் இங்ஙனம் கேட்டார்: தேவ தேவா, இவ்வுலகின் பிதாமகரே, சிருஷ்டிப்பதற்கென்று படைக்கப்பட்டவரே, தோன்றி வந்துள்ள அனைத்துக்கும் முதலில் தோன்றியவராகிய உம்மை வணங்குகிறேன். நீர் மனமுவந்து, கிருபை கூர்ந்து எனக்கு ஆத்ம தத்துவத்தைப் புகட்டியருளுவீராக. தேவரீர் சிருஷ்டி கிரமத்தையும் எனக்கு விளக்கியருளுவீராக. அது எப்படி நிலைபெற்றிருக்கிறது, அதை நிர்வகிப்பவர் யார், அது எதில் சென்று ஒடுங்குகிறது, பிறகு எப்படி மறுபடி வியக்தமாகிறது ஆகிய விஷயங்களையும் தெரிவித்தருளுவீராக. சென்றவைகளையும், நிகழ்பவைகளையும், இனி வரப்போகின்றவைகளையும் முக்காலத்தையும் அறிந்தவர் நீர். இப்பிரபஞ்சத்தைச் சிருஷ்டி செய்தவர் தாங்களே. ஆகவே, இவ்விஷயங்கள் தத்துவங்கள் யாவும் உள்ளங்கை நெல்லிக்கனி போன்று உமக்குத் தெரிந்தவைகளே. தங்களுக்கு நிலைக்களம், ஆதாரம் எது? தங்களுக்கு வேத வேதாந்தங்களைப் புகட்டியவர் யார்? யாருடைய உத்தரவை சிரமேற் கொண்டு இப்பணிகளை, கிருத்தியங்களைத் தாங்கள் இயற்றி வருகிறீர்கள்? தாங்கள் உண்மையில் யார்? தங்கள் நிஜசொரூபம் யாது? உம்முடைய இச்சா சக்தியால், மாயையால், கிரியா சக்தியால், ஞான சக்தியால் இப்பஞ்ச பூதங்களையும் தோற்றுவித்து, நிலைநிற்கச் செய்து வருகிறீர்கள். சிரமமின்றி அலகிலா விளையாட்டாக இக்கிருத்தியங்களைத் தாங்கள் விகாரமற்று இருந்து கொண்டு, சிலந்தி தன்னிடத்திருந்து நூல் வலையைத் தோற்றுவித்து அதில் வசிப்பது போன்று இருந்து வருகிறீர்கள்.

தேவரீருக்கு மிக்கது அல்லது சமமானது இப்பிரபஞ்சத்தில் என்ன இருக்கிறது? பல் வேறுபட்ட சுபாவம், அறிவு, ஆற்றல், வடிவம் வாய்ந்த மக்கள் இனங்கள், இரண்டு கால்,

நாலுகால் உயிர் வகைகள் மற்றும் நிறத்தாலும், குணத்தாலும், வஸ்துவாலும் பல்வேறுபட்ட பொருள்கள் — சேதனம் — அசேதனம், ஸ்தாவர ஜங்கம உயிர்கள், யாவும் தேவரீரால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. எத்தனை கோடி உயிர்வகைகள்! ஆயினும், தேவரீரும் கடுமையான விரதம், தவம், அனுஷ்டானம் செய்து வருவதைப் பார்த்து என் அறிவு குழம்புகிறது. தாங்கள் யாரைத் தியானிக்கிறீர்கள்? தமக்கும் மேலான மூர்த்தி, இறைவன், தமக்கு மூலகாரணமான ஆண்டவன் ஒருவர் உள்ளாரா? அனைத்தையும் அறிந்த தேவரீர், அனைத்து உயிருக்கும் பிதாமகராகிய தேவரீர் எனக்கு இவ்விஷயங்கள் எல்லாவற்றைப் பற்றியும் விளக்கியருள வேண்டுகிறேன்."

பிரம்மதேவர் சொன்னர்: "என் அன்புள்ள குழந்தாய்! உனது விசாரம் (இக்கேள்விகள்) உயர்வானவை. அருள்தாகம் கொண்டவனுக்கே இந்த விசாரம் எழும். இக்கேள்விகள் மூலம் நீ எனக்கும் நன்மை புரிந்திருக்கிருய். ஏனென்ருல் இதற்கு விடையாக நான் ஆண்டவனின் புகழ்பாட, ஆண்டவனைப் பற்றியே ஸ்மரிக்கச் செய்திருக்கிருய்.

குழந்தாய்! நீ என்னையே ஈஸ்வரன் என்று அழைத்தாய், சொன்னய். அதுவும் பொய் அன்று, உண்மையே. ஏனென்ருல் பகவத் சம்பத்துகள், ஈஸ்வர விபூதிகள் எனக்கும் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனக்கும் மேற்பட்ட, அப்பாற்பட்ட பரமமூர்த்தி, பரப்பிரம்மம் பற்றி அறியாதவனுக நீ அங்ஙனம் பகர்ந்தாய். சூரியன் எங்ஙனம் தன் வெளிச்சத்தால் காணக்கூடிய பொருள்களை எல்லாம் நம்மால் பார்க்க இயலும்படி செய்கிருனே அதேபோன்றுதானே வியக்தமாகும் இப்பிரபஞ்சத்தை நான் சிருஷ்டித்தது போன்று காட்டிக்கொண்டிருக்கிறேன்.

ஜீவர்களை உண்மையை உணராமல் செய்து என்னைச் சிருஷ்டிகர்த்தா என்று நினைக்கும்படி செய்கிறது மாயாசக்தி. அந்த மாயையின் யஜமானனுகிய ஸ்ரீவாசுதேவரை வணங்குகிறேன். அந்த மாயாதேவி என் ஆண்டவனின் முன் வெட்கி நிற்கிருள். என் ஆண்டவனின் சன்னிதியில், அவனது அருட்பார்வையில் நிற்கும் பொழுது அவளுக்கு வெகுவிசனம், துன்பம் உண்டாகிறது. "என் பிரபுவை, என் ஆண்டவனை மறக்கும்படி ஜீவர்களைச் செய்கிறேனே, ஆ, என் பிரபுவே! என் ஆண்டவனே!! எனக்கு எத்தகையகொடிய கட்டளையை இட்டிருக்கிருய்!" என்று ஏங்குகிருள். அஞ்ஞானத்திலும், மாயையிலும் மறைக்கப்பட்டவர்களாக மந்த புத்தியுடைய மக்கள் யான் எனது என அகங்கார மமகாரம் கொள்கிருர்கள். உண்மையில் உடையவன் ஆண்டவன் ஒருவனே. மானுட வியக்தி, ஜீவ வியக்தி தாற்காலிகமானது, நிலையற்றது, மாறும் தன்மையது. நாடகத்தில் போன்று பல்வேறு பாத்திரங்களாக வேஷம் போட்டு வந்தது. உள்ள பொருள் ஒன்றே. அதுவே பலவாகத் தோன்றிக்கொண்டிருக்கிறது. எல்லாம் அவனே, எல்லாம் அவன் உடைமையே, எல்லாம் அவன் செயலே, அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது. அவன் தூணிலும் இருக்கிருன், துரும்பிலும் இருக்கிருன். ஓர் அணுவைச் சதகோடி கூறிட்ட துணுக்கிலும் உளன். என் ஆண்டவனே அனைத்தின் நாயகன். அவனே யாவற்றுக்கும் மேலான பொருள். அவனிடத்திருந்தே வேதங்களும், பக்தர்களும், முனிவர்களும், வேள்வியும், தானமும், யோகமும், தவமும், ஞானமும், புண்ணிய லோகங்களும் எல்லாமும் தோன்றி வந்துள்ளன. தேவ தேவிகளும் பிரபஞ்ச கிருத்திய கர்த்தாக்களும், பிரஜாபதிகளும் மற்ற யாவரும் அப்பரம புருஷனிடத்திருந்தே வந்துள்ளனர். என்னைத் தோற்றுவித்தவரும் அப்பரமனே. அவரேதான் இப்பிரபஞ்சத்தையும் தோற்றுவித்துள்ளார். உயிருக்கு உயிராகிய அப்பரம்பொருள் இவ்வளவையும் செய்துவிட்டு இவற்றிற்குச்சாட்சிமாத்திரமாய் இருக்கிருர். சாட்சி மாத்திரமாய் இருப்பது என்பது மிகமிக உயர்ந்த நிலை. ஆசிரியர் பிள்ளைகளுக்கு எல்லாப்பயிற்சிகளும் தருகிருர். அவர்கள் மைதானத்தில் விளையாடுகிருர்கள், வகுப்பறைகளில் படிக்கிருர்கள், பரீக்ஷை மண்டபத்தில் பரீக்ஷை எழுதுகிருர்கள், பிறகு வீட்டிற்குப் போகிருர்கள். எல்லாவற்றுக்கும் ஆசிரியர் சாட்சியாய் இருக்கிருர். அப்பா, மகளின் சங்கீதத்துக்கு ஆசிரியரை அமர்த்துகிருர். ஆசிரியர் பயிற்சி தருகிருர். ஒருநாள் மகள் தன் சங்கீத ஞானத்தைக்

காட்ட வீணையை அப்பாவுக்கு வாசித்துக் காட்டுகிறாள். அப்பாவுக்கு மிகவும் மகிழ்ச்சி உண்டாகிறது. இந்த உலக விவகாரங்களில் ஆசிரியருக்கும் பெற்றோருக்கும் இன்பதுன்பம், மகிழ்ச்சி, வருத்தம் அடைவதற்கு இடமுண்டு. ஆண்டவனுக்கோ எதைக் குறித்தும் மகிழ்ச்சியுமில்லை, துக்கமுமில்லை. அப்பா கொடுத்த செல்வத்தைக் கொண்டு மகன் வியாபாரம் செய்கிறான், வீடுகட்டுகிறான். அதேபோன்று என் ஆண்டவனின், என் பிரபுவின் ஆணையால், சக்தியால் நான் (சிருஷ்டிக்கிறேன், நான் சிருஷ்டிகர்த்தா போன்று தென்படுகிறேன். இந்தச் சக்தியும் ஞானமும் என் ஆண்டவனுடையவை.

கடவுள் உண்மையில் குணம், குறி அற்றவர். எந்த உபாதியும் அற்றவர். ஆனால் மாயாவியாகிய என் ஆண்டவன் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் ஆகிய முததொழிலின் நிமித்தம் சத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக் குணங்களை ஏற்படுத்திக் கொள்கிறார். திரவ்ய (பஞ்ச பூதங்கள்) (பிரபஞ்ச நிர்வாகம் சம்பந்தப்பட்ட ஞானம்) சிரியாஸ்ரய (ஞானேந்திரியங்கள்) முக்குணங்கள் (இந்திரியங்களை செயலில் தூண்டும் சக்தி) ஆகிய இவைகள் எல்லாம் ஆண்டவனின் கட்டளையை நிறைவேற்றுகின்றன. அவனது கிருத்தியங்களைச் செய்கின்றன. அவனது விளையாட்டுத் தோழர்களாகின்றன. என் ஆண்டவன் கண்ணன் பிருந்தாவனத்தில் மாடுகளை மேய்த்தான், புழுதியில் புரண்டான், யமுனையில் குதித்து விளையாடினான். மரங்களில் ஏறினான். கோபாலர்களும் கோபிகளும் அவனுடன் சேர்ந்து விளையாடி மகிழ்ந்தார்கள். அவர்கள் பெற்ற ஆனந்தத்துக்கு அளவில்லை. பூமாதேவி மகிழ்ந்தாள். யமுனா தேவி மெய்மறந்தாள், பிருந்தாவனப் புழுதி பிரசாதமாயிற்று. மாடும், மரங்களும், கோபாலர்களும் யாவரும் புண்ணியம் எய்தினர். அவர்கள் தபஸ் நிறைவேறியது. ஆண்டவன் தன் ஆனந்த நிலையை அங்ஙனம் புற உதவி, பிறபொருள்கள் துணையைக்கொண்டு தானே ரசித்தான். பிரகிருதியும் அவனே, ஆண்டவனும் அவனே. பிரகிருதி—மாயை என் பிரபுவின் என் ஆண்டவனின் அடிமை. அவனே இந்த ஜகத்துக்கு, விஸ்வத்துக்கு நாதன், பதி, ஈசன். குழந்தாய், நாரதா, புருஷோத்தமனாகிய அப்பரமனே எனக்கும் ஈஸ்வரன், ஆண்டவன் ஆகிறான். உத்தமமான பக்தர்களுக்கு இவ் விஷயங்கள் எல்லாம் விளங்குகின்றன. பெயரளவில் ஜீவன், பெயரளவில் பிரகிருதி. பெயரளவில் அலையும் கடலும் வேறுபட்டது போன்று தென்படுகிறது. நாம ரூப பேதத்தால் வேறு வேறு ஆகிவிடாது. முக்குண சம்பந்தத்தால் ஜீவ வியக்தி தோன்றியுள்ளது. இம் முக்குணங்களே ஆண்டவனை அறியவும் துணை செய்கின்றன. மாயையின் தலைவனாகிய அப்பரம பிரபு லீலையில் திருவுளம் கொண்டவனாகத் தானே இங்ஙனம் பலவாக வடிவெடுத்துள்ளான். இயற்கையாக, அதன் நியதியாக, அதன் ஓயாத இயக்கமாக வினையாக வடிவெடுத்துள்ளான். இது அவனது கிரியா சக்தி என்று சொல்லப்படுகிறது.

பிரபஞ்ச தோற்றத்துடன் கால தத்துவம் தோன்றுகிறது. ஆதி அந்தமில்லாத பொருளுக்குக் காலக் கணக்கு இல்லை, கணக்கிட முடியாது. தோற்றம், வளர்ச்சி, தேய்வு, மறைவு உள்ள பொருளுக்குத்தான் காலக் கணக்கு எடுக்க முடியும். காலத்தில் அவை கட்டுப்பட்டவை. ஆண்டவன் இச்சைப்படி முக்குணங்களின் சமநிலை மாறுபாடு அடைகிறது. முக்குணங்கள் பல்கோடி விதமான அளவைகளில் கூட்டுப் பொருளாகி இத்தனைகோடி உயிர்கள் ஜடம், சேதனம், சுபாவம், அன்பு, அறிவு, ஆற்றலில் தாரதம்மியம் கொண்டவைகளாகத் தோற்றத்துக்கு வந்துள்ளன. (TPJ என்றால் ரயில்வே சுருக்கெழுத்தில் திருச்சிராப்பள்ளி ஜங்ஷன் என்று பொருள். டிக்கட்டில் அச்சடிக்க, தந்தியில் சுருக்கமாக அடிக்க ரயில் பாஸில் எழுத இப்படி இருபத்தாறு ஆங்கில எழுத்துக்களைக்கொண்டு இந்தியாவில் உள்ள எல்லா ஸ்டேஷன்களுக்கும் சுருக்கெழுத்து அமைத்துள்ளார்கள். இரட்டிப்பு இல்லாமல், தவறு இல்லாமல் இப்படி அமைக்க முடிகிறது. இதே போன்றது முக்குணங்களின் கலவை வீதாசாரம். எத்தனை கோடி விதங்களில் அமைக்க முடியும் என்று யோசித்துப் பாருங்கள். அதிசயமாய் இருக்கும்). சிருஷ்டியில் பேதம் இங்ஙனம் வந்தமைந்தது. பேதமே சிருஷ்டி எனப்படு

கிறது. எங்கோ ஆவியாகி, எங்கோ ஒன்று சேர்ந்து மேகக் கூட்டமாகி, எங்கோ சஞ்சரித்து, எங்கெங்கோ எவ்வளவோ விதமான அளவைகளில் மழைபெய்கிறது. இதை யாரும் இயக்கவில்லை, திட்டமிடவில்லை. இயற்கையின் நியதி இங்ஙனம் நிகழ்கிறது. அதே போன்று பல்வேறு அளவையில் முக்குணங்கள் தாமே கூட்டுச் சேர்ந்து பலவகை ஸ்தாவர, ஜங்கம உயிர்கள், ஜட சேதனப் பொருள்கள் தோற்றத்துக்கு வருகின்றன. அவை பலவிதமாக வினையாற்றுகின்றன. இந்த வினையினின்று மஹத்தத்துவமும், அறிவும் தோன்றுகின்றன. மஹத்தத்துவத்தின் பேரில் சத்வம், ரஜஸ் என்னும் இருகுணங்கள் மோதும்போது தமோகுண பிரதானமான அகங்கார தத்துவம் தோன்றுகிறது. இந்த உடல், அறிவு, செயல் அனைத்தையும் தன்னுடையவையேதான் என்று கருதிக்கொள்கிறது. இந்த அகங்கார தத்துவம் மூன்று விதமாக அமைகிறது. சாத்விக அகங்காரத்திவின்று சிறு தேவதைகள், தேவர்கள் தோன்றினர்கள். ராஜச அகங்காரத்தினின்று இந்திரியங்கள் தோன்றின. தமோகுண அகங்காரத்திவின்று சூக்ஷ்ம பஞ்சபூதங்கள் தோன்றின. தமோகுண அகங்காரத்துடன் மேலும் தமோகுணம் சேரும்போது ஸ்தூல ஆகாயம் தோற்றத்துக்கு வருகிறது. சப்தம் ஆகாயத்தின் தன்மாத்திரை, அதன் விசேஷ அம்ஸம், அதன் குணம் ஆகிறது. சப்தத்திலிருந்து காண்போன் — காணப்படுபொருள் (திருக்-திருச்யம்) என்கிற இரட்டை நிலைமை ஏற்படுகிறது. 'இதோ அந்த யானை' என்று ஒருவன் உரக்கக் கூவுவானகில் அப்படிச் சப்தமிடுகிறவனையும், யானையையும் நாம் கண்ணல் பார்க்காவிட்டாலும் கூவிய மனிதனையும் அவன் எதைப் பார்த்துப் பயத்தாலோ, ஆச்சரியத்தாலோ, உரக்க சப்தமிட்டானே அப்பொருளையும் நம்மால் உணர்ந்து கொள்ள, புரிந்துகொள்ள முடியும். ஆகாயத்தில் சலனமுண்டாகி வாயு தோன்றியது. ஸ்பர்சம் வாயுவின் தன்மாத்திரை ஆகும். வாயு ஆகாயத்திலிருந்து தோன்றியதால் வாயுவானது ஆகாயத்தின் தன்மாத்திரையாகிய சப்தத்துக்கு உறுபொருள், துணைப்பொருள், தேவையான பொருளாக உள்ளது. வாயுவோ சரீரத்தைப் போஷிக்கிறது, சக்தி தருகிறது. இந்திரியங்களையும் மனதையும் இயக்குகிறது. வாயுவிலிருந்து அக்னி தோன்றுகிறது. (பல வித வாயுக்கள் பெரிய எரி பொருள்களாக உபயோகப்படுவதை இன்று நாம் பார்க்கிறோம்). காணுதல் அல்லது ஒளி அக்னியின் தன்மாத்திரை ஆகும். கண் அதற்குரிய இந்திரியம் ஆகும். (பாட்டன், முப்பாட்டன், தகப்பன் குணங்கள் ரத்த சம்பந்தத்தால் மகனுக்கு வருவது போன்று) பரம்பரையினுல் சப்தம், ஸ்பரிசம் ஆகிய குணங்களும் தேயுவுக்கு உண்டு.

அக்னியில் சலனமுண்டாகி தண்ணீர் தோற்றத்துக்கு வருகிறது. சுவை ஜலத்தின் தன்மாத்திரை ஆகும். நாக்கு அதன் இந்திரியம் ஆகும். பரம்பரையினுல் மற்ற தன்மாத்திரையின் அம்சங்களும் அதனிடத்து வந்து விடுகின்றன. ஜலத்திலிருந்து பூமி பிருதிவி வருகிறது. நாற்றம் அதன் தன்மாத்திரை ஆகும். மூக்கு அதன் இந்திரியம் ஆகும். (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று இவை ஐந்தின் வகை தெரிவான் கட்டே உலகு என்பது திருக்குறள்) மற்ற பூதங்களின் குணங்களும் இதற்கு உண்டு. அவற்றிற்கு ஆதாரமாக இது இருக்கிறது. அகங்காரத் தத்துவத்தின் சாத்விக அம்ஸத்திலிருந்து மனம், சந்திரன், திசைகள், வாயுபகவான், சூரியன், வருணன், இரண்டு அசுவினி தேவர்கள், அக்னிபகவான், இந்திரன், உபேந்திரன், மித்திரன், பிரஜாபதி ஆகியோர் தோன்றினர். அகங்கார தத்துவத்தின் ராஜச அம்சத்திலிருந்து புத்தி, ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள் தோன்றின. இவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்தால் அன்றி சரீரம் தோன்ற முடியாது. இறைவனின் அருளால் அவைகள் அளவற்ற விகிதாசாரங்களில் கூட்டுச் சேர்ந்து அளவற்ற குணதிசயம் வாய்ந்த உயிர்வகைகள் தோற்றத்துக்கு வருகின்றன. ஸ்தூலசரீரம், சூக்ஷ்மசரீரம் வாய்த்த ஜீவர்கள் தோற்றத்துக்கு வருகின்றன. என் ஆண்டவன் பேரறிவுப் பொருள். அவன் ஆற்றல், செயல், திறமை ஒப்பற்றது. அதை நம்மால் முழுதும் அறிய முடியாது' ஜகத்பதே, விஸ்வமூர்த்தே என்று முனிவர்கள் ஆச்சரியத்தால் என் ஆண்டவனைத் துதித்து உருகிநிற்கிறர்கள்.

நிராசை

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1983ஆம் ஆண்டு நவராத்திரி அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

தோற்றத்துக்கு அப்பால் இருப்பது பூரணம். பிரபஞ்சமாகத் தோன்றி வந்திருப்பது பூரணம். தோன்றிவந்துள்ள பிரபஞ்சத்தை ஆராய்ந்து பார்க்கப் பார்க்க அதன்கண் குறையில்லா நிறைநிலையைக் காண்கிறோம். தோற்றத்துக்கு அப்பால்இருப்பது நிர்க்குணப் பிரம்மம். தோற்றத்திற்கு வந்திருப்பது சகுணப் பிரம்மம். சகுணப் பிரம்மத்துக்கு ஈஸ்வரன் என்ற பெயர் உண்டு. சகுணப் பிரம்மம் உலகையும் உயிர்களையும் ஆண்டு வருகிறார். பிரபஞ்சத்தில் ஒழுங்குப்பாடு அமைந்துள்ளது. பிரபஞ்சம் தாறுமாறாக அமைந்ததன்று. ஜீவர்களைப் பக்குவப்படுத்துதற்கென்றே பிரபஞ்சம் அமைந்துள்ளது.

வாழ்க்கை புல் பூண்டில் ஆரம்பிக்கிறது. பின்பு படிப்படியாக மேல் நிலைக்கு வருகின்றது. வாழ்க்கையின் ஆரம்ப தசையில் உள்ளதைப் புல் என்றும், பரிபூரண நிலையில் இருப்பதைப் பிரம்மதேவன் என்றும் சொல்வது வழக்கம். புல் முதல் பிரம்மா வரை என்று சொல்லுமிடத்து ஜீவர்கள் அனைவரும் அடங்கிவிடுகின்றனர். அத்தனை வடிவங்களும் அன்னை பராசக்தியின் மாயா விகாரங்களாகும். அவைகள் அனைத்திடத்தும் ஓர் ஒழுங்குப்பாடு அமைந்துள்ளது. பிரம்மதேவர்கள் மாறி மாறி அமைந்து கொண்டே இருக்கின்றார்கள். ஒரு பிரம்மா நெடுங்காலம் ஆண்ட பின் கிரம முக்திக்குப் போகின்றார். அவரோடு ஜீவர்களும் சேர்ந்து கிரம முக்திக்குப் போகின்றார்கள். ஜீவர்களாகிய நம்மைப்பற்றிய ஓர் உண்மையை அறிந்திருக்கவேண்டும். வாழ்க்கையை இந்த ஜன்மத்தில் ஒரு போக்கில் முடிவுக்குக் கொண்டு வருகிறோம். அடுத்த ஜன்மத்தில் மீண்டும் வாழ்க்கையைத் துவக்குகின்றோம். பள்ளிக்கூடத்தில் படிக்கின்ற மாணுக்கன் ஓர் ஆண்டு படித்த படிப்பை அடுத்த ஆண்டு தொடர்வதுபோன்று ஒரு ஜன்மத்தில் வாழ்ந்த வாழ்க்கையின் தொடர்ச்சி அடுத்த ஜன்மத்தில் வருகின்றது. இடையில் சில பிரம்மாக்கள் மாறிப்போய் இருக்கலாம். அதைப்பற்றிய கவலை நமக்கு இல்லை. தோன்றா நிலையில் காலாதீதத்தில் இருக்கின்றோம். தூக்கத்திலேயே ஓர் அளவு நாம் காலத்தைக் கடந்து விடுகின்றோம். நமக்கு எவ்வளவு ஓய்வு தேவைப்படுகிறதோ அவ்வளவு நேரம் தூங்கியாகவேண்டும்.

விதைகளில் சில உடனே முளைக்கக்கூடிய நிலையில் இருக்கின்றன. சில விதைகள் காலக்கிரமத்தில் முளைக்கக் கூடியவையாக இருக்கின்றன. பொதுப்பட ஜீவர்கள் மரணத்தின் மூலம் ஓய்வு பெறுகின்றார்கள். ஓய்வு நிலை முடிந்து பொருத்தமான சூழ்நிலை ஏற்படும்பொழுது தோற்றத்துக்கு வருகின்றார்கள். ஒரு பிரம்மாவின் காலத்தில் ஒரு ஜீவன் பிறக்கலாம். பத்துப் பிரம்மாவுக்குப் பிறகு மற்றொரு ஜீவன் பிறக்கலாம். இதில் வித்தியாசம் ஒன்றுமில்லை. காலாதீதத்தில் காலம் கணக்கில் வருவதில்லை. அந்தந்த ஜீவனுக்கு ஏற்ற சூழ்நிலை வரும்பொழுது அந்தந்த ஜீவன் தோற்றத்துக்கு வருகின்றான். சூழ்நிலை உண்டாகாத பொழுது ஜீவன் தூங்கிக்கொண்டிருக்கின்றான். இதுதான் மாயையின் அதிசயம்.

நாம் செய்த செயல் ஒரு ஜன்மத்தில் முடிந்து போய்விடுவதில்லை. ஒவ்வொரு ஜன்மத்துக்கும் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றது. பிரபஞ்சத்தில் வாழ்ந்திருக்கும் பரியந்தம் வினைக்கேற்ற பயனை நாம் அனுபவித்துக் கொண்டே வருகின்றோம். தர்ம வழியில் நாம் போய்க் கொண்டே இருக்கவேண்டும். தர்மத்தை விட்டுப் பிசகினால் நமக்கு நாமே கேடு செய்துகொள்கின்றோம். தர்மத்தைக் கையாளுவதன் மூலம் நாம்படிப்படியாக மேலே போய்க் கொண்டிருக்கிறோம். ஜீவர்கள் மனித நிலைக்கு வந்தான பிறகு பிறவி வேண்டாம் என்ற ஒரு நிலை ஏற்படுகின்றது. அந்நிலையில்தான் ஜீவனுக்கு ஆத்மசாதனம் தொடங்குகின்றது.

பிரபஞ்சத்தில் ஆசையிருக்கும் பரியந்தம் பிறவி பெருகிக்கொண்டே போகிறது. ஆசைக்கு முடிவு உண்டு. சிறு குழந்தைகள் பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாடுவதில் ஆசைகொள்கின்றன. ஒரு படித்தரம்

வந்த பிறகு அவ் ஆசை அடிபட்டுப்போகிறது. பிரபஞ்சத்தில் பற்று வைத்திருக்குமளவு ஆசை இருக்கிறது. பிரபஞ்சத்தை அனுபவித்துப் பார்த்தபின் அது வெறும் விளையாட்டு என்று உணர்கின்ற பக்குவம் வந்துவிட்டால் உலகத்தின்கண் விரக்தி அல்லது ஆசையின்மை ஏற்படுகின்றது. அப்பொழுதுதான் நாம் ஞானமார்க்கத்திற்குத் தகுதியுடையவர்களாகின்றோம். நசிகேதனை மயக்குவதற்கு யமதர்மராஜா அவனிடத்தில் ஆசையை ஊட்டினார். ஆனால் நசிகேதன் அவ் ஆசைக்கு வசப்பட்டு மயங்கிவிடவில்லை. அந்த மனநிலை நமக்கும் இருக்கவேண்டும். பிரபஞ்சத்தை அனுபவித்துப் பார்த்த பின்புதான் அம் மனநிலை ஏற்படும். ஜீவர்களுள் பெரும்பான்மையோர் ஆசைக்கு உட்பட்டவர்களாக இருக்கின்றார்கள். மிகச் சிறுபான்மையினர்தாம் ஆசையை வென்ற நிலையில் இருக்கின்றார்கள். நாம் கொண்டுள்ள ஆசையை விசாரித்துப் பார்த்தால் எந்தப் பொருளின்மீது ஆசை வைத்தோமோ அந்தப் பொருள் நிலையற்றது என்பது விளங்கும். அப்பொழுது அதன்மீது உள்ள ஆசை அகன்று போய்விடும். நாம் கொண்டுள்ள பல ஆசைகள் பொருளற்றவை. பொருளற்றவைகளைப் பொருளுற்றவைகளாக எண்ணி நாம் மயங்கலாகாது. ஆசைகள் பலவற்றை ஆராய்ந்து பார்க்கப் பார்க்க ஆசை வைத்தது சிறுபிள்ளைத்தனம் என்பது விளங்கும். பிரபஞ்சம் எவ்வளவுதான் மையல் ஊட்டினாலும் அதில் ஆசை வைக்கக்கூடாது. ஆசையை முறையாக ஆராய்ச்சி செய்து பார்க்கின்றவிடத்து அதுவே நல்ல ஆத்ம சாதனமாகும்.

தசரதகுமாரர்கள் நால்வரும் நல்ல விவேகிகளாக இருந்தனர். அவர்கள் ஆசைக்கு அடிமைப்படாது தங்களுக்கு ஏற்பட்ட கடமைகளைச் செய்தார்கள். அவர்கள் எந்த மனப்பான்மையுடன் கர்மம் செய்தார்களோ அந்த மனப்பாங்கை நாமும் பெறவேண்டும். ஆசையற்று இருப்பதற்கிடையில் பிரபஞ்சத்தில் நாம் செய்யவேண்டிய கர்மங்களை எல்லாம் செய்துகொண்டிருக்கவேண்டும். சரீரம் இருக்கும் பரியந்தம் சரீரத்தைக் கொண்டு தெய்வப்பணிவிடை செய்துவரவேண்டும். ஈசன் கையில் கருவியாக இருக்கத் தெரிந்துகொள்வதே நிராசைக்குச் செல்வதற்கு உபாயமாம். நிராசையில் நிலைத்திருக்கின்றவளவு ஈசனுடைய காரியங்களைச் செய்வதற்கு நாம் நல்ல கருவிகளாக இருக்கின்றோம். தெய்வ காரியம் பூர்த்தியான பிறகு ஈசனுடைய சொரூபத்தில் லயமாகின்றோம். நம்முடைய தனி வியக்தியை ஒழித்துவிட்டு ஈசனுடன் லயமாவதே முக்தி எனப்படும். கற்பூர ஆராதனையில் இத்தத்துவம் அடங்கியிருக்கிறது. சுத்தமான கற்பூரம் எரிந்தால் எஞ்சியிருப்பது ஒன்றும் இல்லை. அங்ஙனம் முக்தியில் ஜீவவியக்தி ஒன்றும் இருப்பதில்லை. நாம் கொண்டிருக்கின்ற வியக்தி வெங்காயத்துக்கு நிகராகும் என்று ராமகிருஷ்ணர் கூறுகின்றார். வெங்காயத்தின் ஒவ்வொரு சருகையும் உரித்துக்கொண்டே போனால் கடைசியில் வெங்காயம் என்று சொல்வதற்கு இலக்காக ஒன்றும் இருக்காது. வியாபாரத்தில் என்னலாபம் என்று கேட்டால் ஈர வெங்காயம் தான் மிச்சம் என்று சொல்லுவார்கள். அதற்கு லாபம் ஒன்றும் இல்லை என்பது பொருள். உலகில் வாழ்வு என்கின்ற வியவகாரம் செய்கின்ற நாம் வெங்காய நிலையில் இருக்கின்றோம். நம்முடைய ஜீவிதத்தைத் துறக்கவேண்டும். நம் சொரூபத்துக்கு என்றுமே பழுதில்லை.

"யான் எனது என்னும் செருக்கறுப்பான்
உயர்ந்த உலகம் புகும்" [வானோர்க்கு

என்பது பொய்யாமொழி. யான்எனது என்பனவற்றையெல்லாம் இறைவனிடம் ஒப்படைத்துவிட்டால் அனைத்துக்கும் இறைவன் நாயகம் ஆகிறார். 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானே இதற்கு நாயகம்' என்று மாணிக்கவாசகர் தம்மை இறைவனிடம் ஒப்படைக்கின்றார். இதுதான் சிறந்த மனநிலை.

தியாகம் வாழ்வின் உச்சநிலையாகிறது. தியாகம் என்பது சோம்பலைக் குறிக்காது. நம் வாழ்வைப் பிறருக்குப் பயன்படுத்துவதே தியாகமாகும். பேனாக் கத்தி ஒன்றைப் பயன்படுத்தாது இருந்தால் அது துருப்பிடித்து அழிந்து போகிறது. பயன்படுத்துகின்ற மற்றொரு பேனாக் கத்தி தேய்ந்து அழிந்து போகிறது. துருப்பிடித்து அழிந்துபோவது வரவேற்கத்தக்கதன்று, தேய்ந்து அழிந்து போவது தான் சிறந்தது. நம்முடைய வாழ்வு பிறருக்

குப் பயன்படுகின்ற பாங்கில் தேய்ந்து கொண்டே போய்ப் பிறகு அழியவேண்டும். பேனுக் கத்தி துருப்பிடிப்பது போன்று செய லற்றவர்களாயிருந்து வாழ்வைப் பாழ்படுத்த லாகாது. ஜீவிதம் இருக்கும் பரியந்தம் இறை வனுடைய விளையாட்டில் கலந்து நம் வாழ்வு மற்றவர்களுக்குப் பயன்பட்டுக் கொண்டே இருக்கவேண்டும்.

அவதார மூர்த்தி ஒவ்வொருவரும் யுகதர் மத்தை நிலைநாட்டுவதற்கு வருகின்ருர். இக் காலத்தில் தோன்றிய ராமகிருஷ்ணர் பஞ்ச மகா யக்ஞத்தில் ஒன்ருகிய நரயக்ஞத்தை வலி யுறுத்தினர். மனிதனை மனிதன் பெருமைப் படுத்துவது சிறந்த ஆத்ம சாதனமாகும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தாமே அந்தச் சேவையைச் செய்தார். தீண்டாமைக்கு எந்தச் சாஸ்திரத் திலும் இடம் இல்லை. ராமாயணத்திலும், மஹாபாரதத்திலும் எந்த இடத்திலும் தீண் டாமைக்கு இடமில்லை. உபநிஷதங்கள், வேதங் கள் ஆகியவற்றை ஆராய்ந்து பார்த்தாலும் தீண்டாமைக்கு இடம் இல்லை. மனிதனை மனி தன் தீண்டலாகாது என்ற நோய் எப்படியோ நாட்டைப் பிடித்துக்கொண்டிருக்கிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிறந்தது முதல் அந்த நோயில் அகப்படாது இருந்தார். 'நீ தீண்டத் தகாதவன்' என்ற சொல் அவருடைய வாயிலி ருந்து வந்ததே இல்லை. அவர் அம்பிகையிடம், "தாயே! யாவரும் உன்னுடைய குழந்தைகள். அங்ஙனமிருக்க தீண்டத்தகாதவர் என்று ஒரு கூட்டத்தினரை நான் குறிப்பிடுவேனுனல் நான் அகங்காரத்தை வளர்ப்பவனுகின்றேன். நான் உனக்கு வேற்ருன் ஆகிவிடுகின்றேன்" என்று விண்ணப்பித்தார். 'சத்தியமேவ ஜயதே' என்பது நம் நாட்டின் லக்ஷியம். தீண் டாமை ஒருநாளும் சத்தியமன்று. சத்தியத் தைக் கடைப்பிடிக்காதவனுக்கு முன்னேற்ற மில்லை. நம் நாட்டில் தீண்டாமை என்ற நோய் இருப்பதால் இன்னும் முன்னேற்றம் அடை யாது இருக்கிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் தீண் டாமை என்ற நோயைத் தம் மனதிலிருந்து அகற்றுவதற்காக இரவில் சேரிக்குச் சென்று சேரியைச் சுத்தம் செய்தார். சேரியைச் சுத் தம் செய்கின்ற சாதனத்தின் மூலம் தம் உள் ளத்தில் உள்ள அகங்காரத்தை அழித்தார். தாம் உயர்குடியில் பிறந்தவர் என்ற எண்ண மும் அடிபட்டுப்போவதற்கு அந்தச் சாதனை பயன்பட்டது.

அகங்காரமற்று ஆணவமற்று நரசேவையை நாராயண சேவையாகச் செய்வதன் மூலம் சித்தசுத்தி அடையலாம். சித்தம் சுத்தி அடைய அடைய அது நிராசையில் நிலைபெறு வதாகிறது. நிராசைதான் தெய்வம். நிராசை நிலைக்கு நம்மை நாம் உயர்த்துவதே நம் வாழ்க் கையின் குறிக்கோள்.

ஒரு நல்ல தொண்டு

நோய் வராமல் தடுப்பதற்கும், ஆரோக்கியமான வாழ்வு வாழ்வதற்கும், மனதைத் திருத்தி அமைப்பதற்கும் உரிய வழிகளை விளக்கும் 'நோய்க்கு இடங்கொடேல்' என்னும் சிறிய நூல் ஒன்று தபோவனத்தினின்று வெளியாகியுள்ளது. ஆஸ்பத்திரியிலிருக்கும் நோயாளிகளுக்கிடையில் இந்தப் புத்தகத்தைப் படிக்கக் கொடுத்துப் பின் திரும்ப வாங்குவது நல்ல பலன் தரும். இப்பணியில் ஊக்கமுடைய அன்பர்கள் சில பிரதிகளை வாங்கிக் கைவசம் வைத்துக்கொள்ளலாம். பிறகு டாக்டர் அனுமதிபெற்று ஆஸ்பத்திரி சிப்பந்திகளைக் கொண்டு இந்தப் பணிவிடையை நன்கு நிறைவேற்றலாம்.

இப்புத்தகத்திலிருந்து மாதிரிக்குச் சில வாக்கியங்கள் : மனதில் திண்ணியனுய் இருப்ப வனை எந்த நோயும் அசைக்கமுடியாது. உபவாசம் இருந்து பழகுகிறவர்களுக்கு நோய் அதிகம் வருவதில்லை. பலருடன் கூடியிருந்து ஆகாரம் ஏற்பதே சாலச் சிறந்தது.

உள்ளத்தை வாட்டுபவைகள் மனநோய் எனப்படுகின்றன. அறியாமையினுல் மனிதன் மனநோயை வரவழைத்துக்கொள்கிருன். பேராசை, பொருமை, கடுஞ்சினம், துயரம் ஆகியவைகள் யாண்டும் மனதை வாட்டிக்கொண்டே இருக்கின்றன. மனநோயை நீக்குவதற்கு நல்லறிவு ஒன்றே உபாயமாகிறது.

என் யாத்திரை அனுபவங்கள்

(சுவாமி துருவானந்தர்)

"ஆப் கஹாம் சே?" என்ற குரல் கேட்டுத் திரும்பினேன். 'நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?' என்று ஹிந்தியில் ஒரு முரட்டு ஆசாமி கேட்டார். 'தமிழ் நாட்டிலிருந்து' என்று ஆங்கிலத்தில் பதில் கொடுத்தேன். "மஹராஜ், நீங்கள் எங்குப் போகிறீர்கள்?" என்று மீண்டும் பணிவோடு ஹிந்தியில் கேட்டார். "கேதார், பத்ரி, யமுனோத்ரி, கங்கோத்ரி தரிசனம் பார்ப்பதற்காக ரிஷிகேஷ் போய்க்கொண்டிருக்கிறேன்" என ஆங்கிலத்தில் சொன்னேன். உடனே அவர் "நீங்கள் இந்தியாவில் இருந்து கொண்டு ராஷ்டிர பாஷையாகிய ஹிந்தியில் பேசாது என்றைக்கோ வெள்ளையன் விட்டுப் போன ஆங்கிலத்தில் பேசுகிறீர்களே" என்ருர். எனக்கு ஹிந்தி அவ்வளவு பேசத் தெரியாது என்றேன். அவர் உடனே "ஹிந்தி தெரியவில்லையென்ருல் வடநாட்டில் எந்த மாநிலத்திலும் சுற்றிவர முடியாதே! நீங்கள் ஏன் ஹிந்தி கற்றுக்கொள்ளக் கூடாது? தமிழ் நாட்டில் ஹிந்தி வெறுப்பு உள்ளது. தமிழ் நாட்டு மக்கள் வடநாட்டில் பல இடங்களில் சிறப்புற்று வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அரசாங்கத்தில் பெரும் பொறுப்பேற்றுள்ள அதிகாரிகளாக இருக்கும் தமிழர்களும், ராணுவத்திலுள்ள தமிழர்களும், வியாபாரிகளும் ஹிந்தி கற்றதால்தங்களின் அறிவையும்ஆற்றலையும் பயன்படுத்துகின்றனர். ஹிந்தியைக் கற்ருல் தமிழ் நாட்டு மக்களின் திறமையும், புத்தி சாதுர்யமும் நாடு முழுதும் பரவுமல்லவா?" என்று ஹிந்தியைப்பற்றிச் சொற்பொழிவே செய்துவிட்டார். எங்களுடைய உரையாடல் பஸ்ஸில் நிகழ்ந்தது. ஆகவேடெல்லியை விட்டு ரிஷிகேசத்துக்குப் போய்ச் சேரும் வரையில் நான்குமணி நேரம் பயனுள்ள விஷயங்களைப் பேசினேம். நாடு முழுதும் சுற்றிப் பார்த்து வருகிறவர்களுக்கு ஓர் அனுபவம் கிடைக்கும். சான்ருக மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது தமிழ் நாட்டிலுள்ள பஸ்கள்தாம் சிறப்பாக அமைந்துள்ளன. கட்டணமும் மற்ற மாநிலங்களைவிடக் குறைவு.

டெல்லியில் நாம் இருந்து பார்த்தால் சில அசாதாரண காட்சிகள் புலப்படும். டவுன் பஸ்ஸானது குறிப்பிட்ட ஸ்டாப்புக்கு வருகிற போது அப்பஸ்ஸில் ஏற விரும்புகிற பயணிகள் ஓட்டப்பந்தயத்தில் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்கவேண்டும் போலும். ஏனெனில், பஸ் வருகிற போது அதனுடன் ஓடிக் கொண்டே அது நிற்கிற இடத்தில் சென்று உடனே ஏறினல் தான் இடம் கிடைக்கும். எவ்வளவு கூட்டமிருந்தாலும் டிரைவர் சற்றும் மனிதாபிமானமில்லாது வண்டியை உடனே எடுத்து விடுவார். எத்தனையோ தாய்மார்கள் குழந்தைகளை இடுப்பில் வைத்துக்கொண்டு பஸ்ஸில் ஏறுவதற்குள் பஸ் நகர்ந்துவிடும். அவர்கள் ஏமாற்றமும் வேதனையும் அடைவார்கள். புதிதாக வருபவர்களாகவிருந்தாலும், வேறுயாராகவிருந்தாலும் தாங்களாக மற்றவர்களைக்கேட்டு இறங்கவேண்டிய இடம் பார்த்து இறங்கவேண்டுமே தவிரப் பஸ் கண்டக்டர்கள் பயணிகளின் நலனில் கருத்துச் செலுத்துவதே இல்லை. பெண்கள் அமர்ந்துள்ள இடங்களில் ஆண்கள் அமர்வது, இடிப்பது போன்ற இன்னும் பல அருவருப்புக்குரிய செயல்கள் மற்ற மாநிலங்களைவிடத் தமிழ் நாட்டில் மிகமிகக் குறைவு என்றே கூறலாம். பண்பாட்டிலும், பழக்கவழங்கங்களிலும் நம்நாடு இன்னும்நிறையக் கற்றுக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

மாலை இமயமலையின் அடிவாரத்தில் உள்ள ஹிருஷிகேசம் வந்து சேர்ந்தேன். வானளாவிய இமயமலையைப் பார்க்கிறபொழுதே உள்ளத்தில் உலகப்பற்றுகள் விடுபட்டுத் தெய்வம் தான் நமக்குத் துணை என்கிற உணர்வு தலையெடுக்கிறது. ரிஷிகள் தவமிருக்கும் இடமாகையால் அதற்கு ரிஷிகேசம் என்ற பெயர் வந்துள்ளது. ஆஸ்ரமங்களும், துறவிகளும் ஏராளமாக உள்ள ஹரித்துவார், ரிஷிகேசம் போன்ற மிகப் புனிதமான இடங்களிலும் சினிமாக் கொட்டகைகள்,மதுபானக் கடைகள்,கசாப்புக் கடைகள் இருந்து வருகின்றன. தவத்திற்கும், வழிபாட்டுக்கும், மனச்சாந்திக்கும் இத்தகைய இடங்களுக்குப் போக வேண்டும் என்ற நிலை மாறி இவைகளைச் சுற்றுலா மையங்களாகக்

கருதி பொழுது போக்காக வரக்கூடிய கூட்டமும், அவர்களைத் திருப்திப்படுத்தப் புதிதாக வந்துள்ள கடைகளும் இன்று அங்கு மிகுந்து விட்டன.

ஹிருஷிகேசத்தில் ஆஸ்ரமங்கள் நிறைய உள்ளன. தனியாகத் தவம் பண்ண விரும்புகிறவர்களுக்கு இலவசமாக உணவு அளிக்கச் சத்திரங்கள் பல இருக்கின்றன.

சதுர்தாம யாத்திரைக்கு ரூ 300 செலுத்தி 11 நாட்கள் பிரயாணம் செய்ய டிக்கட் வாங்கினேன். என்னுடன் ஒரு ஆஸ்ரமத்தைச் சேர்ந்த பிரம்மச்சாரி மற்றும் மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயப் பழங்குடி மக்கள் பிரயாணம் செய்தனர். மாலை 4-30 மணிக்கு யமுனோத்ரி நோக்கிப் புறப்பட்டு அனுமான் சட்டி சென்று சேர்ந்தோம். இரவு அங்கு ஒரு காட்டிலாகா போலீஸ்காரர் எனக்கு ஓர் அறை ஏற்பாடு செய்து உபசரித்தார். அவர் ஒரு பக்தர். ஆகவே சாதுக்களைப் பார்த்தால் தானே தன் கையால் ரொட்டி தயார் செய்து பரிமாறி கைங்கர்யம் பண்ணி வருகிறார். என்னுடன் வந்த இதர பிரயாணிகள் காளி கம்பளி வாலா சத்திரத்தில் தங்கிவிட முடிவு செய்தனர். எனக்கு வசதி பண்ணிக் கொடுத்தவர் பரம பக்தரானதால் அவரும் நானும் ஜபம், நாமசங்கீர்த்தனம், தியானம் செய்து இரவைக் கழித்தோம். யமுனோத்ரியிலிருந்து வந்த எங்கள் குழுவினர் அடுத்து கங்கோத்ரி போகத் திட்டமிட்டு டெஹ்ரி என்ற ஊரை அடைந்தோம். டெஹ்ரி ஜங்ஷன் போன்றது. அங்கிருந்து பல ஊர்களுக்குப் போகலாம்.

30-6-84 அன்று டெஹ்ரி (Tehri) யிலிருந்து கங்கோத்ரி போகும் வழியில் உத்தரகாசியில் இறங்கிச் சாது ஒருவரைச் சந்தித்து அவருடைய குடிசையில் கங்கைக் கரையில் ஜபம், தியானம் பண்ணினோம். அற்புதமான இடம். சாதனம் பண்ண விருப்பம் உள்ளவர்களுக்கு ஏற்ற இடம். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தேவரின் சிஷ்யர் ஸ்ரீமத் துரீயானந்த சுவாமிகள் அந்த இடத்தில் கொஞ்ச காலம் தவம் பண்ணியதாகக் கேள்விப்பட்டேன். துறவிகள் பலர் ஆங்கு வந்து சாதனம் புரிகின்றனர். அவர்களுக்குப் பல மடங்கள் வேண்டிய உதவிகளைச் செய்து தருகின்றன. என்னுடைய இமயமலை யாத்திரையில் நான் ஆயுர்வேத மருந்துகளைக் கைவசம் எப்போதும் வைத்திருந்தேன். பஸ் பயணம் ஒத்துக்கொள்ளாதவர்களுக்கும், திடீரென்று நோய்வாய்ப்படுவோர்க்கும் சேவை செய்ய மதுரையிலிருந்தும், ரிஷிகேசத்திலிருந்தும் வாங்கி வைத்திருந்த மருந்து வகைகள் பயன்பட்டன. குறிப்பாகச் சந்நியாசிகள் கையினால் எதை வாங்கினாலும் தங்களுக்கு நன்மை அளிக்கும் என நம்பும் தூய ஆத்மாக்கள் பலர் இருக்கின்றனர்.

லங்கா என்ற ஊரில் இரவில் தங்கித்தான் கங்கோத்ரிக்குப் போகவேண்டும். எங்களுடன் வந்த மத்தியப் பிரதேசத்தைச் சார்ந்தவர்கள் நெருப்பை வளர்த்துச் சுற்றி அமர்ந்து ராம நாமம் சொல்லிக்கொண்டு தூங்கியும் தூங்காமலும் இரவைக்கழித்தனர். இந்த மாதிரி வெட்டவெளியில் இது போன்ற கூட்டங்களோடு தங்கிப் பழக்கப்படாத நான் இரவை எங்கு எப்படிக்கழிப்பது என்று எண்ணி அன்னையையே சார்ந்திருந்தேன். லுங்கி கட்டிய ஒருவர் எங்கள் அருகில் வந்தார். "நீங்கள் தமிழரா?" என்றேன். 'ஆம்' என்றார். நாங்கள் தமிழர் என்று அறிந்தவுடன் அவர் உற்சாகமடைந்தார். அவர் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். இராணுவ முகாமில் தங்கி கங்கையின் குறுக்கே பாலம் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்தார். அவரே அதிகாரியிடம் அனுமதிபெற்று வந்து கடும் குளிரான அந்த நேரத்தில் எங்களுக்குக் கம்பளி, கட்டில் மற்றும் எல்லா உதவிகளையும் செய்து மறுநாள் நாங்கள் கங்கோத்ரிசெல்ல வழிகாட்டியனுப்பினர். நடந்தும், பஸ்ஸிலும் சென்றும் கங்கோத்ரியை அதிகாலை அடைந்தோம். குளிக்க முடியாமல் தொட்டால் ஐஸ் போன்று கை மரத்துப் போகும்படியான நீரைத் துணியில் நனைத்துஉடம்பில் சிரமப்பட்டுத் தேய்த்தோம். கங்கா மாதாவைத் தரிசனம் செய்து கோயிலுக்கு எதிரே தியானம் பண்ணிக் கண் விழித்த பொழுது ராஜஸ்தானத்தைச் சேர்ந்த ஓர் அம்மையார் எங்களை உணவருந்த அழைத்தார். நான் சற்று யோசித்தபோது ரிஷிகேசத்துப் பிரம்மச்சாரி விளக்கம் கொடுத்தார். சந்நியாசிகளுக்கு உணவு வழங்கி தக்ஷிணையும், கம்பளி போன்ற இன்றியமையாதவைகளையும் தருவதற்காகப் பல பக்தர்கள் போட்டி போட்டுக்

கொண்டு சிரத்தையோடு முன் வருகின்றனர். பெரும் பணக்காரன் முதல் சாதாரண ஏழை விவசாயி வரை துறவிகளுக்குக் கைங்கரியம் பண்ணுவதை இந்தப் பிறவியில் செய்யும் மாபெரும் பாக்கியமாகக் கருதுகின்றார்கள். இவற்றை நேரில் பார்க்கிறபொழுது நம் மனம் நெகிழ்ச்சியடைந்துவிடும்.

கங்கோத்ரியிலிருந்து மறுபடியும் உத்தரகாசி சென்று கேதார்நாத் புறப்பட்டோம். கேதார் நாத் யாத்திரையில் கௌரிகுண்டம் வரை எங்கள் பஸ்ஸில் நாம ஜபம், பஜனை மயமாக இருந்தது. கௌரிகுண்டத்திலிருந்து கேதார்நாத்துக்கு நடந்து போகலாம் என்று எண்ணிய பொழுது திருச்சிக்கு அருகிலுள்ள லால்குடியைச் சேர்ந்த அன்பர்களைச் சந்தித்தோம். அவர்கள் கேதார் தரிசனம் முடித்துக் கீழே இறங்கிப் போய்க்கொண்டிருந்தனர். "மழை தூறிக் கொண்டிருப்பதால் குதிரையில் செல்லுங்கள்; அதுதான் நல்லது" என்றார்கள். எப்படியோ எனக்குக் குதிரையில் ஏறிச்சவாரி செய்யவேண்டும் என்ற விருப்பமும் தலைதூக்கவே போய்வர நூறுருபாய் பேசிஒருவெள்ளைக் குதிரையில் என்னை ஏற்றிவிட்டு, ஏற்கனவே மலைகளில் ஏறிப் பழக்கமிருந்த அந்தப் பிரம்மச்சாரி குறுக்குப் பாதைகளில் புகுந்து அவ்வப்போது மலையைப்பற்றியும் மற்றும் பலவிஷயங்களைப்பற்றியும் பேசிக்கொண்டு உடன் வந்தனர். 15 கி.மீட்டர் குதிரைப்பயணம். அப்பப்பா, குதிரையின்மீது சவாரி செய்கிற பொழுது அது சில நேரங்களில் சண்டித்தனம் பண்ணுகிறது. பாதையின் ஓரத்தில் போகும்பொழுது கீழே கங்கை விரைந்து ஓடுவதைப் பார்த்தால் நதியில் விழுந்து விடுவோமோ என்கிற திகில் ஏற்பட்டது. இதற்கிடையில் முகத்தில் எந்த வித மாறுதலுமில்லாது குதிரைக்காரன் அவன் சகாக்களோடு பேசிக்கொண்டே வந்தான். இயற்கைக் காட்சிகளைக் கண்டு ரசிக்க வேண்டுமானால் கேதார்நாத், பத்ரிநாத் யாத்திரை எத்தனை தடவை பண்ணினாலும் சலிக்காது. பகல் ஒரு மணிக்குக் கேதார்நாத் போய்ச் சேர்ந்தோம். எங்குப் போனாலும் பணம் பறித்தல் இருக்கத்தான் செய்கிறது. நாம் யார் என்பதை முகபாவனையைக்கொண்டும்பேசுகிறபேச்சைக் கொண்டும் கண்டு பிடித்து விடுகின்ற கோயில் பண்டாக்களிடம் ஒருதரம் நாம் சிக்கிக்கொண்டால் திரும்பமீளமுடியாது. அப்படி மீள நினைத்தால் சண்டை சச்சரவு, அமர்க்களம், தோல்வி எல்லாம் நமக்குத்தான். புனிதமான இடத்தில் நமக்கு ஏன் இந்த வம்பு என்று நாம் பணிந்து போவதால் அவர்களுடைய ஆதிக்கம் இருந்துவருகிறது. ஆகவே கோயிலுக்குப் போனால் நாம் எந்தத் தரகரையும் வைத்துக்கொள்ளக்கூடாது. வடநாட்டில் இந்தப் பண்டாக்கள் பண்ணும் அட்டூழியம் கொஞ்ச நஞ்சமன்று. மறந்தும் நம்முடைய முகவரியை அவர்களிடம் கொடுத்துவிடக்கூடாது.

நாங்கள் நல்ல முறையில் கோயில் தரிசனம் செய்தோம். ஆனால் வாழ்க்கையில் இது போன்ற கடும் குளிரை என்றும் அனுபவித்தது கிடையாது. தலையுறை, கால் உறை, ஸ்வெட்டர், சால்வை, கம்பளி இத்தனையும் அணிந்திருந்தும் கூட உடம்பு நடுங்கியது. பிறகு கஷ்டப்பட்டு இரவெல்லாம் தூக்கமில்லாது குளிரில் நடுங்கிக்கொண்டே பகவான் நாமத்தை ஜபித்துக்கொண்டு இருந்தோம்.

5—7—84 அன்று காலை கேதார் நாதருடைய சுயம்புலிங்க தரிசனம் செய்து புறப்பட்டோம். பூமியிலிருந்து தோன்றிய குன்று போன்று காட்சிதருகிறார் மூலவராகிய கேதார நாதர். திருப்பதி கோயிலில் வணங்க வருபவர்களை உள்ளிருக்கும் சிப்பந்திகள் எவ்வாறு உள்ளே போனவுடன் போ போ வெனக் கழுத்தைப் பிடித்துத் தள்ளுகிறார்களோ, அதேநிலை இப்போது வடநாட்டிலுள்ள எல்லாக் கோயில்களிலும் பரவிவருகிறது. கேதார நாத்தும், பத்ரிநாத்தும் இதற்கு விதிவிலக்கல்ல. ஹிந்துக்களிடம் பக்தி என்ற பெயரில் மூடநம்பிக்கையும், அறியாமையும் இருப்பதால், சில தீய சக்திகள் பொதுமக்களுடைய அறியாமையை நன்கு பயன்படுத்தி கோயில்களைக் கொள்ளைக்காரக் கும்பல்களின் முகாம்களாக ஆக்கி வருகிறார்கள். இந்த நிலை நீடித்தால் வருங்காலச் சமுதாயம் கோயிலுக்குப் போவதை வெறுக்க ஆரம்பித்து விடும். ஆங்காங்குள்ள ஹிந்து இயக்கங்கள் முன்வந்து கோயிலுக்கு வழிபட வருவோருக்கு எந்தவித இடையூறுமில்லாது தரிசனம் செய்து வைக்க முன்வர வேண்டும். கோயிலைத் தமது சொந்த

சொத்தாக எண்ணி அதிகாரம் பண்ணும் ஆசாமிகளைக் கோயிலை விட்டே வெளியேற்றி விடவேண்டும்.

கேதார் நாத் தரிசனம் முடிந்து மீண்டும் குதிரையிலேறி கௌரி குண்டம் வந்து சேர்ந்தோம். எங்கள் பஸ்ஸில் ஏறி அவரவர்க்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு ருத்ரப்பிரயாகை சென்று சேர்ந்தோம்.

6—7—84 அன்று காலை 6-00 மணிக்குக் காலைக் கடன்களை முடித்துப் பத்ரிநாத் போகும் வழியில் ருத்ரபிரயாகைக்கும் கௌசாருக்கும் நடுவில் ஒரு பெரிய வளைவில் பாதையில் மண் சரிவு ஏற்பட்டு அன்றைய தினம் பஸ் போகாது என்று கூறிவிட்டனர். கௌசார் என்ற ஊருக்கு நான்கு மைல் நடந்து சென்று அங்குப் புதிதாகக் கட்டியிருந்த கல்லூரியில் இரவுதங்கினேம். மறுநாள்காலை நான்கு கி.மீட்டர்நடந்து பேருந்துநிலையத்தை அடைந்தோம். ஆனல் அன்றைய தினம் பஸ் போகாது என்றனர். எனவே கௌசார் கல்லூரியில் இரண்டு, மூன்று நாட்கள் தங்கிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்படிப்பட்ட சோதனைகள் மலை யாத்திரையில் நேருவதைத் தடுக்க முடியாது. என்னேடு வந்த பிரம்மச்சாரி 2 கி. மீட்டர் நடந்து 1 லிட்டர் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தார். பகல் 12 மணிக்குப் பல் விளக்கினேம். எங்கள் பஸ்ஸில் உள்ள மற்றவர்கள் உணவு ஏதும் அருந்த வழியில்லாது இருந்த போது நாங்கள் எப்படிச் சாப்பிடுவது? என்னிடமிருந்த பழங்களை வயதான பெரியவர்களுக்கும் கொடுத்தபின் நாங்கள் பசியாறினேம். மீண்டும் நீர் வேட்கையால் ஒரு வயதான மூதாட்டி தவித்தாள். இரண்டு கி. மீட்டர் நடந்து ஒரு ரூபாய் கொடுத்து நான்கு டம்ளர் தண்ணீர் வாங்கி வந்து அந்தப் பாட்டியிடம் கொடுத்தனர்.

பத்ரிநாத் யாத்திரையில் மழைக்காலங்களில் அடிக்கடி மண் சரிவு ஏற்படும். இவ்வாறு பல சோதனைகளைக் கடந்து எட்டாம் தேதி இரவு போய்ச் சேர்ந்தோம். பத்ரிநாத் சென்ற தினம் ஏகாதசி. பட்ட கஷ்டங்கள் எல்லாம் பத்ரிநாதனைக் கண்டதில் மறைந்தன. பிறகு கீதா மந்திர் என்ற ஓர் ஆஸ்ரமத்தில் எங்களுக்கு இலவசமாகத் தங்க வசதி பண்ணிக்கொடுத்தனர். ஈரோட்டைச் சேர்ந்த சாது ஒருவர் பத்ரிநாத்தில் வெகு காலமாக இருக்கிருர். அவர் முகவரி என்னுடன் வந்தவருக்குத் தெரியுமாதலால் அவரே அந்தச் சாதுவிடம் அழைத்துச் சென்ருர். எங்களின் பயண விவரங்களைச் சொல்லி முடித்து, அவர் செய்த உபசாரங்களை ஏற்று, பத்ரிநாத்தில் மனம் குளிரப் பகவானைத் தரிசித்து ஜபம், தியானம் செய்துகொண்டு இரண்டு நாட்கள் பத்ரியில் தங்கினேம். (தொடரும்)

சூதாட்டம்

சூதும் வாதும் வேதனை செய்யும். பிறர் பொருளை முறைதவறிக் கைப்பற்றுவது சூதாட்டம். அப்படிச் சம்பாதித்த செல்வம் நிலைத்திராது. பாபத்தையும், பாதரசத்தையும் ஜீரணம் பண்ண முடியாது. சூதாட்டம் பொல்லாதது என்பது தொன்றுதொட்டு நிரூபிக்கப்பட்டு வந்திருக்கிறது.

பழங்காலத்தில் பாண்டவர்களும் கௌரவர்களும் பகடை என்ற சூதாட்டம் விளையாடி நாட்டைப் பாழ்படுத்தினர்கள். இக்காலத்தில் நம்மவர்கள் பரிசுச் சீட்டு என்னும் சூதாட்டத்தையும் குதிரைப் பந்தயம் என்னும் சூதாட்டத்தையும் செய்து வருகிருர்கள். இவைகளின் விளைவு கேடு. நல்லார்கள் இத்தீங்குகளினின்று விலகி இருப்பார்களாக. பொது நலனுக்காகவென்றும் இவைகளில் ஈடுபடலாகாது. இவைகளில் கருததைச் செலுத்தாதிருக்குமளவு நலத்தை நாம் வளர்த்தவர்களாவோம்.

மன்னார்குடியில் சேலம் ஸ்ரீ சாரதா ஸமிதியின் கிளை

சமுதாயத்தில்,குறிப்பாகப்பெண்களிடையே கல்வியும், ஒழுக்கமும், சமய உணர்ச்சியும் பெருக வேண்டும் என்ற உணர்ச்சி மக்களிடம் பரவி வருகிறது. தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடியில் சேலம் ஸ்ரீ சாரதா ஸமிதியின் கிளை ஸ்தாபனம் ஒன்று துவக்கப்பட்டிருப்பது இதற்குச் சான்றாகும்.

தற்போது சிங்கப்பூரில் வசித்துவரும் ஸ்ரீமதி அம்பாள் மாணிக்கம் என்ற பக்திமதி,தன் பெற்றோர்கள் பிறந்த ஊரான மன்னார்குடியில் மக்களுக்கு, அதிலும் ஏழைகளுக்கும் பெண்களுக்கும் சேவை செய்ய வேண்டும் என்ற பேரார்வம் மிகக் கொண்டிருந்தார். சேலத்தில் ஸ்ரீ சாரதா ஸமிதி பெண்கள் கல்வியிலும், மற்றும் பெண்கள் நலத்துறைகளிலும் ஆற்றிவரும் பணியைக் கண்டு மன்னார்குடியிலும் அதுபோன்ற ஸ்தாபனம் ஒன்று ஆரம்பிக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டார். ஸ்தாபனம் துவக்குவதற்காக ரூபாய் 8,01001 தானே உவந்து அளித்துள்ளார். அதன்படி மன்னார்குடியில் சேலம் ஸ்ரீ சாரதாஸமிதியின் கிளை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

சிங்கப்பூர் பக்தை அளித்த நன்கொடையிலிருந்து வீடு ஒன்று வாங்கப்பட்டுள்ளது. கீதாலயம், 3வது வீதி, மன்னார்குடி-614 001, தஞ்சாவூர் மாவட்டம் என்ற விலாசத்தில் உள்ள இவ் வீட்டில், நவம்பர் மாதம் 8ந் தேதி, ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர் அவர்கள் அருள்அன்னை ஸ்ரீசாரதாதேவியார், பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர், சுவாமி விவேகானந்தர் ஆகிய மும்மூர்த்திகளின் திரு உருவப்படங்களைப் பிரதிஷ்டை செய்து நித்திய பூஜை, வழிபாடுகள் முதலியவற்றையும், ஸமிதி அங்கத்தினர்களின் ஆத்மீகப் பயிற்சியையும் துவக்கி வைத்தார்கள்.

இங்கு இரண்டு சந்நியாசினிகளும் இரண்டு பிரம்மச்சாரிணிகளும் ஆச்ரமவாசிகளாக இருக்கின்றனர். குழந்தைகள் களிக்கூடம் (நர்ஸரிப் பள்ளி) ஒன்றும், வசதி குறைந்த பெண்களுக்கு தையல் வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றின் ஆரம்பவிழா நவம்பர் 18ஆம் தேதி தமிழக சட்டசபையின் முன்னாள் சபாநாயகர் திரு. ராஜாராம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விழா ஆரம்பத்தில் இரண்டு குழந்தைகள் சேர்ந்திருந்தனர். விழா முடிவதற்குள் மேலும் பதினான்கு பேர் சேர்ந்துவிட்டனர். அதன் பிறகு வந்தவர்களையும் சேர்த்துத் தற்போது பள்ளியில் சேர்ந்துள்ள குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை இருபது.

தையல் வகுப்பில் சேர்வதற்குப் பதிவு செய்துகொண்டிருக்கும் பெண்களின் எண்ணிக்கையும் அதிகமாக உள்ளது.

பெண்களுக்கென்று ஓர் இலவச வாசகசாலை துவக்கப்பட்டுள்ளது. கீதை வகுப்பும், சமஸ்கிருத வகுப்பும், அந்தர்யோகமும் நடைபெற்று வருகின்றன. இதில் பொதுமக்கள் ஆர்வத்தோடு கலந்துகொள்கின்றனர். எல்லாக்காரியங்களிலும் ஊர்மக்கள் பெரும் உற்சாகத்துடன் ஒத்துழைத்து வருகிறார்கள்.

இது போன்ற நல்ல காரியங்கள் நடக்க வேண்டும் என்ற ஆர்வம்கொண்ட செல்வந்தர்கள் சிலர் நன்கொடையளிக்க முன்வந்துள்ளனர். ஆர். எஸ். எஸ்., நற்பணிமன்றம் ஆகியவற்றைச் சேர்ந்த சேவை மனப்பான்மை கொண்ட இளைஞர்கள் பலர் தங்கள் உடலுழைப்பை நல்கியுள்ளனர். ஸமிதியையும் அது ஆற்ற இருக்கும் பணியையும் நோட்டீஸ் மூலமாகவும் நேர் அறிவிப்பின் மூலமாகவும் ஊர் மக்களுக்குத் தெரிவிக்கும் பணியை அவர்களாகவே முன்வந்து செய்துள்ளனர். இந்து மதக்கொள்கைகளைப் பரப்பவும், இந்துப் பண்பாட்டில் இளைய தலைமுறையினரை உருவாக்கவும் விரைவில் ஓர் உயர்நிலைப்பள்ளியைத் துவக்கவேண்டும் என்று ஊர்மக்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

மக்களிடையே பரவி வரும் இந்த விழிப்புணர்ச்சியும், மதப்பற்றும், பண்பாட்டில் ஆர்வமும் சமுதாயத்தின் எண்ணப்போக்கும் நாட்டின் முன்னேற்றத்துக்கு நல்ல அறிகுறிகள் ஆகும். ''ஆத்மனோ மோக்ஷார்த்தம் ஜகத் ஹிதாய ச''என்பதை வாழ்வில் நிறைவேற்ற விரும்பும் தியாக மனப்பான்மை கொண்ட பெண்கள் இத்தருணத்தைப் பயன்படுத்தி ஞான வாழ்க்கை வாழ முன்வருவார்களாக.

குறிப்புகள்

பழனியில் வழிபாடு

பாண்டிச்சேரி திரு. S. விசுவநாதன் அவர்கள் சத்கைங்கரிய நிதியிலிருந்து ஆண்டுதோறும் பழனியில் ஸ்ரீதண்டாயுதபாணி சுவாமிக்கு அபிஷேக ஆராதனையும், பக்தர்களுக்குச் சமாராதனையும் தபோவனம் செய்து வருகின்றது. இவ்வாண்டு நவம்பர் மாதம் 24ஆம் தேதியன்று திருப்பராய்த்துறை ஸ்ரீ விவேகானந்த குருகுலப் பள்ளி எட்டாம் வகுப்பு மாணவர்கள், திருச்சி கைலாசபுரம் பாய்லர் பிளாண்ட் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாணவிகள், கரூர் விவேகானந்த உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், திருவேடகம் விவேகானந்த மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் ஆகியோர் தங்கள் ஆசிரியர்களுடன் மொத்தம் அறுநூறு பேர்கள் இந்நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டனர். தர்ம சக்கரம் செய்திகள் பகுதியில் இதைப்பற்றிப் படித்துத் தெரிந்துகொண்டிருந்த அன்பர்களும், தாய்மார்களும் பல ஊர்களிலுமிருந்து வந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

அன்று பழனி அடிவாரத்தில் சங்கரண்டாம் பாளையம் பட்டக்காரர் மடத்தில் காலை உணவு முடித்துக்கொண்டு யாவரும் வரிசைக் கிரமமாக அணிவகுத்து நின்றார்கள். எப்பொழுதும் உள்ள வழக்கப்படி நிகழ்ச்சிகள் குறித்த காலத்தில் ஆரம்பித்து துரிதமாக ஒன்றன் பின் ஒன்ருக நிறைவேறின. சரியாக 8-45 மணிக்கு ''ஜெய்கணேச, ஜெய்கணேச, ஜெய்கணேச பாஹிமாம், ஸ்ரீ கணேச, ஸ்ரீ கணேச, ஸ்ரீகணேச ரக்ஷமாம்'' என்ற நாம உச்சாரணையுடன் தபோவனத்துச் சந்நியாசிகள் வழி நடத்த மலையடியை நோக்கிக் கிளம்பினர்கள். மலையின் படிகளில் முருகனைத் துதி செய்துகொண்டே அனைவரும் வரிசைக்கிரமமாக ஏறத் தொடங்கினர்கள். பாய்லர் பிளாண்ட் பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஆசிரியைகள், மாணவிகள் கந்தரனுபூதிப் பாடல்களைப் பண்ணுடன் இசைக்கவும், மற்றவர் யாவரும் பின் தொடர்ந்து அழகுற ஓதினர்கள். தமக்குக் கொடுக்கப்பட்டிருந்த கையேட்டினைப் பார்த்து அழுத்தந்திருத்தமாகவும், அர்த்தம் தெரிந்துகொண்டும் அவர்கள் பாடல்களை உச்சரித்தார்கள். தெளிவான குரலில் அனைவரும் சேர்ந்து அழகாகப் பாடுவதைக் கேட்டு மலைமீது போய்க்கொண்டும், வந்துகொண்டும் இருந்த பல பக்தர்களும், பக்திமதிகளும் மெய்சிலிர்த்து, உள்ளம் உருகிக் கரம் கூப்பினர்கள். சிறுவர் முதல் வயோதிகர் வரை எவ்விதப் பேதமும் இன்றி சுற்றுச் சூழலை யெல்லாம் மறந்து நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைவரும் கந்தனின் அநுபூதிகளை ஓதினர்கள். பொருள்உணர்ந்து பாவ பூர்வமாக, ஒருமித்த குரலில் அவர்கள் ஷண்முகநாதனைச் சரணடைந்து பாடிய பாடல்கள் நெஞ்சங்களை நிறைவித்தன.

''ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியா னைச்சகோ தரனே''

என்று பாடிய ஒலி மலைமுகட்டில் பட்டு எதிரொலித்தது. மலையை ஏறி முடித்துக் கோவிலை அடைந்து ''ஆறிரு தடந்தோள் வாழ்க! அறுமுகம் வாழ்க'' என்ற வாழ்த்தொலியும், வேத கோஷமும் முழக்கிக் கோவிலை வலம்வந்தார்கள். கோவில் நிர்வாகிகள் இந்த அருள்கூட்டத்தை அன்புடன் வரவேற்றுச் சந்நிதிக்கு அழைத்துச் சென்று அபிஷேக ஆராதனைகள் நடத்த ஏற்பாடுகள் செய்தார்கள்.

அன்பர்கள் அங்கமெல்லாம் புளகிப்ப, உள்ளம் ஆனந்தக் கடலில் அமிழ்ந்திருக்க தண்டாயுதபாணி சுவாமியின்திருமுன்னர்அமர்ந்து அபிஷேகக் காட்சிகளைக்கண்டார்கள். பால்,தேன், இளநீர், சந்தனம், பன்னீர், பஞ்சாமிர்தம், விபூதி என்று வகை வகையாக இறைவனுக்குச் செய்த அபிஷேகம் அவனுடைய எழில் மிகு திருக்கோலத்தை மேலும் விகசித்தது. பின்னர் கந்தவேளுக்கு அலங்காரம் செய்வித்துப் பலவகை மலர் மாலைகளும் புனைந்து, தீப ஆராதனை செய்யக்கண்டு யாவரும் உள்ளம் குளிர்ந்து உலகை மறந்து நின்றார்கள். அபிஷேகப் பொருட்கள் இன்னர், இனியர் என்ற வேறுபாடுகளின்றிப் பக்தர்கள் யாவருக்கும் பிரசாதங்களாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதற்கிடையில் சந்நிதியின் முன்பு உள்ள பெரிய மண்டபத்தில் அன்பர்களும், தாய்மார் களும், மாணவ மணிகளும் ஒருங்கமர்ந்து ஒரு மணி நேரம் ஐக்கிய வணக்க நிகழ்ச்சியை நடத்தினர்கள்.

ஐக்கிய வணக்கம் என்பது ஆலயங்களில் அவசியம் நிகழ்த்தவேண்டிய ஒரு சிறந்த வழி பாட்டு முறையாகும். விளையும் பயிர் முளை யிலே தெரியும் என்றவாறு சிறுவயதிலேயே அறவொழுக்கத்தையும், ஆன்மீக நாட்டத்தை யும் கற்றுக்கொடுக்கும் பயிற்சிக்களனக ஐக் கிய வணக்கம் விளங்குகிறது. யாவரும் ஒரு மித்த குரலில் தெய்வங்களின் நாமாவளிகளைச் சொல்லுதல், பண்ணோடு கூடிய பாடலால் எம் பெருமானை இதயக்கோவிலில் எழுந்தருளப் பண்ணுதல், ஆன்றோர்களின் கருத்துக்களை மாணவர்கள் எடுத்துச்சொல்லச் செவிமடுத்துச் சிந்தை திருத்துதல், காயத்ரீ ஓதி அறிவுக்கட வுளை ஆன்மாவில் நிலை நிறுத்துதல், யாவரும் சேர்ந்து அர்ச்சனைக்குரிய திருநாமங்களைக் கணிரென்று எதிரொலித்தல், பின்பு நைவேத் தியம் வைத்து ஆரதி எடுத்து மங்களம் பாடி நிறைவு செய்தல் ஆகியன ஐக்கிய வணக்கத் தில் அடங்கும். அன்றைய நிகழ்ச்சியில்

" நாத பிந்து கலாதி நமோநம
வேதமந்த்ர சொருபா நமோநம
தீபமங்கள ஜோதி நமோநம "

என்பது முதலான திருப்புகழும் வெவ்வேறு தெய்வங்களின் மீது அருட்பாடல்களும் பாடி கோவிலுக்கு வந்தவர்கள் அனைவரின் மனங் களையும் வழிபாட்டில் ஈடுபடுத்தினர்கள். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் அமுத மொழி களை அழுத்தந்திருத்தமாக வாசித்து எளியவர் களும் பொருள் புரிந்துகொள்ளும்படி செய் தார்கள். பிறகு காயத்ரீயும், சாந்தி மந்திரங் களும், மங்கள ஆரதியும் முறையே நிறை வேறின. அதன் பின்னர் அடிவாரம் அடைந்து சமாராதனையில் கடவுளின் அருட்பிரசாதமாக உணவு உண்டு முடித்து ஓய்வுகொண்டு யாவ ரும் விடை பெற்றுச் சென்றுர்கள்.

ஆலய நிர்வாகிகளும், அதிகாரிகளும் அன் றைய வழிபாட்டுக்கும், அருள் கூட்டத்தினர் தரிசனம் செய்வதற்கும் சிறந்த முறையில் ஒத்துழைத்தார்கள். இத்தகைய சுயநலமில் லாத வழிபாட்டு முறைகள் கோவில் தோறும் நிகழவேண்டும். ஒவ்வொரு ஊரிலும் அன்பர் களும், தாய்மார்களும், மாணவ மணிகளும் ஒருங்கிணைந்து இத்தகைய தூய பணிகளில் ஈடுபடுதல் மிகவும் நன்மை பயக்கும். திருக் கோவில்களில் இரைச்சலும், வீண்பேச்சும், லௌகீகமும் மறைந்து இது போன்ற பண் பும், பக்தியும் நிறைந்த நிகழ்ச்சிகள் பெருக வேண்டும். செல்வந்தர்கள் இத்தகைய சத் கைங்கர்யங்களில் சிந்தை செலுத்திப் புண்ணி யம் பெறுவார்களாக.

இவ்விதம் நேர்மையான உள்ளத்துடன் வழி பாடு செய்பவர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் தருவது ஆலய நிர்வாகிகளின் கடமையும், பொறுப்பும் ஆகும். ஒவ்வொரு ஆலயத்திலும் மாணவ மாணவிகளைக்கொண்டு இத்தகைய வழிபாட்டை நிகழ்த்துவதற்கு ஆலய நிர்வாகி கள் முயல்வார்களானல் ஆலயத்தின்கண் அவர்கள் அருளை வளர்ப்பவர்கள் ஆகிருர்கள். மாணவ மாணவிகளிடையே இன்று பரவி யுள்ள ஒழுக்கமின்மை என்ற கேடும் இதனல் நாளடைவில் மறைந்துபோகும். மாணவர்களுக் குச் சரியான வாழ்க்கைத் திட்டத்தை வகுத் துத் தராத குற்றத்தினல்தான் ஒழுங்கீனங்கள் பெருகுகின்றன. உடன்பாட்டு முறையில் அவர்களுடைய மனங்களைப் பண்படுத்துவ தற்கு நாம் முயலவேண்டும். எனவே ஆலய நிர்வாகிகளும்; அரசாங்கமும் பள்ளித் தலைமை ஆசிரியர்களும் இவ்வழிபாட்டு முறையை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் கருத்துச் செலுத்துவார்களானல் நாட்டுக்குச் சிறந்த எதிர்காலம் அமைவது திண்ணம்.

தர்மம் தலைகாக்கும்

மஹாபாரதத்தில் இக்காலப் பிரச்னைகளைப் போலவே பல சம்பவங்கள் வருகின்றன. தேவாசுர யுத்தம் என்பது உலக வாழ்வில் ஏற்படுகிற இக்கட்டான நிலைமையின் விளக் கமே ஆகும். தீயகுணமும், சுயநல மனப்பான் மையும் எங்ஙனம் மனிதனை முடிவில் அழித்து விடுகின்றன; நல்ல குணம் எப்படி அவனை உயர்த்திவிடுகிறது என்பதை அதில் தெளிவா கப் பார்க்கிறோம். ஆயினும் இதெல்லாம் மனி தனைத் திருத்துவதற்குப் போதுவதில்லை. அவ ரவர் அடிபட்டு, சீரழிந்து, துன்பப்பட்டு உண்

மையை அறிய வருகிறார்கள். பண்பாட்டில் உயருகிறார்கள். இந்த நிலைமையினால்தான் தீமை என்றென்றும் உலகில் இருந்து வருகிறது. அதேபோல இத்தீமையை எதிர்த்துப் போராடுவதும் உலகில் என்றென்றும் இருந்துவரும். துரியோதனன் யுத்தத்தில் வெற்றிபெற யுத்த தளவாடம், ஆள்பலம் இவைகளையே பிரதானமாகக் கருதினான், இவற்றினாலேயே வெற்றி பெற்றுவிட முடியும் என்று நம்பினான். தர்மராஜனே உலகில் வாழ்வதற்கு, அதில் ஏற்படுகிற சகல இன்ப துன்பங்களையும் சமாளிப்பதற்கு ஆண்டவனையே, தர்மத்தையே நம்பினான். யக்ஷன், "வரப்போகிற யுத்தத்தில் உனக்கு வெற்றி தேடித்தருவதற்குத் உன் சொந்தத் தம்பிகளான பீமார்ஜுனர்களில் ஒருவரைக் கேளாமல் யுத்தப் பயிற்சியில் பல மடங்குப் பிற்பட்டவனாகிய நகுலனை ஏன் உயிர்ப்பித்துத் தரக்கோருகிறாய்?" என்று கேட்டான். "யுத்தத்தில் வெற்றி தருவது பீமனுமல்ல, அர்ஜுனனும் அல்ல. தர்மமே தலைகாக்கும் (தர்மோ ரக்ஷதி)" என்று தர்மராஜன் பதில் சொன்னான். இந்த வாக்கு மூலம் எவ்வளவு உண்மை என்பது நம்மில் பலருக்கு விளங்கும். "நானும் துரோணரும் கர்ணனும் மற்றும் அதிரதர்கள் பலரும் இருந்தாலும் நீ தோற்றுப் போவாய்; உன் பக்கம் தர்மமில்லை, தெய்வத்தின் துணை இல்லை" என்று பீஷ்மர் மிக்க கருணையுடன் துரியோதனனுக்குச் சொன்னார். ஆனால் அவன் ஏற்றுக் கொள்ளவில்லை. வாழ்வின் இறுதியில் அவனுக்கு ஓரளவு இவ்வுண்மை மனதில் பட்டது.

ஏகச் சக்கரநகரத்தில் ஓர் அசுரனுக்கு வாரம் ஒரு குடும்பத்தினர் வண்டி நிறையச் சோறு, ஒரு ஜோடி காளை மாடு, ஓட்டிப் போகிற ஆள் அனைத்தையும் பலி தரவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கு ஈடாக அவன் அந்நகரத்தைக் காவல் காக்கிறானாம். இதேபோன்று இன்றைய அரசியல்வாதிகள் குணத்தில் கீழானவர்களை வளர்க்கிறார்கள். மகாநாடு அல்லது மீட்டிங் போட்டால் இன்னின்னார் இத்தனை லாரி ஆள் சேகரித்து வர வேண்டியது, ஆளுக்கு இத்தனை ரூபாய் கூலி, சாப்பாடு, குடி, சினிமா, போக வர லாரி வாகனம் என்று ஏற்பாடு செய்கிறார்கள். ஆ! இவர்கள் எவ்வளவு அருமையான பிரஜைகள்! தேசத்தொண்டர்கள்! தலைவர் என்ன சொல்லுகிறாரோ அதேபோலக் கூப்பாடு போடுவார்கள். எதன்மீது ஏவி விடுகிறாரோ அதன் மேல் சிறிதும் சிந்திக்காமல் பாயும் தேசத் தொண்டர்கள். இவர்கள்தாம் அரசாட்சியை ஏற்படுத்துபவர்களாம். ஆ! பாரதத் தாயே! எத்தகைய பிள்ளைகள் உனக்கு வேண்டும் என்று சிவபிரான் கேட்டபோது இப்படிப்பட்டவர்களையா வரமாகக் கேட்டாய்! இந்தத் தேசத்துக்கு எப்போது விமோசனம் வரப் போகிறது? உன் அருளுக்குப் பிரார்த்திக்கிறோம். எங்கள் கலியை, வினையை, துயரைத் துடைப்பாயாக.

அரசர்கள் பரம்பரையாக அரசாண்டார்கள். எந்த அரசர் காலத்தில் அந்தப் பரம்பரை ராஜ்ய பரிபாலனம் பண்ணச் சக்தியற்றதாகிறதோ அல்லது தீமை நிறைந்தது ஆகிறதோ அப்போது தானே வேறு பரம்பரையாளரால் கைப்பற்றப்பட்டு அரசாட்சி நடைபெற்றது. அரச பரம்பரையில் என்றுமே நன்மையும், அல்லது என்றுமே தீமையுமாக இருந்ததில்லை. நல்ல அரசர்கள் காலத்தில் எல்லா நலன்களும் விளைந்தன. பின்னர் அரசர் ஆட்சியைக் குடியாட்சியாக மாற்றினார்கள். இதனால் ஏதோ புதிய நல்ல மாற்றத்தைக் கொண்டு வந்து விட்டதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதன் தீமைகளை இன்று பிரத்யக்ஷமாகக் காண்கிறோம். சுமார் ஐம்பது வயதானவர்களுக்குச் சுயராஜ்யம் பெற்றதிலிருந்து நம் தேசத்து அரசியல் எவ்வளவு கீழ்த்தரமானதாக ஆகிவருகிறது என்பது நன்கு விளங்கும். இவற்றிற்குக் காரணம் என்ன? என்ன செய்தால் இந்தத் தீமையினின்று மீளலாம்?

வரப்போகிற தேர்தலில் நல்ல ஆட்சியை அமைக்கச் சந்தர்ப்பம் இருக்கிறது. ஆனால் விஷயம் தெரியாத சுயநலம் படைத்த மனிதர்களே அதிகம். அவர்களுக்கு விளங்க வைப்பது எப்படி? மேலான விஷயம் எதுவும் அவர்களுக்கு விளங்காது. ஆயினும் அப்படியே விட்டு விடவும் முடியாது. சிற்றலை படிப்படியாக பேரலையாக வடிவெடுப்பது போன்று ஏக்கம் நிறைந்த நன்மக்கள் சிலரின் உணர்ச்சிகள் நாளடைவில் பெருவெள்ளமாக வடிவெடுக்

கும். அன்று அவைகள் செயலுக்கு வரும். ஆண்டவன் திட்டப்படி நடக்கட்டும்.

தவளைகள் கடவுளிடம் தங்களுக்கு அரசன் ஒருவன் வேண்டும் என்று கேட்டன. கடவுள் அக்குளத்தில் ஒரு கட்டையை மிதக்க விட்டு இது தான் உங்கள் அரசன் என்று சொல்லிப் போனுர். தவளைகள் முதலில் மரியாதையாக தூர இருந்து மரியாதை காட்டின. பிறகு, பயம் தெளிந்து கட்டைமேல் ஏறி உட்கார்ந்தன. அது ஒன்றுமே செய்யவில்லை. காற்றில் அது அடிக்கடி மிதந்துகொண்டே இருந்தது. தவளைகளுக்கு முதலில் ஆனந்தமாக இருந்தது. பிறகு சலித்துப் போயிற்று. ஆண்டவனே! இதென்ன அரசர்? எங்களுக்கு நல்ல அரசரைக் கொடுங்கள் என்றன. ஆண்டவன் கட்டையை எடுத்துவிட்டு ஒரு கொக்கை அங்கே நிறுத்தி "இதுதான் இனி உங்கள் அரசர்" என்ருர். கொக்கு என்னவோ அழகாகத்தான் இருந்தது. வெள்ளை வெளேரென்று நீண்ட கால்கள், நீண்ட மூக்கு. ஆ! அந்த கொக்கிற்குத்தான் பிரஜைகளிடம் என்ன அன்பு. அவைகள் தன்னுடைய தீனி அல்லவா! குளத்தில் தவளைகள் குறைய ஆரம்பித்தன. அப்பொழுதுதான் அவைகளுக்கு விழிப்பு வந்தது. ஆண்டவனிடம் பிரார்த்தித்தன. பழைய அரசனையே ஆண்டவன் தந்து ஆசீர்வதித்தார். நமது தேர்தல் இந்தப் போக்கில் இருக்கிறது. இன்றைக்கு ஆட்சியாளர்கள் கொடிய, அசுர சுயநலம் வாய்ந்த, தேசபக்தியற்ற, நல்லது கெட்டதை உள்ளபடி உணர முடியாத, நீண்டகால நன்மை பயக்கும் திட்டம் போடத் தெரியாத, மக்களை நல்ல வழியில் நடத்தத் தெரியாதவர்களாக இருப்பது மக்களுக்கு விளங்கவில்லையே. அது விளங்கினல் அல்லவோ மாற்றத்தைப் பற்றிய எண்ணம் வரும். நல்ல அரசியல் இல்லாமல் அமைதியான, அபிவிருத்தியான சமூக வாழ்வு இல்லை. பாதுகாப்பான, ஆதரவான சூழ்நிலையில்தான் நல்லனவெல்லாம் வளர முடியும். ஆகையால் நல்ல அரசாங்கம் முதலில் தேவை. தண்டகாரண்யத்தில் ராமன் பிரவேசித்ததும் முனிவர்கள் பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள். ராமனிடம் தங்களுக்கு ஏற்பட்டுள்ள இடையூறுகளையும், அசுரர்கள் தமக்குச் செய்யும் தீங்குகளையும் முறையிட்டார்கள். ஸ்ரீ ராமன் அவர்களுக்கு அபயம் தந்தான். அவர்களுக்குப் பாதுகாப்பாக இருந்து அசுரர்களைச் சம்ஹரிப்பதாக வாக்களித்தான். அங்ஙனமே செய்து முனிவர்களுக்குப் பணிவிடைபண்ணினுன். அவர்களின் அருள் வாழ்வில் அவனும் கலந்துகொண்டு பெருமகிழ்ச்சியடைந்தான். நல்ல அரசியல் இல்லாத, பாதுகாப்பில்லாத சமூக வாழ்வில் ஒரு நலனும் வடிவெடுக்காது. ஆகவே நல்ல அரசாங்கம் தேவை.

அரசியல் வாதிகள் தேர்தல் பிரசாரத்தில் ஏதேதோ வாக்களிக்கிருர்கள். இவை வெறும் வாய்ப்பேச்சு, வாக்குஜாலம், வாய்ப்பந்தல் என்பது நம் மக்களுக்கு விளங்குவதில்லை. அந்த வாக்கு மூலங்களில் இருக்கிற முரண்பாடும், தீமையும் விளங்குவதில்லை.வைரத்தின் மதிப்பைக் கத்தரிக்காய் வியாபாரி அறிவானு? ஓட்டுரிமையின் அருமை தெரியாத மக்கள் கையில் ஓட்டுரிமை இருக்கிறது. குழந்தையின் கையில் துப்பாக்கி இருப்பது போன்று இது ஆபத்தான நிலைமை. ஓட்டுக்கு நிற்கிறவனை யோசித்து நல்லவனுக நிற்கவைக்கிற நிலைமையும் இல்லை. கயவர்கள் பெரும் குழப்பம், கலகம் போன்றவைகளை அரசியலில் புகுத்தி மாசுபடுத்திவிட்டார்கள். பதவிக்கு நிற்பவனுக்குத் தகுதி நிர்ணயம் இல்லை. அவனைப் பொறுக்கி எடுக்கிற ஆட்களுக்கும் தகுதி நிர்ணயம் இல்லை. ஆண்டவனே, என்றைக்கு எப்படி நல்ல அரசாங்கம் அருளப்போகிருய்? உன் திருவடிகளை வணங்கி உன் அருளுக்குப் பிரார்த்தித்து ஒரு கோரிக்கையை மட்டும் வரமாக அருளப் பிரார்த்திக்கிறேம். நல்ல இந்திய மாந்தர் அனைவரின் பிரார்த்தனை இது: "பாற்கடலில் பள்ளி கொண்ட பெருமானே! எங்கள் மக்களுக்கு நல்ல அறிவைக்கொடு. நல்ல பண்பாட்டில், நல்ல லக்ஷியத்தில் ஈடுபாட்டைக்கொடு. வெளி அலங்காரங்களில், பகட்டில், புஷ்பாலங்கார மான வாக்குகளில் மயங்காத மனம் கொடு. பிற தேசங்களின், பிறமதங்களின் தீய தன்மைகளை, வெறிச் செயல்களை, வஞ்சவலையை அறிந்துகொள்ளவும், உணரவும், அறிவும், விழிப்புணர்வும் தருவாய் பணம் ஒன்றிலேயே உழலும் மனதை மாற்றி அமைப்பாயாக.எதிரி

களைத் துடைத்துத் தள்ளும் வல்லமை தருவாயாக. இந்தப்புண்ணிய தேசம், கர்மபூமி, எங்கள் மாத்ரு பூமி பழைய சோபையுடன் மிளிர அருள்வாய். எளிய வாழ்வும் உயர்ந்த லக்ஷியமும் எங்கள்கொள்கையாக ஆகட்டும். எங்கள் லோக ஹித யாகத்தை அருளுடன் நிறைவேற்றி வைப்பாயாக. எங்கள் யாகத்தின் யஜமானர் ஆண்டவன் நீரே, நீரே."

குடிசை வாழ் மக்கள் வாழ்வு

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் தக்ஷிணேசுவரத்தில் சில சமயம் தீண்டத் தகாதவர் என்று ஒதுக்கப்பட்டிருந்த சேரி வாழ் மக்கள் குடியிருந்த பகுதிக்குச் செல்லுவார். அப்பொழுது யாருக்கும் தெரியாது இரவோடு இரவாகச் சேரியைத் தன் தலை முடியால் கூட்டிச் சுத்தம் பண்ணுவாராம். ஏன் அவர் இரவோடு இரவாகப் பிறருக்குத் தெரியாமல் அங்குப் போகவேண்டும்? அக்காலத்தில் இருந்த சமுதாயக்கட்டுப்பாடு அவ்விதமிருந்தது. உயர் குலத்தவர் தங்கள் பகுதிக்கு வருவதைச் சேரிவாழ் மக்களே ஏற்கத் தயங்கினர். அத்தகைய அறியாமையில் அவர்கள் மூழ்கியிருந்த காலத்திலும் இராமகிருஷ்ணர் அப்பாமர மக்களைத் தெய்வத்தின் குழந்தைகளாகக் கருதி "தாயே! இவர்களும் உன் குழந்தைகள் தாமே? இவர்கள் முன்னேற வேண்டாமா?" என்று பிரார்த்தனை செய்தார். தீண்டாமையை அகற்றவும், மக்களிடையே உயர்வு தாழ்வு அகலவும் அத்தகைய தொண்டினை ஆத்ம சாதனமாகச் செய்து வந்தார்.

ஆனல் இடைக்காலத்தில் சேவை என்கிற போர்வையிலே சேரி வாழ் மக்களிடத்திலும், பாமர மக்கள் வாழும் பகுதிகளிலும் ஹிந்து மத தெய்வங்களை இழிவு படுத்திப் பேசியும், தங்களுடைய மதத்தில் சேர்ந்தால் தான் ஜன்ம சாபல்யம் கிடைக்கும் என்று பொய்ப் பிரசாரம் செய்தும் தங்கள் மதத்தின் எண்ணிக்கையைப் பெருக்கும் செயலும் ஆங்காங்கு நிகழ்ந்து கொண்டு இருக்கின்றது.

இதற்கிடையில் சின்னபின்னமாகச் சிதறிக் கிடக்கும் ஹிந்துக்களை ஒற்றுமைப்படுத்தியும் தங்கள் அகம், புறம் ஆகியவைகளைத் தூய்மைப் படுத்தியும் அவர்கள் எவ்வாறு வாழ வேண்டும் என வழிகாட்டியும் வருகின்றன ஒரு சில ஹிந்து இயக்கங்கள். அந்த இயக்கங்களைச் சேர்ந்த அன்பர்கள் சிலருடன் சென்னையில் உள்ள சேரி வாழ் மக்களைச் சந்திக்கத் திட்டமிட்டோம்.

சென்ற *26-10-84* வெள்ளிக்கிழமை மாலை மைலாப்பூர் அருகே உள்ள மீனவர் குடியிருப்பான நாச்சிக்குப்பம் என்ற பகுதிக்குச் சென்றோம். அவர்கள் இருக்கும் பகுதியில் அம்மனுக்கு ஒரு கோயிலும் கட்டியுள்ளனர். கோயில் வழிபாட்டை முடித்து மீனவர்கள் வாழுகிற பகுதிக்கு வந்தோம். விபூதி, குங்குமப் பிரசாதம் வந்த அத்தனை பேருக்கும் தரப் பட்டது.

27—10—84 சனிக்கிழமையன்று மாலை 4-45 மணிக்கு ஏற்கெனவே அறிவித்தபடி அண்ணாநகர் குப்பம், திருமங்கலம் பகுதிக்கு அந்தப் பகுதி அன்பர்கள் புடைசூழ நாமஜபம் சொல்லிக்கொண்டே சென்றோம் அங்கு வசிப்பவர்களுக்குச் சிறுகக் கட்டிப் பெருக வாழ் என்ற கோட்பாட்டுக்கு ஒப்ப, வாழ்வது குடிசையாக இருந்தாலும் மனது கோபுரம் போன்று உயர்ந்து இருந்தது. அவர்கள் வாழும் பகுதியில் நீர் தெளித்துக் கோலமிட்டு, விளக்கேற்றி மஞ்சள் குங்குமத்தால் பாதபூஜை பண்ணியது அவர்கள் உள்ளத்தில் ஊறியிருந்த உண்மையான பக்தியைக் காட்டியது. பக்தி வழிபாடு என்றாலே வயதானவர்களைத் தான் காண முடியும் என்ற நிலை மாறிச் சென்னை அருகே உள்ள சேரிகளில் அனைத்து இடங்களிலும் இளைஞர்கள் துடிப்புடன் நாமஜபம் சொல்லிக்கொண்டு வீடு நடைபோட்டுச் சென்றது தற்கால இளைஞர்கள் ஆத்மீக வழியில் பிரவேசிக்க ஆரம்பித்து விட்டனர் என்பதைக் காட்டித் தருவதாக இருந்தது.

28—10—84 அன்று காலை திருவொற்றியூர் போகும் வழியில் கொருக்குப்பேட்டை சென்றோம். அப்பகுதியிலிருந்த இளைஞர்கள், முதியவர்கள், சிறுவர்கள் அனைவரும் ஒன்று கூடினர். நாதஸ்வர இசையை எழுப்பி வழி நெடுக அத்துணைபேரும் நாமாவளி சொன்னர்கள். விபூதி, குங்குமம், ரட்சை, தெய்வப்படம் ஆகியவைகளை ஒவ்வொரு வீட்டிலும் வழங்கினோம். எனவே அப்பகுதி மக்கள் காட்டிய பக்தி சிரத்தை இவ்வளவு அவ்வளவு அன்று.

அன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமையானதால் எல்லாரும் வழிபாட்டில் கலந்து கொண்டனர். முருகன் கோயிலில் நிகழ்த்திய சொற்பொழிவையும் உன்னிப்பாகக் கேட்டுப் பயன் பெற்றனர். சில இடங்களில் குடிசையைச் சுற்றிச் சாக்கடை நீர் தேங்கி நாற்றமடித்தது. அதைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என அவர்களுக்குப் புகட்டப்பட்டது. அங்கே காலை முதல் பிற்பகல் வரை அவர்கள் நிகழ்த்திய பஜனை பக்தியுணர்வை ஊட்டியது.

29–10–84 திங்கட்கிழமை சென்னை நேருஜி நகரில் உள்ள விவேகானந்த வித்யாலயாவில் எல்லா மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அறபோதனை செய்யப்பட்டது. மாணவர்கள் தம் இளம்பிராயத்தில் எப்படி வாழவேண்டும் என்பதும், அதற்குச் சான்றாக விவேகானந்தரின் இளம் பருவ நிகழ்ச்சிகளும் சொல்லப்பட்டன. தெய்வபக்தி, தேசபக்தி ஆகியவற்றின் அவசியத்தைப்பற்றி எடுத்துச் சொல்லப்பட்டது. அன்றைய தினம் பிற்பகலில் பாரதமாதா வீரசாவர்க்கர் நேதாஜி உயர்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கல்வியின் நோக்கம்பற்றி எடுத்துச் சொல்லப்பட்டது. பிறகு அருகில் உள்ள சேரியில் அலங்காரத் தோரணம் கட்டித் தெருவெங்கும் நீர் தெளித்துக் கோலமிட்டு எங்களை வரவேற்றனர். அந்தப் பகுதி மக்கள் இரவு வெகுநேரம் இருந்து அனைத்து வழிபாடுகளிலும் கலந்துகொண்டனர்.

30—10—84 செவ்வாய்க்கிழமை காலை 5-45 மணிக்குப் புறப்பட்டு 10-30 மணிவரை பெரம்பூர் பகுதியில் வியாசர்பாடி, அருந்ததியர் காலனி முதலிய இடங்களைச் சுற்றி வந்தோம்.

அவர்கள் நாள்தோறும் உண்டியலில்போடும் சிறு தொகைகளைச் சேர்த்து ஆண்டுக்கு ஒரு தடவை சென்னையிலிருந்து திருப்பதிக்குச் சுவாமி தரிசனம் செய்யப் பாதயாத்திரை சென்று வருகின்றனர். அவர்கள் காலணி தைக்கும் தொழில் செய்து வருகின்றனர். அவர்கள் கொண்டிருந்த பக்தி போற்றத்தகுந்ததாக இருந்தது. ''ஆ உரித்துத் தின்னும் புலையரேனும் கங்கை வார்சடைக் கடவுளுக்கு அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே'' என்று அப்பர் சுவாமிகள் பாடியதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பிறப்பை முன்னிட்டு, தொழிலை முன்னிட்டு ஒருவனை உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவன் என்று கூறுவது பொருந்தாது. பண்பாட்டை வைத்துதான் ஒருவனை மேலோன் அல்லது கீழோன் எனக் கூறவேண்டும்.

அதன் பிறகு பதினோரு மணிக்கு மற்றொரு விவேகானந்த பப்ளிக் ஸ்கூலில் மாணவ மாணவிகளுக்கு அறபோதனை நிகழ்ந்தது. மாணவர்கள் பெறவேண்டிய நற்பண்புகள் பற்றி விளக்கம் தரப்பட்டது. அம்பத்தூரில் உள்ள ஏழை ஹரிஜன சேரிகளுக்கு நாங்கள் வருகை தரவேண்டும் என இறுதியாகவேண்டுகோள் விடுத்தனர். வழிநெடுக அந்தச் சேரியைச் சேர்ந்த மக்கள் சுத்தமாக ஆடையணிந்து வீதி அலங்காரம் செய்து கோயில்களில் விளக்கு ஏற்றி வரவேற்றனர். நாம ஜபத்தையும், பக்திப் பாடல்களையும் அப்பகுதி இளைஞர்கள் கணீரென்று பாடினார்கள்.

ஐந்து நாட்கள் ஹரிஜன மக்கள் முதல் எல்லா ஜாதியைச் சேர்ந்த மக்களும், ஏன் கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும் விபூதிப் பிரசாதம் ரட்சை வாங்கிச் சென்றனர். நம் நாட்டில் கிறிஸ்தவர், முஸ்லீம் என்று ஏன் வேறுபடுத்திக் கூறவேண்டும்? அவர்களும் நம் சகோதரர்கள் தாமே? நேற்று வரை நம் மதத்தில் பிறந்து வளர்ந்த ஹிந்துதானே சில சூழ்நிலையை முன்னிட்டுப் பலவந்தமாகக் கிறிஸ்தவனாகவோ முஸ்லீமாகவோ தாற்காலிகமாக மாறியுள்ளான்? பிறந்த வீட்டைப் பிரிந்து போனாலும் நம் எல்லார் ரத்தத்திலும் ஊறியுள்ள கலாசாரம் மாறுமா? பண்பு மாறுமா? ஒருநாளும் மாறாது. ஐந்து நாட்கள் சேரிவாழ் மக்களிடம் பழகியபோது முக்கியமாக ஒன்று தென்பட்டது. கடும் வெயிலைப் பொருள் படுத்தாது தங்கள் கைக்குழந்தைகளுடன் வந்து கலந்துகொண்டது அவர்களுடைய சிரத்தையைக் காட்டியது. ஆனால் யாரும் தங்கள் சொந்தப் பிரச்னைபற்றி ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை. இறைவனின் குழந்தைகளுக்குத் தொண்டு செய்யும் அடியார்கள் கூட்டம் யாண்டும் இருக்கும். இந்த அடியார்களுடன் மற்றவர்கள் சேர்ந்து அருட்பணிகளை நாட்டில் பெருக்குவார்களாக.

மேல்நாட்டவர்கள் விஜயம்

ஆன்மீகம் என்பது அனைவருக்கும் ஒன்றே. இது இந்தியருக்கு உரியது; இது ஆங்கிலேயர்க்கு உரியது என்றெல்லாம் அதில் கூறு போட இயலாது. புண்ணிய பூமியாகிய பாரதத்தில் காலங்காலமாக ஆன்றோர்கள் ஆன்மீகம் தழைக்கும்படி செய்தார்கள். பல நூற்றுண்டுகள் அரசியல் ரீதியாக இந்தியா அடிமைப்பட்டிருந்த காலத்திலும் இனம், மொழி முதலிய வேறுபாடுகளைக் கடந்து நம் நாட்டில் உதித்த அருளாளர்கள் அருட்செல்வத்தை அனைவருக்கும் வாரி வழங்கினார்கள். பகவத் நாமம், பகவத்கீதை, பாகவதம் இவை யெல்லாம் நமது தாய் நாடு உலகிற்கு வழங்கிய அருட்கொடைகளாகும். 'பாட்டன் காலத்துச் சொத்து' என்று வாயளவில் நாமும் இவற்றுக்கு உரிமை கொண்டாடி வருகிறோம். ஆனால் இவற்றின் அருமையைச்சரிவரப்புரிந்து கொண்டு, முழுமையாகப் பயன்படுத்திப் பிறவிப் பிணியைப் போக்கவேண்டும் என்ற பேரார்வம் புண்ணியசாலிகளான ஒரு சிலருக்கே வாய்க்கின்றது.

அருளே வடிவான சுவாமி விவேகானந்தர் நான்கு ஆண்டுகள் நம் நாட்டிலும் நான்கு ஆண்டுகள் அயல்நாடுகளிலும் திருவலம் வந்து தாம் உலகுக்கே உரியவர் என்பதை நிரூபித்தார். அரசியல் காரணங்களாலும், பொருளாதாரச் சீரழிவினாலும் உழன்று போய்க் கிடந்த நம் தேசத்து மக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஊட்டி, "வீறுகொண்டெழுந்து உற்சாகமாய் பணி புரியுங்கள். நன் முறையில் முயன்று முன்னேற்றம் காணும் ஒருவன் பிறவித்தளையிலிருந்தே விடுதலை பெற இயலுமானால், கேவலம் வறுமைத்தளை அவனை என்ன செய்துவிட இயலும்?" என்று உபதேசித்தார். அந்நியர்களுக்கோ "பொருளைப் பதுக்கிவைத்துப் போகங்களைப் பெருக்குவதால் உள்ளத்திலும் மனித உறவிலும் புன்மைகளே மலிந்து போகும். ஆண்டான், அடிமை என்ற பேதத்தை விடுத்து அனைவரும் ஒரே இறைவனின் ஆட்சியில் வாழும் அமரர்கள் என்று உணரச் செய்வோம்" என்று உபதேசித்தார். இந்தியா தான் ஆன்மீகத்தை அயல்நாடுகளில் பரப்ப வேண்டும் என்ற விழுமிய நோக்கத்துடனே அவர் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் வேதாந்த நிலையங்களை நிறுவினார். இன்றும் ஆன்மீகப் பணியின் தூய்மையைக் காப்பதில் அவை நிகரற்று விளங்கி வருகின்றன. பிற நாடுகளிடமிருந்து உலக வாழ்க்கைக்குத் தேவையான வசதிகளைப் பெற்று நம் நாட்டில் வறுமை, கல்வியறிவின்மை போன்ற கொடுரங்களை அறவே ஒழிக்க வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தினார். இவ்விதம் இந்தியாவும், மேற்றிசை நாடுகளும் ஒன்றையொன்று பயன்படுத்திக்கொண்டு சரிசமமாக முன்னேற்றம் காணவேண்டுமென்பதே அவர் கொண்டிருந்த லட்சியக் கனவாக இருந்தது. அவர் தம் அடிச்சுவடுகளைப் பின்பற்றி இன்றைக்கும் அறிவும், அன்பும் வாய்ந்த சாதுக்கள் பலர் அமெரிக்கா முதலிய அயல்நாடுகளுக்குச் சென்றும், அங்கே ஆச்ரமங்கள் நிறுவியும் வேதாந்தக் கருத்துக்கள், யோக சாதன முறைகள், கீதையின் தத்துவம், இந்தியக் கலாச்சாரத்தின் ஆழமான அடிப்படைகள், இயற்கையோடு இணைந்த வாழ்க்கை நெறி ஆகியனவற்றை நாளும் பரப்பி வருகிறார்கள். அவர்களில் ஒருவரே சுவாமி சச்சிதானந்தர் அவர்கள்.

சுவாமி சச்சிதானந்தர் அவர்கள் திருப்பராய்த்துறை தபோவனம், திருவண்ணாமலை ரமணாஸ்ரமம், ரிஷிகேசம் சிவானந்த ஆஸ்ரமம் ஆகிய அருள் நிலையங்களில் ஆன்மீகப் பயிற்சி பெற்றவர். இலங்கையில் தொண்டாற்றிக் கொண்டிருந்தபோது ஆன்மீக நண்பர்கள் அவரை அமெரிக்கா அழைத்துச் சென்றனர். மத உணர்வும், அருள் நாகமும் இன்னதென்றே அறியாத நிலையில் வாழும் அமெரிக்கர்கள் சகல வசதிகளோடும் நிறைவான வாழ்க்கை வாழ்ந்த போதிலும் மன அமைதியை இழந்து தவிக்கின்றார்கள். அவர்கள் பொருளும், போகமும் போகும் வழிக்கு உதவாது என்பதை இன்று உணர்ந்து திருந்தி வருகின்றார்கள். ஆன்மீகத்தில் அறிவையும், அனுபவத்தையும் வளர்த்துக்கொள்ளவேண்டும் என்ற ஆர்வத்தில் அவர்கள் இந்திய நாட்டுத் திருத்தலங்களைக் காண ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் நம் நாட்டுக்கு வருகை தருகின்றார்கள். சச்சிதானந்த சுவாமிகள் அத்தகைய அந்நிய நாட்டு

தம் சிஷ்யர்கள் நாற்பது பேர்களை தபோவனத்துக்கு அழைத்து வந்திருந்தார். அவர்கள் கனடா, ஜப்பான், ஆஸ்திரேலியா, ஜெர்மனி, ஐக்கிய அமெரிக்கா என்ற பல நாடுகளைச் சேர்ந்தவர்கள். யோகசாதனமும், ஸ்ரீ ருத்ரம் போன்ற உயர் நூல்களும் பயில்பவர்கள். தொண்டு புரிந்து தூயவன் திருவடி சேரவேண்டும் என்ற உயரிய குறிக்கோளை உடையவர்கள். வள்ளி, முருகன்போன்ற இந்தியப் பெயர்களை ஏற்று, இந்திய முறைப்படி சாத்வீகமான உணவும், எளிமையான நடை உடை, பாவனைகளும் கொண்டவர்கள். கன்று தாயை நாடிச் செல்வது போல இந்திய நாட்டின் திருத்தலங்களைத் தரிசிக்க வந்தார்கள். அவர்கள் விவேகானந்த வித்தியாவனக் குருகுலத்துக்கு வருகை தந்து மாணவர்கள் அறிவுத் தெளிவு, உடல் பலம், ஆன்மீக நாட்டம் ஆகியவற்றில் பெற்றுவரும் பயிற்சிகளையும், அவற்றுக்கான வசதிகளையும் இங்கே நேரில் பார்த்தறிந்து உள்ளம் பூரித்தார்கள். மாணவர்கள் சம்ஸ்கிருதம், ஆங்கிலம் ஆகியவற்றில் ஆன்மீகக் கருத்துக்களை விளக்கும் நாடகங்களையும், கரகாட்டம் போன்ற கலைநிகழ்ச்சிகளையும் நடத்திக் காட்டி அவர்களை மகிழ்வித்தார்கள். மாணவர்களின் நீச்சல் திறமையைப் பார்த்து மிகவும் பாராட்டினார்கள். பின்னர் சச்சிதானந்த சுவாமிஜி "தொழிலில் உயர்வு தாழ்வு என்ற பேதமில்லை. அறிவிலும், அன்பிலும் சிறந்த ஆன்றோர்களின் துணையுடன் வாழ்வின் எல்லா நிலைகளிலும் முன்னேற முயலவேண்டும்" என்று அறவுரை வழங்கினர். அவரது சீடர்கள் கீதை உபநிடதங்கள் ஆகியவற்றின் சாரமான சுலோகங்களையும், "கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே" என்ற திருவருட்பாவினையும் அழுத்தந்திருத்தமான உச்சரிப்புடன் ஒன்றாகச் சேர்ந்து பண்ணோடு பாடினார்கள். பின்னர் அனைவரும் தபோவனத்தை நிறுவிய அருளாளரின் திரு முன்னிலைக்கு வந்து அடிபணிந்து நின்றார்கள். பூசனையும், உணவும் முடிந்த பின்பு ஸத் ஸம்பாஷணையில் நுணுக்கமான பிரச்னைகளை எழுப்பித் தங்கள் அருள் தாகமும், அறிவுத்தாகமும் ஒருங்கே தீர்க்கப்பெற்றும் உள்ள நிறைவுடனே பிரியாவிடைபெற்றுச் சென்றார்கள். இத்தகைய அன்பர் திருக்கூட்டங்கள் உலகெங்கிலும் பெருகி, சச்சரவுகளும், சமயப் பூசல்களும் நீங்கி சகோதரத்துவமும், சன்மார்க்க ஆன்மநேய ஒருமைப்பாடும் எங்கும் துலங்கவேண்டும். மனிதகுலம் மாண்புறுவதற்கு இது ஒன்றே சிறந்ததும், நிரந்தரமானதுமான வழியாகும்.

ஆர். எஸ். எஸ். தொண்டர்கள் தேசிய புனர் நிர்மாணத்திற்காகப் பல தொண்டு நிறுவனங்கள் மூலம் அரும்பணியாற்றி வருகின்றனர்.

மலைவாசி, வனவாசி நலன் காக்கத்தனி முயற்சி; கல்வி, மருத்துவம் போன்ற துறைகளில் பல அமைப்புகள்; சென்னை, பம்பாய் போன்ற நாட்டின் பிரதான நகரங்களில் தொடர்ந்து நடத்தப்படும் இரத்த தான இயக்கம்; யோக சிகிச்சை போன்ற சமூகப்பணிகள். ஆர். எஸ். எஸ். மேற் கூறிய பணிகளை ஆங்காங்கு செய்து வருகின்றது.

செய்திகள்

நிகழ்பவை:

டிசம்பர் மாதம் 25ஆம் தேதி செவ்வாய்க்கிழமையன்று ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுலப் பழைய மாணவர் சங்கம் தபோவனத்தில் கூடும். அன்று கிறிஸ்து ஜயந்தியை முன்னிட்டு இரவு 6-30 மணியிலிருந்து 7-30 மணிவரையில் ஸ்ரீவிவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்களும் பழைய மாணவர்களும் ஐக்கியவணக்கம் செய்வார்கள்.

3—1—85 வியாழக்கிழமையன்று வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு ஸ்ரீவிவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் உபவாசம் இருந்து இருபத்து நான்கு மணிநேரம் அகண்ட நாமபஜனையும், ஸ்ரீமத் பகவத் கீதை முழுவதும் ஒருமுறை பாராயணமும் செய்வார்கள்.

8—1—85 செவ்வாய்க்கிழமையன்று மாலை 4 மணிக்கு மேல் ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் பொங்கல் விடுமுறைக்காக அவரவர்கள் ஊருக்குப் புறப்படுவார்கள்.